# முதல் முதலாகப் பார்த்த போது



ரமணிசந்திரன்

# முதல் முதலாகப் பார்த்த போது

ரமணிசந்திரன்

# அத்தியாயம் - 1

"பணத் திமிரைக் காட்டுகிறாயாடீ? இப்படித் தனியே என்னிடம் வந்து நிற்க. உனக்கு வெட்கமாயில்லை? அதெங்கே? வெட்கமாவது? மானமாவது? நீங்கள் எல்லோருமே. ஒரே ரகம், கூடைச் செங்கல்லும் பிடாரிகள்தான், பணம் படைத்த பிசாசுக் கூட்டம்! ஓடு, எல்லாத்தையும் எடுத்துக்கொண்டு போ, நிற்காதே! போ! என்ன முழிக்கிறாய்? உடனே போகாவிட்டால் ...உன்னை ....."

என்ன கடுமையான குரல் சொல்! நினைவறிந்ததில் இருந்து. அவள் கேட்டறியாத கொடுமையான பேச்சு!

பேச்சுடன் கூடவே. அவனது கை விரல்கள் முஷ்டியாக இறுகுவதைப் பார்த்த சுரபிக்கு. அவன். தன்னை அடித்தே விடுவானோ என்கிற பயமே வந்துவிட்டது,

அவ்வளவுதான், அதற்கு மேல். அவள். அங்கே ஏன் நிற்கப் போகிறாள்?

அவள் புறமாக. அவன் வீசி எறிந்த மருந்துப் பொருட்களை அள்ளிக்கொண்டு. விழுந்தடித்து. அவர்களது குடும்பம் தங்கியிருந்த அறைக்கு ஒரே ஓட்டமாக ஓடிச் சென்றுவிட்டாள்.

ஓடி வந்து மூச்சு வாங்கிக்கொண்டு நின்றபோதுதான். நல்லவேளையாக. அம்மா. அப்பா. அண்ணன் யாருமே அங்கே இல்லை என்பதை ஓர் ஆறுதலோடு உணர்ந்தாள். அவள்,

இல்லாவிட்டால். என்ன. என்ன நடந்தது. ஏன் ஓடி வந்தாய் என்று அவர்களது பல கேள்விகளுக்கு. அவள் பதில் சொல்ல நேர்ந்திருக்கும்! கெட்டதிலும். ஏதோ நல்லகாலம்! அந்த ஒரு சங்கடத்திலிருந்து தப்பித்தாள்!

அன்பும் கரிசனமுமாகக் கேட்பதுதான்!

ஆனால். அந்தக் கதிரவனின் இந்தக் கோபம் பற்றி. அவளுக்கே ஏதாவது புரிந்தால்தானே. மற்றவர்களுக்குச் சொல்வதற்கு?

ஒன்றுமே இல்லாததற்கு .....சொல்லப் போனால். அவனுக்கு உதவி பண்ணத்தான். அவள் சென்றது, ஆனால். அதில். அவன் இவ்வளவு கோபப்பட என்ன இருக்கிறது?

அவனுக்கு ஒரு மோசமான காயம் பட்டிருந்தது, துருப்பிடித்த இரும்புத் தகடு கிழித்த காயம், அதற்கான மருந்துகளை எடுத்துச் சென்றாள், அவ்வளவே!

அடுத்த பிழை. கட்டாந் தரையில் படுத்து. அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தவனின் கையில் பட்டிருந்த காயத்தில் மருந்திட்டதுதான்! ஆனால். அது எப்படித் தப்பாகும்?

அப்போதும்கூட. அவனைத் தொட்டு மருந்து போட. அவள் தயங்கத்தான் செய்தாள், ஆனால். அப்போது பார்த்து. அவனது காயத்தில் ஓர் ஈ வந்து உட்காரவே. இது எவ்வளவு பெரிய ஆபத்து என்று. அவள் மனம் கலங்கிவிட்டது,

ஆனால். அவள் மென்மையாகவே மருந்தைப் பூசினாலும். விழித்துவிட்டானே! தூக்கம் கலைந்த கோபத்தில் கத்தினானோ? ஆனால். மருந்தைப் பார்த்த பிறகேனும். அவள் வந்த நோக்கம் தெரிந்துதானே இருக்கும், அப்புறம் என்ன கோபம்?

ஒரு வேளை. சுரபியும். அவளுடைய ஒன்றுவிட்ட சகோதரிகளும் சேர்ந்து நின்று. அவனைப் பற்றிப் பேசி. அவனது கவனத்தைக் கலைக்காமல் இருந்திருந்தால். அவனுக்கு இந்தக் காயமே ஏற்பட்டிராது என்று எண்ணினானோ? அதனால்தான். எல்லோரையும் சேர்த்து ஒட்டு மொத்தமாகப் பெண்களே மகா மோசம் என்றானோ?

ஆனால். ஒரு சாதாரணமான கிண்டல் பேச்சைப் போய். யாரேனும் இப்படித் தப்பாக நினைப்பார்களா?

அப்படிக் குறை தேடுவதானால். விடுமுறையில் பத்து நாட்களைச் சேர்ந்து கழிப்பதற்காக. எல்லோருமாக. இங்கே வந்ததைத்தான். முதலில் சொல்ல வேண்டும்!

அதுவும். சும்மா வரவில்லை! பெரிய வாதப் பிரதிவாதங்களுக்குப் பிறகு. இங்கே வருவதாக. எல்லோருமாகச் சேர்ந்து எடுத்த முடிவு,

எல்லோரும் என்றால். மூன்று குடும்பங்கள்,

மூன்று குடும்பங்களிலுமே. நாமிருவர். நமக்கிருவராக. மொத்தத்தில் பன்னிரண்டு பேர், சின்னப் பிள்ளைகள் என்று அலட்சியப் படுத்தாமல். அவர்களது கருத்துக்கும் . எல்லாப் பெரியவர்களுமே மதிப்புக் கொடுப்பார்கள், பெருமளவு இந்த இடம் சின்னவர்களின் விருப்பப்படி வந்ததுதான்,

ஊர்ச் சொத்தில். தங்கள் தந்தையின் பாகத்தைப் பெரிய தந்தையிடம பணமாகப் பெற்றுக்கொண்ட லிங்கம் சகோதரர்கள். அந்தப் பணத்தைச் சம பங்காகப் பிரித்து. ஆளுக்கொரு தொழிலைச் செய்யத் தொடங்கினர்,

உழைப்பு. புத்தி கூர்மை இரண்டுடன் கடவுள் அருளும் இருந்ததால். மூன்று குடும்பங்களுமே நிலை இறங்காததோடு. இப்போது நல்ல

நிலையிலும் இருந்தன,

தனித்திரு சேர்ந்திரு என்பது போல. மூவரும் தனித் தனி தொழில்களை. அடுத்தவர் தலையீடின்றிச் செய்து வளர்ந்ததால். அவர்களது சகோதர பாசமும் தணியாமல். அப்படியே இருந்தது,

அதே போல. தன் கணவனின் உழைப்பில் அடுத்தவர் குளிர் காய்கிறார் என்று நினைக்கக் கூட வழியில்லாது போய்விட. வீட்டரசிகளும் ஒற்றுமையாகவே இருந்தனர், கூடவே. ஒருவரது குடும்ப வாழ்வில் அடுத்தவரின் தலையீடும் கிடையாது,

அதே சமயம் ஒட்டுறவே இல்லாமல் போய்விடக் கூடாது என்பதற்காக. அண்ணன் தம்பிகள் என்று மூவருடைய குடும்பங்களும். ஒவ்வொரு கோடை விடுமுறையிலும்.  ஒரு பத்து நாட்கள் சேர்ந்து எங்கேனும் போய் வருவார்கள்,

ஆண்டுதோறும் சென்றதில். முக்கியமான சுற்றுலாத் தலங்கள் எல்லாமே. பார்த்துப் பழசாகிப் போயின, பார்த்ததையே மறுபடியும் பார்க்க. அவர்களில் யாருக்கும் மனமில்லை! அத்தோடு. “நெளுநெளு” என்று கூட்டத்துக்குள் சுற்றவும் பிடிக்காமல் போயிற்று,

“கூட்டத்தைச் சாக்கு வைத்துக்கொண்டு. வேண்டுமென்றே மேலே வந்து இடிப்பான்கள்!” என்றாள் சுரபி எரிச்சல் குரலில்,

“வேண்டுமானால். நீ பார்ப்பதற்குச் சுமாராக நன்றாகத்தான் இருக்கிறாய் என்றே வைத்துக் கொள்வோம்ப்பா, ஒத்துக் கொள்கிறோம், சும்மா. அதை நிலைநாட்டச் சாக்குக் கிடைத்தது என்று. இல்லாத இடிராஜாவை எல்லாம் இங்கே இழுக்க  வேண்டாம்,” என்று. சுரபியுடைய அண்ணன் சுகந்தன் கூற. எல்லோருக்கும் சிரிப்பு வந்தது,

“சீ. போடா! நான் ஒன்றும் அதற்காகச் சொல்லவில்லை!” என்று கடுத்தபோதும். மற்றவர்களின் சிரிப்பில். சுரபியும் சேர்ந்துகொண்டாள்தான்,

ஆனால். அவளது பேச்சைப் பெரியப்பா. சித்தப்பா பெண்களும் ஆதரிக்க.”ஏய். ரொம்பவும் பிலிம் காட்டாதீர்கள்ப்பா, கிரிக்கெட் வீரன். சினிமா ஹீரோ படங்களை வைத்துக்கொண்டு. நீங்கள் ஜொள்ளு விடுவது. எங்களுக்கும் தெரியும்!” என்று பெரியவர் பையன் சசாங்கன். ஒட்டு மொத்தமாப் பெண்கள் காலை வார. ஒரு மினி போர்க்களம் ஒருவாகிற நிலையில் சின்னச் சித்தப்பா பூர்ணலிங்கம் குறுக்கிட்டுப் பேசினார்,

தமிழ்நாடு. ஆந்திர எல்லையில் இருந்த ஒரு உல்லாச விடுதி பற்றி. ஒரு

தொழில் முறை நண்பர் மூலமாக. அவருக்கு சமீபத்தில் தெரிய வந்திருந்தது,

அது பற்றி. அவர் சொல்லச் சொல்ல. எல்லோருக்குமே அதுவே பிடித்துப் போய்விட. அந்த ஆண்டு விடுமுறையின்போது. அங்கேயே செல்வதென்று முடிவாயிற்று,

மலையடிவாரத்தில் இருந்த ஒரு பெரிய பழையகால பங்களா. அது, முன்னே வெள்ளைக்கார அதிகாரிகள் தங்குவதற்காக. அவர்களிடம் சலுகைகள் பெற வேண்டி. அவர்களுக்கு ஏற்ற மாதிரியாக ஒரு ஜமீன்தார் கட்டி வைத்தாம்,

சொத்துத் தகராறில் பல்லாண்டுகளாகப் பூட்டிக் கிடந்தது. கோர்ட் விவகாரம். ஒரு வழியாகத் தீர்ந்ததும். உரிமை கிடைத்த வாரிசுகள். கெட்டிக்காரத்தனமாக. அதை ஓர் அருமையான. கௌரவமான உல்லாச விடுதியாக மாற்றி அமைத்திருந்தார்கள்,

வேலை இன்னமும் முழுதாக முடியவில்லை, என்றாலும். நீச்சல் குளம். வண்ண மலர்களுடன் பசுமை கொஞ்சும் செழிப்பான தோட்டம் எல்லாம் நன்றாகவே அமைத்து. தொழிலைத் தொடங்கிவிட்டிருந்தார்கள்,

அங்கிருந்து கொஞ்ச தூரம் போனால். அழகாக ஓர் அருவி வேறு! சுற்றிலும் பார்க்கப் பார்க்கத் தெவிட்டாததாய். மலை சார்ந்த. எழில் கொஞ்சும் இயற்கைக் காட்சிகள்,

அருவியில் குளிப்பதும். மலைப் பாறைகளில் ஏறி. இறங்குவதுமாகச் சின்னவர்களுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது, கிட்டத்தட்ட. மனிதனின் முன்னோடிகளாகவே மாறிப் போனார்கள் எனலாம், சொல்லப் போனால். பெரியவர்களும் அப்படித்தான், அவர்களும். அப்படி ஒன்றும் வயதானவர்கள் அல்லவே!

வேண்டியது சொன்னால். விடுதியிலேயே அதைச் சமைத்துத் தருவார்கள்,

இந்த அளவு  எந்த இடத்திலும் சந்தோஷமாக இருந்ததில்லை என்பது. ஏகோபித்த கருத்து,

பக்கத்திலேயே. பத்துக் கிலோ மீட்டர் தொலைவில். ஒரு சிறு நகரமும் இருந்தது, "ஷாப்பிங்" பண்ணப் பெரிய சூப்பர்மார்க்கெட். பொழுது போக்கத் திரை அரங்குகள் எல்லாமே அங்கே இருந்தன,

அங்கெல்லாம் போவதற்கு. விடுதியிலேயே கார்  வேன் வசதியும் செய்து கொடுத்தார்கள்,

ஆனால். மூன்று குடும்பங்களுமே காரிலேயே சென்றிருந்ததால். போக்குவரத்து எளிதாகவே இருந்தது,

கட்டிட வேலைகள் அனைத்தும் முடிந்து. விளம்பரமும் செய்துவிட்டால். கூட்டம் மொய்க்கத் தொடங்கிவிடும், ஆனால். அப்போதைக்கு. இவர்களும். இன்னும் சிலபேரும் மட்டுமே இருந்தனர்,

விடுதியின் கார். வேன் தவிர. ஆறு கார்கள். நின்றன,

விடுதியின் கணக்கு வழக்கு பார்க்க ஒரு பெரியவரும். அவருக்கு உதவியாக நாற்பதுகளில் காசி என்று ஒருவரும் அங்கேயே இருந்தனர்,

சாப்பாடு. சுத்தம் செய்வது. சலவை போன்ற அனைத்து உள் வேலைகளையும் லலிதா என்று ஒரு நடு வயதுப் பெண்மணி பொறுப்பேற்றுக் கவனித்துக் கொண்டாள், அவளுக்கு எழிலரசி என்று ஒரு மகள், தாய்க்கு உதவியாக அங்குமிங்கும் சுற்றிக்கொண்டு இருப்பாள்!

சமையலறை வேலைக்குச் சிலர்.

இவர்கள் எல்லோரையும் விட முக்கியமாக. முக்கியமானவனாக. அங்கே ஒருவன் இருந்தான், இளைஞன், ஆள் வாட்ட சாட்டமாக இருந்தான், நன்கு வளர்ந்திருந்தாலும். வயது அதிகமில்லை என்று. அவனது முகத் தோற்றம் தெரிவித்தது, ஆனால் வந்திருந்த இரண்டும் கெட்டான் வயதுப் பெண்களுக்கு அவன் ஹீரோவாகத் தெரிந்தான்,

அந்த விடுதிக்கு வரும் கார். வேன் போன்ற எல்லா வாகனங்களின் பராமரிப்பும். அவனது பொறுப்பு போலும், எந்நேரமும். ஏதாவது ஒரு காரைத் துடைத்துக் கொண்டேதான் அவன் இருப்பான், அப்படித் துடைக்காத நேரங்களில். தோட்டக்காரர்களோடு சேர்ந்து. வெட்டிக் கொத்திக்கொண்டு இருப்பான்,

எதையும் செய்யாமல். அவன் சோம்பிச் சும்மா இருப்பதைப் பார்ப்பது. அபூர்வம்!

அது மட்டுமல்ல,

அங்கிருந்த மற்ற எல்லோருமே. அங்கே வந்து தங்கியிருக்கும் அனைவரிடமுமே ரொம்பவும் பதவிசாகவும். பணிவாகவும். சற்று அதிகப்படியாக நல்லிணக்கத்தோடும் நடந்துகொண்டபோது. இவன் மட்டும் எப்போதும் யார் முகத்தையும் நிமிர்ந்து பார்ப்பது கூடக் கிடையாது,

நிமிர்ந்து பார்த்தால்தானே. நின்று பேசுவது? பேசும்போதுதானே.

பதவிசு. பணிவு. நல்லிணக்கம் ஏதேனும் இருப்பதும். இல்லாததும் தெரியும்? அவன் முழுதாக ஒதுங்கிப் போனான்,

ஆனால். பேசவே தெரியாதோ. வேற்று மொழிக்காரனோ என்றெல்லாம் எண்ண வழியின்றி. பொது வேலைகளைக் கவனிக்கும் லலிதாவிடம். அக்கா என்று அழைத்துப் பேசுவதை எல்லோருமே கேட்டிருந்தனர், அதே போல. அந்தப் பெண்மணியுடைய மகள் எழிலரசி."மாமா. மாமா என்று அவனிடம் சலுகை கொண்டாடுவதையும். சின்னப் பெண்கள் மூவருமே கவனித்திருந்தனர்,

அவளிடம் மட்டுமே அவன் சாதாரணமாகப் பேசுவதையும். சற்று உரிமையோடு தோளில் தட்டுவதையும் பார்க்கையில். இந்த மூவருக்கும் எரிச்சல் கூட வரும், எழிலரசியும். அவர்களை ஒத்த வயதுப் பெண்தானே? அவளிடம் பேசுகிறவன். அவர்களை ஏன். நிமிர்ந்து கூடப் பார்ப்பதில்லை?

பதினைந்து. பதினாறு வயதுப் பெண்களுக்கே உரிய துடிப்பும். குறுகுறுப்பும். மொத்தத்தில் இரண்டே ஆண்டு கால வித்தியாசத்துக்குள் பிறந்திருந்த மூன்று வீட்டுப் பெண்களுக்குமே இருந்தன,

எந்த விதமான கவலையும் இல்லாமல் வளர்ந்தவர்கள்,

விடுமுறை நாள் உல்லாசம். ஒத்த வயது உறவுகளைச் சந்தித்த சந்தோஷத்தில். கட்டவிழ்ந்த கன்றுகளைப் போல. உற்சாகத்துடன் ஆட்டம் போட்டார்கள்,

புதியவனான அந்த இளைஞனைப் பார்க்கையில். வயதுக் குறுகுறுப்பில் அவனைப் பற்றி. இஷ்டத்துக்குக் கதை விட்டார்கள்,

வீரன்.சூரன் என்று தங்களுக்குள் பெயர் வைத்தார்கள், சங்கேதமாகப் பேசிக் கொண்டார்கள், கிண்டலடித்தார்கள், சற்று உரக்கவேதான்,

ஆனால். அவன். அவர்களைத் திரும்பியும் பாராதது. மூவருக்குமே சற்று வருத்தம்தான்,

அந்தப் பெண் எழிலரசியைப் பிடித்து வைத்து. அவனைப் பற்றிக் கேள்விகள் கேட்டார்கள்,

சும்மாவே. ஒத்த வயதினரான இந்த மூவரின் ஆடை. அணிமணிகள். தலையலங்காரம் முதலியவற்றில். எழிலரசிக்கு ஒரு மயக்கம் இருந்தது, அதனால். அவளது வேலைகளை வேகமாக முடித்துக்கொண்டு. “இதென்னக்கா. அதென்னக்கா” என்று. அவர்கள் பின்னாலேயே. வால் பிடித்து அலைந்து கொண்டிருந்தவள்தான். அவளும்,

அவள் மேல் பரிதாபப்பட்டு. சுரபி. மூன்று பெண்களில். நடு சகோதரருடைய மகள். எழிலரசிக்கு அவ்வப்போது சில அலங்காரங்கள் செய்து விடுவாள், அதிலேயே எழிலரசி உச்சி குளிர்ந்து போவாள், “அக்கா. அக்கா” என்று அவள் பின்னாலேயே அலைவாள்,

மற்றவர்கள் ............. பெரியவர் மகள் சுரேகாவாகட்டும். எல்லோருக்கும் சின்னவர் மகள் இந்துமதியாகட்டும். எழிலைக் கண்டுகொள்வதே கிடையாது, அங்கே பணி புரியும் எத்தனையோ பேரில். அவளும் ஒருத்தி என்பதுதான்,

ஆனால். அந்த வீரசூர இளைஞனை அவள் மாமா என்று அழைத்துப் பேசுவதைக் கேட்ட பிறகு. அவர்களது அந்த அசட்டை மாறிப் போனது,

இப்போது. அவர்களாகவே அவளைக் கூப்பிட்டு உட்கார வைத்து. கூந்தலுக்கான அலங்கார “பான்ட்”. வளையல்.  க்ளிப் என்று. ஆளாளுக்கு. ஏதேனும் ஒன்றாகக் கொடுத்து விசாரிக்கவும். எழிலுக்குச் சொர்க்கத்துக்கே வந்துவிட்ட உணர்வு,

உற்சாக மிகுதியில். ஒன்று விட்ட சகோதரிகள் கேட்டதற்கும் மேலாகவே. விவரங்களைப் பொழிந்து தள்ளினாள்,

அவன் பெயர். படிப்பு. குடும்பப் பின்னணி ...சகலமும்,

அவனது பெயர். கதிரவன், அப்பா. அம்மா கிடையாது, எழிலரசியுடைய தாயார் லலிதாவுக்கு. எப்படியோ தம்பி முறை, சென்ற முறை ஊருக்குப் போன போதுதான் அவனை இங்கே கூட்டி வந்தார்கள், இங்கே. லலிதாவின் சிபாரிசில். கதிரவனுக்கு இந்த வேலை கிடைத்து. அதிலிருந்து. இந்த ஆறு மாதங்களாக. அவன் இங்கேயே இருக்கிறான், யாருடனும் சும்மா உட்கார்ந்து பேச மாட்டான், லேசில் சிரிக்க மாட்டான், எப்போதும் அவன் ஏதாவது வேலையை இழுத்துப் போட்டுச் செய்வதைப் பார்த்துவிட்டு. முதலாளியே. அவனது சம்பளத்தை நூறு ரூபாய் கூட்டினார், சம்பளப் பணத்தை எல்லாம் பத்திரமாக லலிதாவிடம் கொடுத்து சேமித்து வருகிறான்,

“அப்போது. பணம் கொடுத்தால் வாங்கிக் கொள்வானா? அப்புறம் நன்றாகப் பேசுவானா?” என்று கேட்டது. மூத்த பெரியப்பாவுடைய மகள். சுரேகா,

“அய்யோ. மாமா கிட்டே போய்ப் பணம் கிணத்தை நீட்டி விடாதீங்கக்கா, “நான் உழைத்து சம்பாதிக்கிறவன்! பணத் திமிரிலே எனக்குப் பிச்சையா போடுகிறே,. இதோ நான் உனக்குப் போடுகிறேன், வாங்கிக்க,” என்று திட்டித் தீர்த்துக் உங்க கையிலேயே திருப்பிக்

கொடுத்துவிடும், அதுக்கு என்னமோ கோபம்க்கா! மனிசங்களைப் பார்க்கவே புடிக்கலைன்னு சொல்லும்! அதிலேயும். பணக்கார மனிசங்களைப் பார்க்கிறதே பாவம் அப்படீன்னு சொல்லும்!" என்றாள் எழிலரசி,

அந்தப் பதினைந்து வயதிலும். இது பைத்தியக்காரத்தனமான கொள்கை என்று. சுரபிக்குத் தோன்றியது, பணக்காரர்கள் இல்லாவிட்டால். இந்த ரிசார்ட் நடப்பது எப்படி? இவனுக்குச் சம்பளமும். அதிலே உயர்வும் கொடுப்பது எப்படி?

குறையில்லாத மனிதர் இல்லை என்பார்கள், இவனுக்கு. இப்படி ஓர் அசட்டு எண்ணம் போலும்! ஆனால். அவனோடு பேச. மூவருக்குமே. ஆவலாகத்தான் இருந்தது,

சுரேகா வாய்விட்டே. அதைச் சொன்னாள்,"விடுமுறைக் கொண்டாட்டமாக. உல்லாசமாகக் குதித்தாடலாம் என்று வந்தால். இங்கேயும். போர்தான், இந்தக் கதிரவன்

பணக்காரர்களோடு பேச மாட்டானாமே! பாரேன். நாமெல்லோரும் எவ்வளவு அழகாக இருக்கிறோம்! அந்தப் பெண் எழில் என்று பெயரை வைத்துக்கொண்டு. நம்மை "ஆ" என்று வாயைப் பிளந்துகொண்டு பார்க்கிறது, இவனுக்குக் கண்ணே சரியாகத் தெரியவில்லை என்று நினைக்கிறேன்!" என்று எரிச்சல்பட்டாள் அவள்,

இத்தனைக்கும். அவளும். அந்தக் கதிரவனுடைய அக்கா மகள்தான், உறவுக்காரி அவள் வந்து வந்து பேசுகிறாளே. அவளை யாரும் கடித்தா தின்று விட்டார்கள். யோசிக்க வேண்டாம்?

நல்லபடியாக நடந்தால். திரும்பிப் போகிறபோது. அவனுக்கு நிறைய "டிப்ஸ்" கூடக் கிடைக்கக் கூடும்!

எல்லாம் யோசித்துப் பார்த்து. அவனும்தான் ஒரு தரம் திரும்பி. அவர்களைப் பார்க்கலாமே! அப்படி என்ன பெரீய வேலை செய்து கிழிக்கிறான், என்று. உள்ளூர மூன்று பெண்களுக்குமே எரிச்சல்!

ஆனால் கதிரவனோ. இந்தப் பெண்களின் குறுகுறுப்பு. எரிச்சல் பற்றி எதுவும் அறியாமல். திரும்பத் திரும்ப. பெயின்டையே தேய்த்து எடுத்து விடுவான் போல. கார்களைத் துடைப்பதும். தோட்டத்தைக் கொத்தித் திருத்துவதுமாகத் தலை நிமிராமல் உழைத்துக் கொண்டிருந்தான்,

அன்று பக்கத்து டவுனுக்கு "ஷாப்பிங்" போகலாம் என்று. எல்லோரும் திட்டமிட்டார்கள், "எல்லோரும்" என்ன? சின்னவர்கள் மட்டும்தான்,

காலையில் அருவியில் ஆடிய ஆட்டத்துக்குப் பிறகு. பெரியவர்கள்

யாருக்கும் வெளியே கிளம்பவே மனமில்லை, ஓய்வாக உட்கார்ந்து. சீட்டு விளையாடலாம் என்று. அவர்கள் திட்டம் போட்டிருந்தார்கள்,

அத்தோடு. பூர்ணலிங்கம் ஏற்கனவே பார்த்ததுதான், “ஷாப்பிங் மாலி”ல் இருந்த பொருட்கள். சின்னவர்களுக்குத்தான் ரொம்பப் பிடிக்கும் என்று அவர் கூற. பணத்தைக் கொடுத்துவிட்டுப் பெரியவர்கள் விடுதியிலேயே தங்கிவிட்டார்கள்,

காரை ஓட்டுவதற்கு. ரிசார்ட்டிலேயே. இத்தனை மணி நேரத்துக்கு என்று காரோட்டி ஏற்பாடு செய்திருந்தார்கள், அந்த டிரைவர் வருவதற்கு. இன்னும் சற்று நேரம் இருந்தது,

சுரபியுடைய அண்ணன் சுகந்தனுக்கும். பெரியவருடைய மகன் சசாங்கனுக்கும் காரை ஓட்ட ஆசைதான், ஆனால். யாருக்குமே பதினெட்டு வயது நிரம்பவில்லை என்பதால். “ஸ்டியரிங் வீலை”த் தொடவும் கூடாது என்று கண்டிப்பான கட்டளை,

டிரைவருக்காகக் காத்திருந்த நேரத்தில் பையன்கள் “ஃப்ரிஸ்பீ “ யைப் போட்டு விளையாடிக் கொண்டிருக்க. பெண்கள் வாதாம் மரத்தடியில் நின்று. கதிரவனைப் பார்த்து. ரசித்துக் கொண்டிருந்தனர்,

“அசப்பில் அந்த வெற்றிப் பட ஹீரோ தயான் மாதிரி இல்லை? அதனால்தான் இவனுக்குத் திமிர் வந்துவிட்டது போல!” என்றாள் சுரேகா,

“சே! தயானை விடக் கதிர் உயரம். ரேகாக்கா,” என்றாள் சின்னவள் இந்து,

உள்ளூர ஆமோதித்தபடி. அவன் திரும்பிப் பார்க்க வேண்டும் என்று தீவிரமாக நினைத்தாள் சுரபி,

மூன்று இளம் பெண்கள் .....எப்படியும் “டீன் ஏஜ்” பாதிக்கு வந்துவிட்டதால். சிறுமிகள் என்று சொல்ல முடியாதுதானே? பார்க்க அழகாகவும் இருப்பவர்கள், யாரானாலும். திரும்பிப் பார்க்கத் தோன்றும்தானே? சும்மாச் சும்மா வெறித்துப் பார்க்கிறான்கள் என்று அம்மா. அப்பா எரிச்சல்கூடப் படுவார்களே! இவனுக்கு மட்டும் ஏன் பார்க்கத் தோன்றவில்லை?

“துடைக்கிற வேகத்தில். அந்த டப்பாக் காரின் பெயின்டைச் சுத்தமாகச் சாப்பிட்டு விடுவான் போல, கார்க்காரர் வந்து கத்தப் போகிறார்,” என்றாள் அவள்,

தன்னைப் பற்றி அவர்கள் பேசுவதை. அவனது உள்ளுணர்வு உணர்ந்ததோ. என்னவோ. ஒரு வேகத்துடன் அவன் திரும்ப. அவன்

துடைத்துக் கொண்டிருந்த பழைய காரின் துருப்பிடித்துச் சிதிலமாகியிருந்த ஏதோ தகடு. அவனது கையில் கீறிக் கையிலிருந்து ரத்தம் கசிந்து பெருகலாயிற்று,

“ஐயோ” என்று பதறிப் போய் ஓடலானாள் சுரபி,

# அத்தியாயம் -2

கதிரவன் துடைத்துக் கொண்டிருந்தது. ஒரு ரொம்ப ரொம்பப் பழைய கார், ரிசார்ட்டில் தங்க வந்திருக்கும் இன்னொரு குடும்பத்தாருடையது, ஆட்களைப் பார்த்தால் வசதியானவர்களாகவே தோன்றவே. சும்மா ஒரு ராசிக்காக இந்தக் காரை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது. இந்தக் குடும்பங்களின் ஏகோபித்த முடிவு!

அந்த மகாப் பழைய காரின் துருப்பிடித்த தகடு!

அது கிழித்த காயம் என்றால். ஆபத்து அல்லவா? அந்தத் துரு கதிரவனின் ரத்தத்தில் கலந்ததானால்?

துருவேறிய ஆணி ஒன்று மிக லேசாகக் கீறியதற்காக. அவளுடைய தாயார். மகளை டாக்டரிடம் போய். ஊசியே போட வைத்தாளே! கதிரவனுக்கும். உடம்புக்கு ஆபத்துதானே?

ஏதாவது செய்ய வேண்டுமே. எப்படி என்று அவள் சஞ்சலப் படுகையில். காரில் எடுத்துப் போவதற்காக. இரண்டு பாட்டில் குடி நீரோடு. எழிலரசி அவர்களிடம் வந்து சேர்ந்தாள்,

கார்க் கதவைத் திறந்து. தண்ணீர் பாட்டில்களை உள்ளே வைத்துக் கொண்டிருந்தவளிடம் சுரபி ஓடினாள்,

“இதோ பார் எழில். உன் மாமாவுக்குக் கையில் இரும்புத் தகடு கீறியிருக்கிறது, உடனே மருந்து போட வேண்டும், துருப்பிடித்த தகடு என்பதால். ஊசியும் போட்டால்தான் நல்லது, அவனிடம் ..... அல்லது. உன் அம்மாவிடம் போய்ச் சொல்லுகிறாயா? சீக்கிரம் ப்ளீஸ்!” என்று. அவளிடம் கிட்டத் தட்டக் கெஞ்சினாள் அவள்,

அதற்குள் அங்கே மற்றவர்களோடு வந்த அவளுடைய தாயார். மகளை அதட்டினாள்,”கார் கிட்டே போனால். ஏறி உட்கார வேண்டியதுதானே? அங்கே வேறு. ஒருதரம் நின்று வாயடிக்க வேண்டுமா? போ, உள்ளே ஏறி உட்கார், சீக்கிரமாகப் போய்விட்டு. இருட்டுமுன் வந்து சேருங்கள்,” என்று அதட்டினாள்,

இதற்கு மேல். விலகிப் போய் மருந்து எதையும் எடுத்துவந்து கொடுக்க முடியாது, மற்ற சகோதர சகோதரிகளும் அருகில் வந்துவிடவே.”கட்டாயம் மருந்து போட வை,” என்று எழிலரசியிடம் அவசரமாக முணுமுணுத்துவிட்டு. சுரபி காரில் ஏறினாள்,

வழியெல்லாம். கதிரவனின் காயம் பற்றிக் கவலையாக இருந்தபோதும். ஒத்த வயதினரின் பேச்சிலும். சிரிப்பிலுமாக. அது மெல்ல மறந்து

போனது,

நகரத்து “ஷாப்பிங் மாலு”க்குப் போய்ப் பார்த்தால். அவர்களே அதிசயிக்கும் வண்ணம். ஆடை அணிமணிகளும். விளையாட்டுப் பொருட்களும். உண்ணும் பொருட்களும். அங்கே கொட்டிக் கிடந்தன,

விலையும் ஓரளவு மலிவாகத் தோன்றவும். எல்லோருமே பொருள் வாங்குவதில் ஈடுபாடு கொண்டனர்,

இரண்டு மணி நேரத்தில் காருக்கு வந்துவிட வேண்டும் என்று சொல்லிக்கொண்டு. அவரவருக்கு வேண்டியவற்றை அள்ளத் தொடங்கினர்,

திரும்பி வரும்போது. “மாலி”ல் வாங்கிய பொருட்கள் காரில் பாதி இடத்தை அடைத்தன, அவரவர் வாங்கிய பொருட்களைப் பற்றிச் சளசளத்தவாறு விடுதிக்குத் திரும்பினர்,

விடுதியைப் பார்த்த உடனேயே. கதிரவனின் கைக்காயம் சுரபிக்கு நினைவு வந்தது, வாங்கிய சாமான் பைகளை அறையில் போட்டுவிட்டு. எழிலரசியைத் தேடிப் போனாள்,

அவளும். அவளுடைய தாயாருமே சேர்ந்து வந்து கொண்டிருந்தார்கள்,

“உன் மாமா கைக் காயத்துக்கு மருந்து போட்டானா?” என்று சுரபி விசாரித்ததற்குப் பெரியவளிடம் இருந்து பதில் கிடைத்தது,

“எங்கேம்மா? அதுக்கெல்லாம் நம்மாலே செலவு பண்ண முடியாது நமக்கேத்த வைத்தியம் இதுதான்னு. ஈரத் துணியைக் கையிலே சுத்திக்கிட்டு வேலை செய்ததும்மா, பாவம்! தோட்டக்காரனுக்கு உதவியா. இவ்வளோ நேரம் புல் செதுக்கிட்டு. இப்பத்தான் சாப்பிடப் போச்சுது!” என்று சிறு வருத்தத்துடன் கூறினாள் அவள்,

கைக்கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்துவிட்டு.”இப்போதா? மணி ஐந்தாகிறதே!” என்றாள் சுரபி,

விடுதியில் சாப்பிட்டிருந்தபோதும். “ஷாப்பிங் மாலி”ல் இருந்த உணவு வகைகளைப் பார்த்ததும். எல்லோருமாக இரண்டாம் முறையாக ஒரு வெட்டு வெட்டியது நினைவு வர. சுரபிக்குக் கூசியது,

மேலே மாட்டியிருந்த கடிகாரத்தைப் பார்த்துவிட்டு.”ஆமாம்மா, அஞ்சுதான்,” என்றாள் அந்த லலிதாம்மா, தொடர்ந்து “உச்”சுக் கொட்டிவிட்டு.”எப்படி வாழ வேண்டிய பிள்ளை!” என்று வருத்தப்பட்டாள்,

சுரபி கேள்வியாய் நோக்கவும்.”கதிரைப் பார்த்தாலே தெரியலையா.

கண்ணு? அந்த உயரமும். எடுப்பும். நிறமும் .....” என்றவள் மணிச் சத்தம் கேட்கவும்.”ஏ எழிலு. இவங்க பேரிவங்க இருக்கிற ரூமிலேதான் மணியடிக்கிறாங்க, போய் என்னன்னு கேட்டுவா,” என்று மகளை அனுப்பிவிட்டுப் பழைய கதையைத் தொடர்ந்தாள்,

அவளுக்கு. யாரிடமாவது சொல்ல வேண்டும் என்ற துடிப்பு போலும்!

“இவன் அம்மாக்காரி ரொம் அழகும்மா, அதுக்காகப் பெரிய இடத்திலே. தானா வந்து பொண்ணெடுத்தாங்க, என்னமோ. திடீர்னு. வேண்டாமின்னு. கொஞ்சம் பணத்தைக் கொடுத்து. தாய் வீட்டுக்கு அனுப்பிட்டாங்க, அவங்களுக்குச் சரியாக. இவளுக்கு நடந்துக்கத் தெரியலையாம், கட்டுகிறபோது. அதையெல்லாம் பார்ப்பதுதானே? கொண்டுவந்து தள்ளிட்டாங்க! அண்ணன் பெண்டாட்டி தாசன், அண்ணிக்காரி மோசத்திலும் மோசம், பணத்தை அப்படியே அமுக்கிவிட்டாள், இவனோட தாய் இருக்க மட்டும் எப்படியோ பிள்ளையைப் படிக்க வைச்சா, அப்புறமா படிப்பை நிறுத்திட்டாங்க, மெக்கானிக் ஷெட்டிலே வேலைக்கு அனுப்பினாங்க, ஆள் நல்லா இருக்கிறானா? அதிலே மற்ற பசங்களுக்குப் பொறாமை, வேலை போகவும். மாமாகாரரு வீட்டை விட்டு விரட்டிட்டாரு, போன தரம் ஊருக்குப் போனப்போ. பாவம் புள்ளை. நடுத்தெருவிலே நின்னான், இவன் அம்மா. “அக்கா. அக்கா”ன்னு என்கிட்டே பிரியமா இருப்பா, அம்மாளைப் பார்த்து. இவனும் அக்கான்னுதான் கூப்பிடுவான், நமக்கும் புள்ளைதான்னு கூட்டியாந்தேன், எப்படியோ. ராஜா கணக்காய் இருக்க வேண்டிய பிள்ளை! ராஜாவேதான், ஆனால். பெத்தவனுக்குத்தான். பிள்ளை என்கிறதே இல்லையே! அவன் வேறே கட்டிக்கிட்டு நல்லாத்தான் இருக்கிறானாம்!”

கதிரவனின் கதையைக் கேட்ட பிறகு. குறுகுறுப்பு மாறி. சுரபியின் மனதில் பரிதாபம் பெருகியது,

தாய். தந்தை ...அன்பு காட்ட யாருமே இல்லாமல். வெறுப்பானசூழ்நிலையில் வளர்வது எவ்வளவு பாவம்!

பிறந்த நாட்களின்போது. அனாதை இல்லத்துக்குப் போய் உணவு கொடுக்கும் போதே. அவளுக்கு மனம் கனக்கும், ஆனால் அங்கேகூட. இந்தக் கசப்பும் வெறுப்பும் இராதே!

இவன் ரொம்பவுமே பாவம்,

அந்தப் பரிதாபமும் சேர்ந்துகொள்ள. காரிலிருந்து முதலுதவிப் பெட்டியை. சுரபி

எடுத்துவந்தாள், எழிலரசியைத் தேடிப் பிடித்து . கதிரவனின் காயத்துக்கு மருந்திடச் சொன்னால். அவள். கையிலிருந்த வென்னீர்ப் பாத்திரத்தைக் காட்டினாள்,

“உங்க பெரியம்மாதான் கொண்டு வரச் சொன்னாங்க, அங்கே உடனே கொண்டு போகாட்டி. அம்மா திட்டும், இதையெல்லாம். நீயே மாமாகிட்டே கொடுத்து விடேன், மாமா ஷெட்டிலேதான் இருக்கும்,” என்றுவிட்டுத் தன் வேலையைப் பார்க்கப் போனாள். அவள்,

இந்த மாதிரியாகத்தான். காயத்தைத் துடைப்பதற்கும். துடைத்த பின் காயத்தில் தடவுவதற்குமான மருந்துகளோடு. சுரபி. கதிரவனைத் தேடிப் போனாள்,

அதில் தப்பிருப்பதாகவும். அவளுக்குத் தோன்றவில்லை, தேவைப் பட்டவனுக்கு மருத்துவ உதவி செய்வதில் தப்பு ஏது?

ஷெட்டில் போய்ப் பார்த்தால். கதிரவன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்,

மாலை நேரத்தில் தூக்கமா என்று யோசிக்கும்போதே. முந்திய நாளிலிருந்து. அவன் புல் வெட்டுவதில் தோட்டக்காரனுக்கு உதவி செயதது. அவளுக்கு நினைவு வந்தது, அதை முடித்துவிட்டு. ஐந்து மணிக்குத்தான் சாப்பிட்டும் இருக்கிறான்,

பசியோடு உழைத்துவிட்டு உண்டது கண்ணை அசத்தியிருக்கும் என்று ஊகித்தவளுக்கு. அவனை எழுப்ப மனம் வரவில்லைதான், அதே சமயம் மருந்தைப் போடாமல் திரும்பிச் செல்லவும் பிடிக்கவில்லை, ஆனால். மெல்லக் கூப்பிட்டுப் பார்த்தால். அவன் அசையவே இல்லை,

ஊசி போடுவதுதான். அவள் கையில் இல்லை! மருந்தாவது. தடவ வேண்டாமா?

ஈரத்துணி கட்டியதாலோ என்னவோ. காயம் சுத்தமாகவே இருந்தது, க்ரீமைப் பிசுக்கி. அவன் விழித்து விடாமல். மெல்லத் தடவினாள், முடிக்கும்போதுதான் திடுமென விழித்தவன். அவளைப் பார்த்ததும். வெறி பிடித்தது போலக் கத்தத் தொடங்கிவிட்டான்,

பயந்து ஓடி வந்துவிட்ட சுரபி. தனிமை கிடைத்த போதெல்லாம் யோசித்தும். கதிரவனின் கத்தலின் காரணம் அவளுக்குப் புரியவே இல்லை,

சுரேகா. இந்து யாரிடமாவது சொல்லி. கலந்து ஆலோசிக்கலாமா என்று தீவிரமாக யோசித்துவிட்டு. அந்த எண்ணத்தை சுரபி கைவிட்டாள், அவர்களில் யாரிடம் சொன்னாலும். முதலில் அது அவர்களுடைய

தாயாருக்குப் போகும், பிறகு. குடும்ப முழுவதற்குமான பகிரங்க ரகசியம் ஆகிவிடும், அப்புறம். ஆளாளுக்கு. அவளுக்குப் புத்தி சொல்லக் கிளம்பி விடுவார்கள்,

அது மட்டுமல்ல, வீட்டுப் பெண்ணிடம் கத்துவதா என்று. கதிரவன் மேல் புகார் கொடுத்துவிட்டால்? அது. அவனை எந்த அளவுக்குப் பாதித்துவிடுமோ என்று. அது வேறு. சுரபிக்குக் கவலையாக இருக்கவே. அத்தனையையும். தனக்குள்ளேயே போட்டுப் புதைத்துவிட்டாள் அவள்,

இதையே யோசித்துக் கொண்டிருக்கக் கூடாது என்று எண்ணியவள். மனதை மாற்றுவதற்காக. அன்று வாங்கி வந்த பொருட்களை எடுத்துப் பார்க்கத் தொடங்கினாள்,

எல்லாவற்றையும் படுக்கை மேல் அவள் அடுக்கி வைத்துக் கொண்டிருந்தபோது."அக்கா. நானும் உள்ளே வந்து நீங்க வாங்கி வந்ததையெல்லாம் பார்க்கட்டுமா?" என்று எழிலரசியின் குரல் ஆசையாகக் கேட்டது,

"வாயேன்!" என்று சுரபி அனுமதி கொடுக்கவும் உள்ளே வந்து. அவள் கடை பரப்பியிருந்தவற்றைப் பார்த்த எழிலரசியின் கண்கள் அகல விரிந்தன,

அப்படி ஒன்றும் விலை உயர்ந்த பொருட்களை. சுரபி வாங்கவில்லை, எடுத்துப் போன பணத்தில். நிறைய மிச்சம் கூடக் கொண்டுவந்தாள், காஜல். ஐ ஷாடோ. ஃபவுண்டேஷன். கொஞ்சம் அணி மணிகள். சில சாதாரண. ஆனால் புது மாதிரி உடைகள், அவ்வளவே,

ஆனால். இவைகளையே எழிலரசி விழி தெறித்துவிடும் போலப் பார்ப்பதைக் காணவும். சுரபிக்குப் பரிதாபமாக இருந்தது, இன்னும் சுரேகா வாங்கியவற்றைப் பார்த்தால். இவளுக்கு மயக்கமே போட்டுவிடாதா?

அவளது வயதே ஆன பெண், ஒன்றிரண்டு கூடுதலாகக் கூட இருக்கலாம், இந்தச் சாதாரண அலங்காரப் பொருட்களைக் கூட. அவள் அறிந்ததே இல்லை என்றால். ரொம்பப் பாவமில்லை?

வந்த பெருமூச்சை. எழில் கஷ்டப்பட்டு அடக்குவதைப் பார்த்தவளுக்குப் பரிதாபம் மிகுதியாயிற்று,

ஒரு தரம். இவளும்தான். விருப்பம்போலச் செலவு செய்து மகிழ்ச்சி அடையட்டுமே!

எட்டியிருந்த கைப்பையைக் கை நீட்டி எடுத்துத் திறந்தவள். மிச்சம் கொணர்ந்த பணத்தை. உள்ளிருந்து எடுத்தாள்,

எழிலரசியிடம் நீட்டி.”இதில் ஐயாயிரம் ரூபாய் இருக்கிறது. எழில், வைத்துக்கொள், நாளைக்கு நாங்கள் கிளம்பிப் போன பிறகு. டவுன் கடைக்குப் போய். உனக்கு வேண்டியதை வாங்கிக்கொள்,” என்றாள்,

மீண்டும் ஆவலில் விழி தெறித்தபோதும். சட்டெனப் பணத்தை வாங்கிக்கொள்ள. எழிலரசி தயங்கினாள்,

“எம்மாம் பணம்க்கா! இதை வாங்கினால். அம்மா திட்டும்!” என்றாள் ஏக்கத்துடன்,

“இப்போது சொல்லாதே, நாளைக்கு நாங்கள் கிளம்பிப் போன பிறகு. இப்படிக் கொடுத்தேன் என்று சொல்லிவிட்டுக் கடைக்குப் போய். வேண்டியதை வாங்கு,” என்று சுரபி வழி சொல்லிக் கொடுத்த பிறகு. ஆவலும் தயக்கமுமாக. ஒருவாறு மற்றவள் பணத்தை வாங்கிக் கொண்டாள்,

“போய். உன் பெட்டிக்குள் பணத்தைப் பத்திரப்படுத்து,” என்று சொல்லி அனுப்பிய

சுரபிக்கு. ஏதோ பெரிய நல்லது செய்துவிட்ட உணர்வு!

தன் பொருட்களை ஒழுங்காக அடுக்கி வைத்துவிட்டுக் கீழே போய். மற்றவர்களோடு சேர்ந்து விளையாடலானாள்,

இதில். சுரபி கவனிக்க மறந்த முக்கியமான விஷயம் ஒன்று இருந்தது, அது. அவளுடைய தாயாரின் கணக்கிடும் தன்மை,

ஹோட்டல் தொழிலை. அவளுடைய தந்தை சத்யலிங்கம் வெற்றிகரமாக நடத்தினார் என்றால். தொழிலின் வரவு செலவுக் கணக்கு. அவருடைய மனைவி சுந்தரியின் விரல் நுனியில் இருந்தது,

அதே கணக்கிடும் திறனோடு மகள் வாங்கி வந்து. ஒழுங்காக அடுக்கி வைத்திருந்த பொருட்களை. ஒரு திருப்தியோடு பார்வையிட்டவள் விளையாடி முடித்து வந்த மகளிடம்.” “ஷாப்பிங்” போக மிச்சப்பணம். நீ இன்னும் தரவில்லையேம்மா?” என்று கேட்டாள்,

ஒரு கணம் திணறிப் போய்விட்டாள். சுரபி, ஆனால். உடனேயே சமாளித்து.”மிமிச்சம் ...மிச்சமா? அங்கே எல்லாம் செலவாகிவிட்டதேம்மா!” என்று அவள் சமாளிக்கும்போதே. அழைப்பு மணியை அழுத்தி அனுமதி கேட்டுக்கொண்டு. குடிதண்ணீர் “கேனை”த் தூக்கிக்கொண்டு. கதிரவன் உள்ளே வந்தான்,

காலியானதை மாற்றி மாட்டும்படி அவனிடம் சைகை செய்துவிட்டு.”வாய்ப்பே கிடையாது ,” என்றாள் அன்னை,”நீ

வாங்கியிருப்பது எல்லாம் சேர்த்தாலும். நாலு. நாலரைதான் வரும், நாலே முக்கால் என்றே வை, தீனி வகைகள் சேர்த்தாலும். ஐந்தாயிரம்தான் வரும், மீதி ஐந்தாயிரம் இருக்க வேண்டுமே! எங்கே?” என்று கேட்டாள் அவளுடைய அன்னை,

அம்மாவின் பணக்கீடு! அதை எப்படி. அவள் மறந்தாள்?

எப்போதுமே புன்னகை அறியாத கதிரவனின் உதடுகள் கோடாய் இறுகுவது வேறு கண்ணில் படவும். சுரபி தவித்துப் போனாள்,

இந்த அம்மா. இப்போதுதான் இதையெல்லாம் கேட்க வேண்டுமா?

இப்போது என்ன செய்வது என்று அவள் அவசரமாக யோசிக்குமுன்.”மீதி ஐந்தாயிரம், அறையில் வைத்துவிட்டு நீ விளையாடப் போனாயே. அப்போது ................. இங்கே யாராவதுதான் எடுத்திருக்க வேண்டும், நிர்வாகியிடம் சொல்லி. எல்லோரின் சாமான்களையும் சோதனை போட வேண்டும்!” என்றாள் சுந்தரி,

ஐயோ! சோதனை போட்டால். எழிலரசி மாட்டிக் கொள்வாளே!

இப்போது உண்மையைத் தாயிடம் சொல்லவும். அவளுக்குப் பயமாக இருந்தது,

அவளுக்கு எதற்குக் கொடுப்பது என்று. எழிலிடம் இருந்து பணத்தைப் பிடுங்கிவிட்டால்?

சந்தேகமும். கோபமுமாகப் பார்த்தபடி. கதிரவன் நின்றது வேறு. அவளது சிந்தனையைக் கெடுத்தது,

அவசரமாக யோசித்து.”ககடையிலிருந்து வரும்போதே. வேவேறே பணம் இல்லைம்மா!” என்று சமாளிக்க முயன்றாள் பெண்,

“அப்படியானால். எல்லாம் இரண்டு மடங்கு விலை வாங்கினார்களா? விலை குறைவு என்றல்லவா சுரேகா சொல்லிக் கொண்டிருந்தாள்! நாளைக்குக் கிளம்பிப் போகும்போது. அந்த “மாலி”ல் கேட்கவேண்டும், எதற்கும். இங்கே ஒரு தரம்  சோதனையும் போட்டு விடலாம், அதற்காகத் திரும்பி வர முடியாது. பார்!”என்று தாயார் சோதனையிடுவதிலேயே முனைப்பாக நின்றாள்,

கதிரவனின் முகத்தில் கடுப்பு ஏறிக்கொண்டே போயிற்று!

செய்வது அறியாமல் திணறித் திண்டாடிய சுரபிக்கு மின்னல் மின்னினாற்போல ஒரு யோசனை!

இன்றியமையாத தேவை என்றால் தவிர. தொடவே கூடாது என்று. அவளுடைய தந்தை. பிள்ளைகள் இருவரிடமும் “டெட் மணி” என்று.

இரண்டாயிரம் மூவாயிரம் என்று ஒரு தொகையைக் கொடுத்து. பர்சில் வைத்துக் கொள்ளச் சொல்லுவார், இரண்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு. செலவானது போக மிச்சத் தொகையை. அவரவர்களது பாங்க் கணக்கில் கட்டச் சொல்லுவார்,

பொதுவாக. அந்தப் பணம். சுரபிக்குச் செலவானதே கிடையாது, அப்படியே வங்கிக்குப் போவதுதான் வழக்கம்,

விடுமுறை நாளில் அதிகப்படியாக ஏதேனும் செலவுக்கு ஆகும் என்று. இரண்டு தடவைகளாக. சுரபி அந்தப் பணத்தை பாங்கில் போடாமல். கையோடு கொண்டு வந்திருந்தாள், இன்றையச் செலவுக்கும். தாயாரே கொடுத்தனுப்பியதால். அந்தப் பணத்தைத் தொடுமாறு நேரவே இல்லை! எனவே. அதிலும் ஐயாயிரம் ரூபாயே இருக்கும்,

இப்போது. அன்னைக்குத் தெரியாமல். அந்தப் பணத்தை எடுத்துக் கொடுத்து விட்டால். பிரச்சினை தீர்ந்தது!

“அம்மா. கொஞ்சம் பொறுங்கள், எதற்கும். இங்கே எங்கேயாவது வைத்தேனா என்று. நன்றாகத் தேடிப் பார்த்து விடுகிறேன்!” என்று. தாய்க்கு முதுகு காட்டி நின்றவாறு. மேஜை இழுப்பறையைத் திறப்பது போல நடித்தவாறு. கைப்பையின் உள் ஜிப்பை மெல்லத் திறந்து. அதிலிருந்து பணத்தை எடுத்தாள்,

“அடேடே! இதோ. இங்கே இருக்கிறதம்மா, வந்ததும் பணத்தை எடுத்துப் பத்திரமாக மேஜை இழுப்பறையில் வைத்தேனா? விளையாடப் போனதில் எப்படியோ அதை மறந்தே போனேன்!” என்று கோவையாக இயம்பியவாறு. பணத்தைத் தாயிடம் கொடுத்தாள்,

“நல்ல பெண்ணடி நீ! இதை நீ அடியோடு மறந்து. இங்கே சோதனை போட்டிருந்தால். எத்தனை பேருக்கு மனக் கஷ்டம்?” என்று சுந்தரி மகளைக் கடிந்தாலும். பிரச்சினையற்றுப் பணம் கிடைத்துவிட்ட திருப்தியில். அத்தோடு அதை விட்டுவிட்டாள்,

ஆனால். காலி “கேனை” எடுத்துச் சென்ற கதிரவன் அவளைப் பார்த்த பார்வையில். தீப்பொறி பறந்தது!

எதனால்?

பெற்றவளுக்குத் தெரியாமல் அவளுக்கு முதுகு காட்டி நின்று சுரபி பணத்தை எடுத்தபோதும். பக்கவாட்டில். தண்ணீர்க் கேனை மாற்றுவதுபோல நின்று பார்த்துக் கொண்டிருந்த கதிரவனுக்கு. அவள் செய்த சிறு ஏமாற்று வேலை தெரிந்துதான் இருக்கும்,

ஆனாலும். இதில் அவன் ஆத்திரப்பட என்ன இருக்கிறது?

சொல்லப் போனால். இந்தப் பணத்துக்காக. அவர்களது உடைமைகளைச் சோதனையிடும் அவமானத்திலிருந்து. அவர்கள் அனைவரையும் சுரபிதான் காப்பாற்றி இருக்கிறாள், அதற்காக நன்றி கூற வேண்டுமே தவிர. இப்படிக் கண்ணில் பொறி பறக்கக் கோபப்பட. அதில் என்ன இருக்கிறது?

அந்தப் பணம் போன இடம் தெரிந்திருந்தாலும். அதிலும். அவன் மகிழ்ச்சிதான் அடையவேண்டும்,

இந்த சமூக நிலை. மற்றும் நாகரீகக் கட்டுப்பாடுகள் இல்லை என்றால். அவளை அடித்து நொறுக்கி விடுவான் போல. அதென்ன பார்வை?

ஒருவேளை. யாருக்கும் நன்றி செலுத்த வேண்டிய நிலையில் இருப்பதே. இவனுக்குப் பிடிக்காதோ?

மருந்து போட்டதற்கும். இதே சீற்றம்தானே காட்டினான்?

காரணமே இல்லாமல் கோபமும் வெறுப்பும் கொள்ள. என்ன விசித்திரமான புத்தி. இது?  கடவுள் இவனைப் படைக்கும்போது. கோபத்தையும். வெறுப்பையும் மட்டும் குழைத்து உருவாக்கிவிட்டார் போல!

எப்படியானாலும். புரிந்துகொள்ள முடியாததை நினைத்து மனதைக் குழப்பிக் கொள்ளக் கூடாது என்று. சுரபி முடிவு செய்தாள்,

மறுநாளே அங்கிருந்து கிளம்பிவிட்டதால். முடிவு செய்ததின்படியே நடப்பதும். அவளுக்கு ஒன்றும் சிரமமாக இல்லை என்றே சொல்லலாம்,

இப்படியே சுமார் எட்டு ஆண்டுகள். கிட்டத்தட்டக் கதிரவனின் நினைவே இல்லாமல் கடந்தன,

எட்டாம் ஆண்டின் இறுதியில். சற்றும் எதிர்பாராத நிலையில். அவளது வாழ்வில். அவன் குறுக்கிட்டான்!

# அத்தியாயம் -3

இடைப்பட்ட இந்த எட்டு ஆண்டுகளில். சுரபி பள்ளி. கல்லூரிப் படிப்புகளோடு.

தொழில் நிர்வாகத்தில் எம்பிஏ வரை படித்து முடித்தாள்,

படித்த படிப்பை வீணாக்காமல். அவளுடைய அண்ணன் சுகந்தனைப் போலவே. அவர்களுடையஹோட்டல் தொழிலிலேயே. அவளும் சேர்ந்து பணி புரியலானாள்,

அதற்குள். அவளுடைய தந்தை சத்யலிங்கம் தொடங்கி நடத்திய "ஹோட்டல் அமுத"த்திற்குச் சென்னையில் பல கிளைகள் ஏற்பட்டிருந்தன, எல்லாமே. மிகவும் வெற்றிகரமாக நடந்துகொண்டும் இருந்தன,

இச்சகம் பேசுவோரை நம்பாமல். குடும்பமே நேரடியாகக் கவனித்து உழைத்ததே. அந்த வெற்றிக்கு ஒரு காரணமாக இருக்கலாம்,

சுவை. தரம் இரண்டிலும் சத்யலிங்கம். வெகு கவனமாக இருந்தார்,

சைனீஸ். செட்டிநாடு. மொகல் என்று. புதுப் புது அயிட்டங்களை. அததின் விற்பனைத் திறன் அறிந்து சுகந்தன் புகுத்தினான்,

விலைக் கணிப்புகள் தாயார் சுந்தரியுடையவை,

சுரபி படித்து முடித்ததும். வருமானக் கணக்குகளை. அவள் கவனித்தாள்,

இதற்கிடையே. சுரபி. சுகந்தனின் திருமணப் பேச்சுகளும் எழலாயின,

பெரியப்பா. சித்தப்பா வீடுகளில் வீட்டுக்கு ஒரு திருமணம் நடந்திருந்தது,

தங்கைக்கு அப்புறம் என்று சுகந்தன் அப்போதைக்குக் கழன்றுகொள்ள. சுரபியின் திருமணம். வீட்டில் முக்கிய விஷயமாகக் கருதப்பட்டு. அதற்கான முயற்சிகள் நடந்தன,

ஆனால். அவளுக்குப் பொருத்தம் என்று வீட்டினர் கருதிய யாரையுமே. சுரபிக்குப் பிடிக்காமல் போயிற்று!

பையனின் உயரம் பற்றி அவள் குறை சொன்னதை. எல்லோருமே ஒத்துக் கொண்டனர்,

ஆனால். மூக்கு இன்னும் கொஞ்சம் எடுப்பாக இருக்க வேண்டும் புருவம் சரியில்லை கண் சின்னதாக இருக்கிறது அப்படி. இப்படி என்று

அவள் நுணுக்கி நுணுக்கிப் பார்த்துக் குறை கூறி ஒதுக்கவும்தான். பெற்றோருக்கும். அண்ணனுக்கும் லேசாக மனம் குழம்பத் தொடங்கியது,

“ஏன் சுபி. நீ சொன்ன மாதிரி உருவ அமைப்போடு யாரையாவது நீ காதலிக்கிறாயா?” என்று சுகந்தன் தங்கையிடம் நேரடியாகவே கேட்டான்,

அவள் ஆச்சரியமாகப் பார்க்கவும். அண்ணனின் முகமே லேசாகச் சிவந்து போயிற்று,”அதில்லை. சுபிம்மா, நீ சொல்லுகிற காரணங்களைக் கேட்கும்போது. அது போல. எடுப்பான மூக்கும். அழகான புருவமும். பெரிய கண்ணும். உயரமுமாக யாரையோ மனதில் ஒத்திட்டுப் பார்த்துத் தட்டிக் கழிப்பது போல. ஓர் உணர்வு. எங்கள் மூவருக்கும் ஏற்பட்டிருக்கிறது, அப்படி ஏதாவது இருந்தால். நீ வெளிப்படையாகவே. அதைச் சொல்லலாமே! நாங்கள் மூவருமே. உனக்கு நல்லதை மட்டுமே நினைக்கிறவர்கள் என்று. உனக்குத் தெரியும்தானே?” என்று. தங்கையைத் தனியே பிடித்து வைத்துக் கேட்டான்,

அவன் சீரியசாகக் கேட்ட விதத்தை பார்க்கையில். சுரபிக்குச் சிரிப்புதான் வந்தது, ஆனால். அப்படிச் சிரித்தால். அண்ணனுக்கு மனதுக்குக் கஷ்டமாகி விடும் என்று அடக்கிக்கொண்டாள் அவள்,

“அண்ணா. நீ நினைக்கிற மாதிரியெல்லாம். எதுவுமில்லை, சும்மா. இப்படி யிப்படி இருந்தால் நன்றாக இருக்கும் என்று உள்ளூரத் தோன்றியதால் சொன்னேன், மற்றபடி எனக்குக் காதலுமில்லை,. கீதலுமில்லை, அப்படியே காதலித்தாலும். நான் பழகுகிறவர்கள் பற்றி. உங்கள் யாருக்கும் தெரியாமலா இருக்கும்? ஆனால் சொல்லு அண்ணா. ஓர் ஆளைப் பார்க்கும்போதே குறையிருப்பதாகத் தோன்றினால். அப்புறம் அவரை எப்படியண்ணா. மணந்துகொள்வது?” என்று அவள் கேட்கவும்.”அது சரிதான்,” என்று தலையாட்டிவிட்டுப் போனான் அண்ணன்,

நேரே பெற்றோரிடம் போய்.”இன்னும் சின்னப் பிள்ளையாகவே இருக்கிறாள், சும்மா ஏதோ உருவத்தைக் கற்பனை பண்ணிக்கொண்டு அதையே சொல்கிறாள் என்று தோன்றுகிறது, பார்த்துக் கொண்டே இருப்போம், அவளுக்கென்று பிறந்தவனைப் பார்த்தால். மறுக்கும் எண்ணமே இல்லாமல் தலையாட்டி விடுவாள் என்று நினைக்கிறேன், அதுவரை. சுரபியை விட்டுப் பிடிப்போம்,” என்று தன் கருத்தைத் தெரிவித்தான்,

திருமணப் பேச்சு சற்றே அடங்க. அன்றாட வாழ்வு வழக்கம்போல.

நீரோட்டமாகச் சென்றது,

ஒரு மாதம் சென்றபின். அந்த மாதத்திய வருமானக் கணக்கை முந்திய மாதத்க் கணக்கோடு ஒத்திட்டுப் பார்த்த சுரபி திகைத்துப் போனாள்,

படபப்புடன். அவசரமாகப் பழைய கணக்குகளைப் புரட்டிப் பார்த்தபோது. மூன்றாவது மாதமாக வருமானம் குறைந்திருப்பதைக் கண்டுபிடித்தாள் அவள்,

கலங்கிப் போகும் அளவுக்கு அதிகமாக அல்ல, ஆனால். குறைந்திருப்பது நிச்சயமே!

இந்தக் குறைவு. எந்தக் கிளையில் எப்படி ஏற்பட்டது என்று ஆராய்ந்து கண்டுபிடித்தபோது. அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது, சற்று திகிலாகவும்,

அவர்களது ஹோட்டல்கள் அனைத்திலுமே. கல்லாவில் பணத்தைச் செலுத்திவிட்டு வெளியே செல்லும் பகுதியில் இனிப்பு. காரம் என்று சுவை மிகுந்த பல் வேறு தின்பண்டங்கள் வைத்திருக்கும் பகுதி ஒன்று இருக்கும், பால். பாதாம். முந்திரி. பிஸ்தா போன்றவை கொண்டு செய்யப்பட்ட. தரமான பலகாரங்கள், ஏற்ற வகையில் விலையும் இருக்கும்,ஹோட்டலில் உண்போர். இந்தப் பலகாரங்களில் ஒரு பாக்கெட் வாங்கிக் கொறிக்காமல் போவது. அபூர்வம்!

இப்போது. அந்தப் பகுதியில் விற்பனை குறைந்திருந்தது! அன்றாடத் தேவைக்கு ஏற்பவே தயாரிப்பதால். செய்த பொருட்கள் அதிகமாக மிஞ்சி வீணாவதற்கில்லை,

ஆனால். செய்வதே குறைந்து. அதன் மூலமாக வந்த வருமானமும் குறைந்திருந்தது,

அது ஒரு துணை வருமானம்தான் என்றாலும். நாளைக்கு இதுவே ஹோட்டலின் வருமானத்திலும் பிரதிபலிக்காது என்று என்ன நிச்சயம்? இப்போதே. இந்த வருமானக் குறைவின் காரணத்தைக் கண்டறிந்து. உடனடியாக அதைக் களைவது. மிக முக்கியம் அல்லவா?

அன்றிரவு இந்தப் பிரச்சினை  பற்றி. சுரபி வீட்டில் பேச்செடுத்தாள்,

சுந்தரியும் மகளின் பேச்சை ஒத்து. அந்தப் பலகாரங்கள் செய்வதற்கான மூலப் பொருட்கள். இப்போது குறைவாக வாங்கப்படுவதைத் தெரிவித்தாள்,

அதாவது. தயாரிப்பின் அளவு குறைக்கப்பட்டிருந்தது! ஆனால். தரம்

அப்படியே இருப்பதாகத் தந்தை உறுதியாகக் கூறினார், சுவையும் அப்படியே என்றார்!

அப்படியிருந்தும். அந்த விற்பனையும். வருமானமும் குறைவதன் காரணத்தை. வெகு விரைவிலேயே கண்டுபிடிப்பதாக. சுகந்தன் கூறி. அதில் முழு மூச்சுடன் ஈடுபட்டான்,

அவன் கண்டுபிடித்ததை. மற்ற மூவரையும் அழைத்துச் சென்றே காட்டினான்,

அவர்களதுஹோட்டலில் உண்டு முடித்த பலரும். முன் போல இனிப்புகளை வாங்காமல். அருகில் இருந்த ஒரு பழக்கடைக்குச் செல்வதைக் குடும்பத்தினர் நால்வருமே பார்த்தனர்,

நகரில் இருந்த அவர்களது ஒவ்வொருஹோட்டலின் அருகேயும். "அருங்கனியகம்" என்ற பெயரில் ஒரு பழக்கடை திறக்கப்பட்டிருந்தது,

"ஒரு பழக்கடைக்கு. இந்தக் கூட்டம் எப்படி வரும். அண்ணா?" என்று புரியாத கவலையோடு கேட்டாள். சுரபி,

அதற்குப் பதில் சொல்வது போலத்தான். தங்கையை அந்தப் பழக்கடையின் உள்ளேயே வாடிக்கையாளர் போல. சுகந்தன் அழைத்துப் போனான்,

அங்கே பழங்களை விற்பனை செய்த விதமே வேறாக இருந்தது,

பல விதப் பழங்களைச் சாறெடுத்துக் கொடுத்தார்கள், அதுவே. வெறும் பழச்சாறாக மட்டுமின்றி. ஒத்த பழங்களையும் சேர்த்துப் பிழிந்து. காக்டெயில். பஞ்ச் என்று சுவைபடச் செய்து விற்றார்கள், பழங்களாகவே வேண்டுவோருக்குக் கனிகளை அழகாக வெட்டி. ஐஸ்கிரீம் கலந்து. சாலடாகக் கொடுத்தார்கள், வெறும் பழங்களை மட்டுமாக உண்ண விரும்பியவர்களுக்கும். அந்தப் பழங்களை வெட்டி. எலுமிச்சைச் சாறு. சாஸ். உப்புத்தூள் என்று. தேவையானது கலந்து. சுவையை மிகுதியாக்கிக் கொடுத்தார்கள்! இன்னும். கையில் தூக்கிச் செலவதற்காகப் பல்வகை "மொரப்பா" க்களும்!

கண்ணைக் கவர்ந்த முக்கியமான விஷயம் என்னவென்றால். பணியாளர்களின் சுத்தம்! விரைந்து பணி புரிந்த விதம்!

கூடவே. பளிச்சென்று தெரியும் விதமாக. "உங்கள் ஆரோக்கியம் எங்களிடம் ". "இளமையோடிருக்கப் பழங்களை உண்ணுங்கள்". "பழங்களை உண்ணுங்கள். டாக்டரை மறவுங்கள்" என்று பல்வேறு வாசகங்கள். பழங்களிள் அழகான படங்களுடன் அங்கங்கே பளிச்சிட்டன,

சுவையான பழச்சாறு கலவை ஒன்றை அருந்தியவாறு சுற்றிலும் கவனித்தவளிடம். பார்வையாலேயே “எப்படி” என்று கேட்டான் அண்ணன்,

“புரிகிறது,” என்றாள் அவள் சுருக்கமாக,

இந்தப் போட்டியை எப்படி சமாளிப்பது என்று யோசித்தவாறு இன்னொரு மிடறு பழச்சாறை உறிஞ்சிக் குடித்தபோது. ஏதோ முதுகில் குத்துவது போன்ற உணர்வு. சுரபிக்கு உண்டாயிற்று,

அவள் மெல்லத் திரும்பிப் பார்க்கவும்.”என்ன?” என்றான் சுகந்தன்,

“யாரோ பார்க்கிற மாதிரி இருந்தது,” என்று அவள் கூறவும். தோளைக் குலுக்கினான் அவன்,

“அழகாய் இருந்தால். அப்படித்தான், கல்யாணத்தைப் பண்ணிக்கொண்டு இருந்தால். எவன் பார்ப்பான்?” என்றான் அண்ணன் வாய்ப்பை விடாமல்,

இதுவே முன்பாக இருந்தால். அழகாக இருப்பதாகச் சொல்லிக் கொள்கிறாயா என்று கிண்டலடிப்பான், இப்போது. சுருதி மாறுகிறதாக்கும்,

“ஆமாம், இவள் திருமணமானவள் என்று நெற்றியில் எழுதி ஒட்டியிருக்குமாக்கும். யாரும் பாராமல் இருப்பதற்கு?” என்றாள் அவள் பதிலுக்கு,

“ஆனாலும். கழுத்தில் தாலிச் சங்கிலி இருக்குமே!”

“அதனால் மட்டும்? உன் இனம் மரியாதையாகக் கண்ணை மூடிக் கொள்ளுமாக்கும்? கணவனோடு போய்க் கொண்டு இருந்தபோதே. மேலே வந்து இடித்தான் என்று. அன்றைக்கு சுரேகா அழவில்லை?”

“அது .....” என்று இழுத்த சுகந்தன். சொல்வது அறியாமல். வெற்றிகரமாகப் பின்வாங்கினான்,”இப்படியெல்லாம். தேவையற்றதைப் பேசி. முக்கியமானதைக் கோட்டை விடக் கூடாது, நாம் இங்கே எதற்காக வந்தோமோ. அதை மட்டும் பார்ப்போம்!” என்றான் தோரணையாக.

கிண்டலாகச் சிரித்தபோதும். நல்லதுதான் என்று. சுரபியும் அந்த விஷயத்தை அப்படியே விட்டுவிட்டாள், இல்லையென்றால். எப்படியாவது சுற்றி வளைத்து. மறுபடியும் அவளது திருமணத்தில் வந்து நிற்பான்,

எனவே. யோசித்தவாறு.”இதில் நமக்கு இரண்டு வழிகள்

இருக்கின்றன. அண் .....” என்று அவள் சொல்லிக்கொண்டு இருந்தபோதே. அவர்கள் முன். அழகான கண்ணாடிக் குவளைகளில். இன்னுமொரு விதமான பழச்சாறு கொண்டுவந்து வைக்கப் பட்டது.

“நாங்கள் வேறே “ஆர்டர்” பண்ணவில்லையேப்பா, இது. வேறே யாருக்கோ போக வேண்டியது என்று நினைக்கிறேன்,” என்றான் சுகந்தன்.

“அப்படியில்லை. சார், இது. முதலாளியே உங்களுக்காக. ஸ்பெஷலாகப் போடச் சொல்லி. அனுப்பியது, நீங்கள் “அமுதம்” ஹோட்டல்காரர்கள்தானே. சார்? உங்களை அவருக்குத் தெரியுமாம், மரியாதை நிமித்தம் என்று சொல்லச் சொன்னார்,” என்றான் அந்தப் பணியாள்.

“தெரிந்தவரா? அவர் பெயர் என்ன?” என்று சுகந்தன் கேட்கவும். அவர்களது பக்கவாட்டில் இருந்து.”கதிரவன்,” என்று. அமர்ந்த குரலில் பதில் வந்தது.

திகைத்துத் திரும்பிப் பார்த்தால் அங்கே வரவேற்பா. வணக்கமா என்று இனம் காண முடியாதவாறு லேசாகத் தலை தாழ்த்திப் புன்னகையோடு வந்தவன். எட்டு ஆண்டுகளுக்கு முன் “ரிசார்ட்”டில் பார்த்த அதே கதிரவனேதான்.

இந்தக் கதிரவனின் முகம் சற்று முதிர்ந்திருந்தது, வெறும் எட்டு ஆண்டு கால முதிர்ச்சி மட்டுமல்ல, அதை விடவும் அதிகமான ஏதோ ..... இந்த நிலைக்கு வர வேண்டுமானால். கடினமான உழைப்பின் முதிர்ச்சியாகவும் இருக்கலாம்!

அன்றையக் கலைந்த சிகை. கசங்கிய. சற்றே அழுக்கான ஆடை. கடுத்த முகம் அரையும் குறையுமாக அரும்பி. கவனியாமல் விட்டிருந்த மீசை. தாடி ... எதுவுமில்லை!

மீசை மட்டும் இன்னமும் இருந்தது, ஆனால். அவனது முகத்துக்குக் கம்பீரக் களை தரும் விதமாக. ஒழுங்காக வெட்டி விடப்பட்டிருந்தது,

ராஜா மாதிரி என்று அந்த லலிதாம்மா சொன்னது போன்றதொரு கம்பீரமான தோற்றம்! நடை. உடை பாவனை எல்லாமே. அதற்கேற்றவாறு முழுமையாக மாறியிருந்தது!

அதிலும். அந்தப் புன்னகை!

இவனுக்கு. இப்படிச் சிரிக்கக் கூடத் தெரியுமா என்று பிரமித்துப் போனாள் சுரபி,

ஆனால். இவன் எப்படி. இப்படி ... என்று ஒன்றும் புரிபடவுமில்லை!

சுரபிக்கு ஒரு வித மலைப்பு என்றால். அவளுடைய அண்ணனுக்குக் கதிரவனை அடையாளமே தெரியவில்லை!

உடனொத்த ஒன்றுவிட்ட சகோதரர்களுடன் அருவிக் குளியலும். மலையேறுவலும். ஒரே விளையாட்டுமாக இருந்தவன். அங்கே யார் முகத்தைப் பார்த்தான். அடையாளம் தெரிந்து கொள்வதற்கு?

அத்தோடு. கார் துடைத்த பையனிடம். அந்த வயதுப் பெண்களுக்கு இருந்த கவர்ச்சி. அவனுக்கு இருக்கவும் வாய்ப்பில்லையே!

ஆனால். அடையாளம் தெரிந்து கொள்வதற்கும். அந்தக் கதிரவனிடம் ஏதோ இருப்பதாகத் தோன்றவும்தான். சுகந்தன் திணறினான்.

அவன் விழிப்பதைப் பார்த்துவிட்டு."ஆந்திரா எல்லையில். ஒரு ரிசார்ட்டுக்குப் போனோமே!" என்று . உடன் பிறந்தானுக்கு நினைவூட்டினாள். தங்கை

சுகந்தனுக்கும் உடனே நினைவு வந்துவிட்டது, கூடவே. இன்னும் சிலதும்!

ஆனால். கதிரவனுடைய பணியாள் முன்னலையில். "நீ அங்கே கார் துடைத்தவன்தானே" என்று எப்படிக் கேட்பது? அத்தோடு. அதை இன்னமும் நினைவு வைத்திருப்பதே தப்பு போலவும் சுகந்தனுக்குத் தோன்ற. ஒரு கணம் பேச்சு வராமல் திணறினான்.

ஆனால். மூன்று ஆண்டுகளாகத் தந்தையோடு இணைந்து தொழில் செய்வது கை கொடுக்க."அருமையான இயற்கைச்சூழல் அங்கே! எட்டு ஆண்டுகளுக்குப் பிறகும் எங்களை நினைவு வைத்திருக்கிறீர்கள் என்பதே மகிழ்ச்சியாக இருக்கிறது! உங்களது இந்த எட்டு ஆண்டு வளர்ச்சியில். எனக்குத்தான் அடையாளம் தெரியாமல் போயிற்று, உட்காருங்களேன், எங்களோடு சேர்ந்து பேசிக்கொண்டே. ஒரு ஜூஸ் குடிக்கலாமே," என்றான் சுகந்தன் இலகுவாகவே,

உடனே உட்காராமல். கதிரவன் ஏனோ. சுரபியைப் பார்த்தான்.

அண்ணனின் அழைப்பு. அவளுக்கும் சம்மதம்தானா என்கிற ஐயமா?

விழி விரிய ஒரு கணம் அவனை உற்று நோக்கிவிட்டு."அவரைக் கட்டாயப் படுத்தாதே. அண்ணா, ஒருவேளை. அவரது கடையின் பழச் சாறுகள் எல்லாம். அடுத்தவர் வயிற்றைக் கெடுப்பதற்காகத்தானோ. என்னவோ?" என்று. சீண்டலாக உரைத்துக் கண்களால் நகைத்தாள் சுரபி.

சன்னமான நெடு மூச்சுடன். புன்னகை விரியச் சட்டென உட்கார்ந்தான் கதிரவன்," அமுதம் ஹோட்டல்காரர்களின் அனுபவம் பேசுகிறது போல!" என்று அவன் பதிலுக்குக் கூற. சட்டென அங்கே ஒரு சிரிப்பலை பரவியது,

முதலாளியின் உத்திரவுக்காகக் காத்து நின்ற பணியாள் கூட. வாயைக் கையால் மறைத்துக்கொண்டு சிரித்தான்.

சிரிப்பினூடே."அது பற்றி. அங்கே வந்து சாப்பிட்டுப் பார்த்தால். தானாகவே தெரிந்துவிட்டுப் போகிறது!" என்றாள் சுரபி பதிலுக்கு.

கையசைவால் ஏதோ சொல்லிப் பணியாளை அனுப்பியவன். பேச்சின் தொடர்ந்து."அழைப்புக்கு நன்றி, கட்டாயம் வருவேன், சாப்பிடவும் செய்வேன், அதற்கு முன். "ஹெல்த்" காப்பீடு ஒன்று செய்துவிட்டு வரலாம் என்று ஐடியா,"என்று சிரியாமல் சொன்னான் அவன்,

"வாட்?!" என்று தன்னை மீறிக் கத்திவிட்டு."அடடா! அண்ணா பார்த்தாயா? மனிதன் சாகும்வரை. கற்றுக்கொண்டே இருக்கலாம் என்பது. இதைத்தான்! அது போன்ற காப்பீட்டை. நாமும் செய்து விட்டல்லவா. இங்கே வந்திருக்க வேண்டும்?" என்று சுரபி பதிலுக்குக் கூற. எல்லோருக்கும் சிரிப்பு வந்தது,

பல்வரிசை தெரியக் கதிரவன் நகைக்கையில் அவனைப் பார்த்த சுகந்தன். ஒரு சில கணங்கள் இமைக்க மறந்தான்!

பல் வரிசை இன்னும் கொஞ்சம் நன்றாக இருக்க வேண்டும்

இது அவன் கண் .....கருத்தில் பட. இவ்வளவு நேரமாகி இருக்கிறதே!

அன்றைய இரவு உணவின்போது. கதிரவனைப் பற்றியும். அவனது அருங்கனியகத்தைப் பற்றியும். பெற்றோரும் பிள்ளைகளுமாக நிறையப் பேசினார்கள்.

"அங்கே கார் துடைத்து. தோட்ட வேலை செய்த பையனா? மற்றவர்கள் எல்லோரும் பணிவும் பதவிசுமாகப் பழகும்போது. இவன் மட்டும் கருங்கல் மாதிரி நிற்பானே! திமிர் என்று கூட. எண்ணியிருக்கிறேன்! அந்தப் பையனா. இப்படி வளர்ந்திருக்கிறான்?!" என்று சுந்தரி மிகவும் ஆச்சரியப்பட்டாள்!

வளர்ச்சி! அந்தச் சொல். சுகந்தனுக்கு இன்னும் எதையோ நினைவுபடுத்திற்று,

இன்னும் கொஞ்சம் உயரமாக வளர்ந்திருந்தால். நன்றாக இருந்திருக்கக் கூடும்

மூக்கு. இன்னும் கொஞ்சம் நேராக .... ,கண்கள் இன்னும் கொஞ்சம் பெரியதாக .....

“ஆமாம்மா, அவனேதான்,” என்றான் அன்னையிடம்,”ஆனால். இன்று அவன் இருக்கும் நிலைக்கு. மரியாதைப் பன்மையில்தான் குறிப்பிட வேண்டும், இப்போது நம் எல்லாஹோட்டல்களின் அருகிலும் கடை போட்டு. நம் ஸ்வீட் விற்பனையைக் கெடுத்துக் கொண்டிருப்பவரும். அன்று “கார் துடைத்த. அதே பையனாரேதான்,” என்று தெளிவாக எடுத்துரைத்தான் சுகந்தன்,

“யார். எப்படி வேண்டுமானாலும் நன்றாகவே இருக்கட்டும், முயன்று முன்னுக்கு வந்தால். இன்னமும் அதிகமாகவே நன்றாக இருக்கட்டுட்! ஆனால். நம் தலையில் கை வைக்காமல். எங்கேயோ. கண்காணாத இடத்தில் போய் இதைச் செய்து தொலைக்க வேண்டியதுதானே?” என்று சற்று எரிச்சலோடு சுந்தரி சொல்லவும். சுரபியின் முகமும் எரிச்சலைக் காட்டியது,

ஆனால். அவள் சிறு கோபத்தோடு நோக்கியது. பெற்றவளை,

“கதிரவன் இங்கே வந்து. தொழில் தொடங்கி. நமக்கு பாதிப்பு வந்தும் விட்டது என்பது. பழைய கதை, அதைப் பற்றி. இனிப் பேசிப் பயன் இல்லை, அதற்காக அவரைத் திட்டிக் கொண்டிருப்பதை விட்டுவிட்டுப் பிரச்சினையை எப்படிச் சமாளிப்பது என்று யோசித்தால். நன்றாக இருக்கும்!” என்று கடுப்புக் காட்டினாள் அவள்,

அவளை ஒரு தரம் பார்த்துவிட்டு.”சுபிக்குட்டி சொல்வதும். சரிதானேம்மா? நடந்து முடிந்துவிட்டதைப் பற்றி யோசிப்பதில் என்ன பயன்? இனி என்ன செய்வது? அதைப் பற்றிப் பேசுவோமே!” என்றான் சுகந்தன்,

“என்ன செய்வதா? யாராவது ஆளை வைத்து. அடித்து விரட்ட ஏற்பாடு பண்ண வேண்டியதுதான்!”

“என்னது?!” என்று அதிர்ந்து போய். நிமிர்ந்தாள் சுரபி!

# அத்தியாயம் - 4

அதிர்ந்தது. சுரபி மட்டுமல்ல,

தங்கை அளவுக்கு அதிர்வடையவில்லை என்றாலும். தாயின் வார்த்தைகளில். சுகந்தனும் திகைத்துத்தான் போனான்,

ஆனால். சின்னவர்கள் திகைப்புற்று நிமிர்ந்த விதத்தில். பெற்றவளின் முகம் லேசாகக் கன்றிப் போயிற்று, சமாளித்துக் கொண்டு."அதில்லைடா. சுகி, நம் தொழிலில் ஒரு நிலைக்கு வந்துவிட்டோம்,. இனி எந்தப் பிரச்சினையும் வராது என்று நிம்மதியாக இருக்கும்போது. இப்படி ஒருவன் வந்து. ஆணிவேரையே பிடித்து ஆட்டினால். ஆத்திரம் வராதா?" என்று. தன்னிலை விளக்கம் கொடுத்தாள் தாய்.

"எந்தத் தொழிலிலுமே. நிம்மதியாக இருப்பது என்பது. வெறும் பொய் மயக்கமே, அந்த மயக்கத்துக்கு இடம் கொடுத்தால். அப்புறம் சறுக்கு மர இறக்கம்தான் நடக்கும், இப்போதைக்குப் பெரிதாக இறங்கி விடவில்லை என்றாலும். இதையே. நாம் இன்னும் கொஞ்சம் முன்னாலேயே கவனித்திருக்க வேண்டும், சற்று அலட்சியமாகத்தான் இருந்து விட்டோம் என்றாலும். கவனியாமல் விட்டதை இப்போதேனும் சீர் பண்ண வேண்டும், ஆனால். நாம் தாதாக்கள் அல்ல என்பதை நினைவு வைத்துக்கொண்டு யோசியுங்கள், இதற்கு என்ன செய்யலாம்?" என்று கேட்டு. மற்ற மூவரின் முகங்களையும் கேள்வியாகப் பார்த்தார் சத்தியலிங்கம்,

"பெண்ணரசி. சொல்லும்மா, முதல் வாய்ப்பு உன்னதுதானே?" என்றான் அண்ணன்!

கிண்டல் போலச் சொன்னானே தவிர. மகாபாரதத்தைப் பின்பற்றி. வீட்டில் சின்னவர்களிடம்தான். முதல் அபிப்பிராயம் கேட்க வேண்டும் என்கிற வழக்கத்தைக் கொண்டு வந்ததே. சுகந்தன்தான், சின்னவர்களும் தடையற்று சுதந்திரமாகப் பேசுவதற்கான உத்தி அது, பெரியவர்கள் முதலிலேயே பெரியவர்கள் அபிப்பிராயம் சொல்லிவிட்டால். அப்புறம் சின்னவர்கள். அதைத் தட்டிப் பேசுவது கடினம், சில சமயம் மரியாதைக் குறைவாகக் கூடத் தோன்றக் கூடும், அதனால். சுரபியின் வீட்டில். இந்தப் பழக்கத்தைக் கட்டாயமாகக் கடைப்பிடித்தார்கள்,

"அது ....."

வழக்கமான வழிமுறைதான் என்றாலும். இப்போது சுரபிக்கு ஏனோ

பதில் சொல்ல வாய் வரவில்லை,

கஷ்டப்பட்டுத்தானே. கதிரவன் இந்த நிலைக்கு உயர்ந்திருக்க வேண்டும்? அதைக் கெடுப்பது எப்படி? ஆனால். ஏதோ ஒரு வகையில். அவனது பிழைப்பைக் கெடுத்தால்தானே. அவனை விரட்டுவது சாத்தியம்?

சிறு தயக்கத்தின் பின்."அது வந்து .....நீங்களே சொல்லுங்கப்பா, இது. எனக்கு ஒன்றும் சரியாகத் தோன்றவில்லை," என்று முடித்துவிட்டாள்,

பெற்றவர்கள் சற்று ஆச்சரியமாகப் பார்க்கவும்."பின்னே என்னப்பா? மிஸ்டர் கதிரவன். நம் இடத்துக்குள் வரவில்லை, நமக்கு அடுத்ததாய் இருக்கும் இடத்தைக் கூடப் பயன்படுத்தவில்லை, நாம் விற்கும் அதே பொருட்களைச் செய்து விற்கிறாரா என்றால். அப்படியுமில்லை, ஏதோ தன் பிழைப்புக்கு. அவராக ஒரு வழி கண்டுபிடித்து. அதைத் தன்பாட்டில் நடத்தி. முன்னேறிக் கொண்டிருக்கிறார், இதல் நமக்குக் கஷ்டம் என்றால். நம்மை உயர்த்த ஏதேனும் செய்ய வேண்டுமே தவிர. எதிர்ப் புறமாகவோ. நாலு கடை தாண்டியோ ஒரு மனிதர் ஏதோ செய்து உருப்பட்டால். அதையெல்லாம் அழிக்க முனைவது .....அவ்வளவு சரியாக எனக்குப் படவில்லை," என்று ஒரு விதமாய்த் தன்னிலை விளக்கம் கொடுத்து முடித்தாள் அவள்,

"சுரபி சொல்வது. ஒரு வகையில் சரிதான். அப்பா," என்று. தங்கையைச் சார்ந்து பேசினான் சுகந்தன்," ஆனால். அதில் ஒரு திருத்தம் இருக்கிறது, மிஸ்டர் கதிரவன் செய்யும் தொழில். நம் வருமானத்தைப் பாதிக்காத வரையில். நாம் எதைச் செய்வதும் சரியல்லதான், ஆனால். இப்போதைய நிலவரம் வேறு, சிறு அளவில் என்றாலும். நம் வருமானம் பாதிக்கப்பட்டிருக்கிறது, நாளை இது அதிகமாகலாம், அந்த நிலை வருமுன் தற்காப்பு நடவடிக்கை எடுப்பது தேவைதானே?" என்று கேட்டான்,

"அதற்காக. ஒருவர் நியாயமாகத் தொழில் செய்வதைக் கெடுப்பதா?" என்று கடுப்புடன் கேட்டு. மீண்டும் தன் எதிர்ப்பைக் காட்டினாள் அவனுடைய தங்கை,

"கெடுப்பானேன்?" என்று சுகந்தன் கேட்கவும். மற்ற மூவரும் வியப்புடன். அவன் முகத்தை நோக்கினர்,"அதைவிட. அவரது வெற்றியை. நாமும் பங்கு போட்டுக் கொள்ளலாமே!" என்று அவன் முடிக்கவும். மற்ற மூவரும் இன்னமும் வியந்து விழித்தனர்,

கதிரவனின் வெற்றியை. அவர்கள் நால்வரும் கூடப் பங்கிட்டுக்

கொள்வதா? அதெப்படி முடியும்?

பாடுபட்டு அடைந்திருக்கும் தனது வெற்றியை இன்னொருவர் அனுபவிக்க விட்டுவிட்டு. அந்தக் கதிரவன் எப்படிக் கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருப்பான்?

அதிலும். அவன் சும்மாவே. ஒரு மாதிரியான ஆள், கோபம் வந்தால் அவ்வளவுதான், சினம்  தணிந்து. அப்புறமாக அவன் நல்லபடியாக உறவாடுவது எல்லாம் நடக்கிற விஷயமே கிடையாது, அப்பேர்ப்பட்ட முசுடு!

இன்றையச் சிரிப்பு வேறு மாதிரிக் கூறினாலும் கூட!

அப்படியிருக்க. இந்த அண்ணன் என்ன சொல்லுகிறான்?

“ஏய். என்னடா பேத்துகிறாய்? நீ நன்றாகத் தொழில் நடத்துகிறாய் என்று அப்பா சொல்லிச் சொல்லி. கனம் தலைக்கேறிவிட்டது, அடி மட்டத்திலிருந்து கஷ்டப்பட்டு. ஜெயித்தவன். அந்த வெற்றியின் பலனை. இந்தாப்பா தம்பி. நீயும் கொஞ்சம் வைத்துக்கொள்  என்று இனாமாக உனக்குத் தூக்கிக் கொடுப்பானாக்கும்?” என்று எகத்தாளமாகக் கேட்டாள் சுந்தரி,

அதானே ...என்பது போலத் தந்தையும் தங்கையும் பார்க்க.”இனாமாக என்றால். எந்தக் கிறுக்கனும் தர மாட்டான்தான், ஆனால். கதிரவனிடம். அவன் அடையப் போகிற அதிகப்படி நலன்களை எடுத்துச் சொல்லி விவரித்தால்.   ...............” என்று சொல்லத் தொடங்கியவனைக் குறுக்கிட்டு.”நீ என்னதான் விவரித்தாலும். கேட்கிறவன் கிறுக்கனாக இல்லை என்றால். அவனது லாபத்தை. ஒரு போதும் நமக்குத் தாரை வார்க்க மாட்டான்,” என்றாள் அவள் பொறுமையிழந்து,

“நீங்கள் இப்படிப் பொறுமையிழந்து குறுக்கே பேசிக் கொண்டே இருந்தால். விஷயத்தை என்னால் தொடங்கவே முடியாது போகும், சற்றுச் சும்மா இருங்கள். அம்மா,” என்று தாயைப் பேசாதிருக்கச் செய்துவிட்டு. சுகந்தன் தனது திட்டத்தை விவரித்தான்,

அவன் சொல்லி முடித்ததும். அதை உள் வாங்கிய சிறு அமைதியின் பின்.”யோசனை நன்றாகத்தான் இருக்கிறது. அண்ணா, ஆனால். ஏற்கனவே. அவர் இருக்கும் இடத்திலேயே லாபம் சம்பாதித்துக் கொண்டு இருப்பவர். உன் திட்டத்துக்கு ஏன் சம்மதிக்க வேண்டும்? அதுதான். பிரச்சினை,” என்றாள் சுரபி,”ஆனால். அவரைச் சம்மதிக்க வைக்க முடியுமானால். முயற்சி செய்து பார்க்க வேண்டிய விஷயம்!”

“சுபியின் கருத்துதான் என்னதும்,” என்றார் தந்தை,

“ஓர் அன்னியனை அவ்வளவு உள்ளே கொண்டுவருவது எனக்குப் பிடிக்காவில்லைதான், என்றாலும். அவனை வேறு வழியில் விரட்ட முடியாதபோது. இது பரவாயில்லை,” என்றாள் சுந்தரி,

“அப்படியானால்.  இந்த முயற்சியைத் தொடங்கட்டுமா?” என்று பொதுவாகக் கேட்டான் சுகந்தன்,

பெரியவர்கள் தலையாட்டினர்.

“வெற்றி வாய்ப்பு சந்தேகம்தான் என்றாலும். நூலைக் கட்டி மலையை இழுக்கிற மாதிரி. ஏதோ முயற்சி செய்து பார். அண்ணா, உன் பேச்சிலே அந்த மனிதர் ஏமாந்து. மலையே கிடைக்கவும் கூடும்!” என்றாள் சுரபி.

“ஏமாறுவானேன். சுபிம்மா? என் திட்டம் பலித்தால். கதிரவனுடைய வாடிக்கை எவ்வளவு பெருகும் என்று யோசித்துப் பார்! இப்போது இருக்கும் ஒரு சில என்பது மாறி. நம் வாடிக்கையில் நூறு சதவீதமும். அவருக்கு உறுதியாகி விடுமே! அது. அவருக்கு இன்னமும் வளர்ச்சிதானே?” என்றான் தமையன்,

“ஓ!” என்று புருவம் உயர்த்தி ஒரு கணம் யோசித்தவள் முகம் மலர.”இந்தக் கணக்கை நான் எண்ணிப் பார்க்காமல் விட்டுவிட்டேனே! நீ சொல்வது சரிதான். அண்ணா, கதிரவன் நிச்சயமாக ஒத்துக் கொள்வார்!” என்றாள் குதூகலத்துடன்,

யாருக்கும் இறக்கமின்றி. இரு தரப்பாருக்கும் வெற்றியே என்றால். எல்லோருக்கும் மகிழ்ச்சியாகத்தானே. இருக்கும்?

கதிரவனும் மறுக்கவில்லை,

சுகந்தன் சொன்ன கணக்கை. அவனும் போட்டுப் பார்த்திருப்பான் என்று சுரபி நினைத்தாள்!

ஆனால். இரு தரப்பாரும் ஓர் உடன்பாட்டை எட்டுமுன். பலவும் பேசித் தீர்க்க வேண்டியிருந்தது!

முதல் சுற்றுப் பேச்சுக்காகக் கதிரவன். சுரபி வீட்டாரின் “அமுதம்” ஹோட்டலுக்கு வந்தான்,

அண்ணனோடு நின்று வரவேற்ற சுரபியின் கன்னங்கள் குழிய. கண்கள் சிரித்தன.

பார்த்த விழி பார்த்தபடி. ஒரு கணம் அசையாமல் நின்றுவிட்டவன். உடனேயே சுதாரித்து. உரிய வார்த்தைகளை இருவரிடமும் பேசிவிட்டபோதும். முகமன்கள் முடிந்து. பெற்றோர் இருக்கும்

பேச்சுவார்த்தை அறைக்குச் செல்கையில். இயல்பு போல அவள் புறமாகத் திரும்பி."அப்படி என்ன சிரிப்பு?" என்று அவளுக்கு மட்டும் கேட்கும்படியாக வினவினான்,

குறும்பு கொப்பளிக்க ஓரக் கண்ணால் பார்த்து."தெரிந்து கொள்ளாவிட்டால். தலை வெடித்து விடும்போல?" என்றாள் சுரபி சிரிப்பு வாடாமலே!

"வெடித்தாலும் வெடித்து விடலாம், அதிலிருந்து காப்பாற்றவேனும். விவரம் சொல்லலாம்தானே?"

"ஓ. தாராளமாக! சொல்லட்டுமா? தைரியமாகச் சாப்பிடவே வந்திருக்கிறீர்களே. மருத்துவக் காப்பீடு செய்தாகி விட்டதா?" என்று. அவள் பதவிசாகக் கேட்க. அடக்க முடியாமல் நகைத்தான் கதிரவன்,

புன்னகை முகத்தோடேயே."உன் அண்ணன் அழைத்த உடனேயே அந்த வேலை பார்க்க முயன்றேன், ஆனால். பிரச்சினை என்னவென்றால்.ஹோட்டல் சாப்பாட்டுக்கு எல்லாம் . காப்பீடு கொடுக்க மாட்டார்களாம், இன்றைய நிலையில். கொடுத்துக் கட்டுபடி ஆகாதாம்!" என்று அவன் கூற. இப்போது நகைத்தது. சுரபி!

"ஐயோ! பரவாயில்லை. கதிரவன், உங்களுக்குக் கற்பனை நன்றாகத்தான் வேலை செய்கிறது! அடுத்த தொழிலாகக் கதையே எழுதலாம், எழுதினால். பெரிய ஆளாகக் கூட வந்துவிடலாம்!" என்று சுரபி பதில் கொடுக்க."நல்ல ஐடியா, நன்றி!" என்று அவன் கூற. இருவருமாகக் கலகலப்பாகப் பேசியபடியே சென்றனர்,

தன்னோடு கூட நின்று வரவேற்ற சுகந்தன். முன்னதாக வந்து பெற்றோருடன் இருப்பதைக் காணவும். சுரபிக்குச் சற்று வியப்பாக இருந்தது,

அவன் தங்களோடு இல்லாததைக் கவனிக்கவே இல்லையே!

கதிரவனும். அவளும் அப்படி ஒன்றும். நின்றும் பேசவில்லை,. ஒருவேளை. பெற்றோரைத் தயார்ப்படுத்துவதற்காக. அண்ணன் வேகமாக அவர்களிடம் வந்திருப்பான் என்று எண்ணிக் கொண்டாள் அவள்,

ஆனால்.ஹோட்டல் தொழிலில் பங்குதாரர்களாக அவளுடைய குடும்பத்தார் நாலுபேர் இருக்க. கதிரவன் தனியனாக இருந்தது. சுரபியின் மனதை உறுத்தியது,

எனவே. உரையாடலின் போது. இயன்றவரை. அவள் கதிரவனுக்குச் சாதகமாகவே பேசினாள்,

பேச்சுவார்த்தை சுமுகமாக நடந்தது, ஆனால். பல விஷயங்களில் ஒத்துப் போனாலும். ஒன்றிரண்டில் கதிரவன் தன் முடிவை மாற்றிக் கொள்வதாக இல்லை,

அமுதம்ஹோட்டலின் வளாகத்துள் தன் "அருங்கனியகத்"தைக் கொண்டு வருவதற்கு. அவன் தடை சொல்லவில்லை, ஆனால். அவனது தொழிலில் யார் தலையீட்டையும் அவன் ஏற்பதாக இல்லை, அதில் அவன் செய்யக் கூடிய மாற்றங்கள். அவனது விருப்பத்தை மட்டுமே பொறுத்ததாக இருக்க வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தான்,

"சார். உங்கள்ஹோட்டலில். இன்னின்ன பதார்த்தம். இப்படியிப்படிச் செய்ய வேண்டும் என்று நான் சொன்னால் நன்றாக இராது, அது பற்றி எனக்குத் தெரியவும் தெரியாது, அதனால். அபிப்பிராயம் எதுவும் நான் சொல்லவும் மாட்டேன், அதே போல. என் தயாரிப்புகளில் யாரும் மூக்கை நுழைத்தால். என்னால் சகிக்க முடியாது, இதை நீங்கள். முதலில் ஒத்துக் கொண்டாக வேண்டும்," என்றான் கதிரவன் பிசிரற்ற குரலில்,

சற்றுக் கடுமையாக என்று கூடச் சொல்லலாம்,

மற்ற யாரும் பேசுமுன்."அது சரிதானே?" என்று கதிரவனை ஒத்துப் பாடினாள் சுரபி,"நம் ஹோட்டல் பதார்த்தங்களை எப்படித் தயாரிப்பது என்று கதிரவனுக்கு எப்படித் தெரியாதோ. அதே போல நமக்கும். அவரது காக்டெயில். பஞ்ச் தயாரிப்பு பற்றித் தெரியாதுதானே? தெரியாததில் தலையிட்டு ஐடியாக் கொடுப்பதும் தப்புதானே?" என்றாள்,

கிட்டத்தட்டக் கதிரவனுக்காக வாதாடினாள் எனலாம்.

சற்று யோசித்த பெரியவர்களை ஒரு தரம் பார்த்துவிட்டு. சுகந்தன் சம்மதம் தெரிவித்தான்.

தொடர்ந்து."ஆனால் கதிர் ..... அப்படிக் கூப்பிடலாம் அல்லவா?"என்று அனுமதி கேட்டுக்கொண்டு மேலே பேசினான்,"நீங்களும் என்னை. என் வீட்டார். நண்பர்கள் போல. சுகன். சுகி என்றே அழைக்கலாம், இப்போது நீங்கள் சொன்ன விஷயத்துக்கு வருவோம், உங்கள் தயாரிப்புகளைப் பொறுத்த வரையில். சுபி சொன்னதுதான் என் கருத்தும், ஆனால். பழங்களைக் கொண்டு. இப்போது பலகாரங்களும் செய்கிறார்கள், பேரீச்சம்பழ அல்வா. அதேபோல ஆப்பிள். வாழைப்பழ அல்வாக்கள். பலா. நேந்திரம்பழ இனிப்பு. கார வகைகள்

இதெல்லாம் உங்கள் தயாரிப்புகளில் வருமா? அல்லது. நெய். எண்ணெயில் வேக வைத்து எடுப்பதால். எங்கள் கணக்கில் சேருமா? ..... இது போல விஷயங்களை சற்றுக் கலந்து பேசித்தானே முடிவு செய்ய

வேண்டும்?” என்று. இதமாகக் கேட்டான் அவன்,

சுகந்தனைப் பார்த்து. நட்பாய் முறுவலித்தான் கதிரவன்,”மறுக்க இயலாதபடி. அழகாகப் பேசுகிறீர்கள். சுகந் ...சுகன், பெரியவர்களின் வழி நடத்தல் என்பது. நன்றாகத் தெரிகிறது, ஆனால். எனக்கு அந்த வாய்ப்பு கிடையாது, இனி. உங்களைப் பார்த்துக் கற்றுக்கொள்வேன் என்று நினைக்கிறேன், ஆனால். அதற்குள். என் பேச்சில் கரடு முரடாக ஏதேனும் தோன்றினால். இது ஸ்தபதி வார்த்தெடுத்த சிலை அல்ல. சுயம்புவாகத் தோன்றி. வளர்ந்தது என்பதை நினைவு கூர்ந்து. கருத்தை மட்டும் எடுத்துக்கொள்ள வேண்டும்,” என்று அவன் கேட்ட விதத்தில். எல்லோருமே இளகிப் போயினர் என்று சொல்லலாம்,

“இவ்வளவு அழகாக எடுத்துக் கூறுகிறீர்களே! நீங்கள் கற்றுக்கொள்ள எதுவும் இல்லை. தம்பி, வாருங்கள். சாப்பிடலாம், சாப்பிட்டுக்கொண்டே மேலே பேசலாம்,” என்று சத்தியலிங்கம் எழ. அவரைப் பின்பற்றி. எல்லோரும் உணவு மேஜைக்குச் சென்றனர்,

கூடவே நடந்தபடி.”சிலை. சுயம்பு என்று அப்பாவை வசப்படுத்திக் கொண்டீர்களே!” என்று கதிரவனைப் பாராட்டினாள் சுரபி,

“வசமானது. அப்பா மட்டும்தானா?” என்றது. அவனது தணிந்த குரல். கிசுகிசுப்பாக.

சரியாகத்தான் தன் காதில் விழுந்ததா என்ற ஐயத்துடன் சுரபி நிமிர்ந்தால்.

காலை எட்டிப் போட்டு. சுகந்தனுடன் போய்ச் சேர்ந்து கொண்டிருந்தான் கதிரவன்,

தொடர்ந்த உரையாடலின் ஊடே. அவனது முகம் காட்டிய பாவனை. அவளது காதுதான் ரிப்பேர் என்றே அவளை எண்ண வைத்தது!

தொழில் விவகாரம் பேச வந்தவன்,. அவன் எப்படி. அது போலெல்லாம் பேசுவான்? நடந்துகொண்டே அவன் பேசியதை. அவள்தான் தவறாகப் புரிந்து கொண்டிருக்க வேண்டும்!

அல்லது. அம்மா. அண்ணனுக்கெல்லாம் அவனிடம் இன்னமும் நல்ல அபிப்பிராயம் வரவில்லையா என்று கேட்டதாகக் கூடப் பொருள் கொள்ளலாமே!

அப்படித்தான் என்பது போல. அவன். சுகந்தனோடுதானே போய்ச் சேர்ந்துகொண்டான்?

பரபரப்பு அடங்கிப் போய்விட. அப்படித்தான் இருக்க வேண்டும் என்று. தனக்குள்ளேயே "உச்"சுக் கொட்டிக் கொண்டாள் அவள்,

தொடர்ந்து. இந்தத் தொழில் பேச்சுகள் நல்லபடியாக வளர்ந்து. அமுதம் ஹோட்டல்களில். சிறு தீனிப் பகுதி இருந்த இடம் விரிவாக்கப்பட்டு. கதிரவனின் அருங்கனியகம் . "அருங்கனியமுதம்" என்ற பெயருடன். அங்கே குடியேறிற்று!

இட வாடகைக்குப் பதிலாக. பில் தொகையில் பத்து சதவீதம் என்று பங்கு பிரித்தார்கள்.

தலைமைக் கிளைக்குக் கதிரவன் வரும்போது. லாபக் கணக்கை சுரபி எடுத்துச் சென்று காட்ட. அப்படியே இருவருமாக.ஹோட்டலிலோ. அல்லது அவனது பொறுப்பில் உள்ள அருங்கனியமுதத்திலேயோ. உட்கார்ந்து. எதையாவது கொறித்தபடி. வெகு நேரம் பேசிக் கொண்டிருப்பது வழமையாயிற்று!

ஒரு விடுமுறை நாளன்று. கதிரவனை. வீட்டில் உணவருந்த அழைத்தார்கள்,

இன்னொரு நாள். ஒரு பெரிய ஃப்ளாட் வாங்குவதற்காக. ஆலோசனை தேவை என்று கதிரவன். அவர்களை அழைத்துப் போனான்,

அவன் தேர்ந்தெடுத்திருந்ததே. வெகு வசதியும். அழகுமாகக் கடற்கரை ஓரமாக அமைந்திருக்கவே. எல்லோருமாகப் பாராட்ட. அவன் அதையே வாங்கினான்,

அதைக் குடியிருக்க ஏற்றதாகப் பொருட்கள் வாங்கி. உரிய விதமாக அடுக்கும் பணியைக் கதிரின் வேண்டுகோளுக்கு இணங்க. சுந்தரியும். சுரபியும் ஏற்றுச் செய்தார்கள்,

அதற்கான ஆலோசனை. ஒப்புதல். "ஷாப்பிங்" என்று கதிரவன் அடிக்கடி அவர்களோடு சேர்ந்துகொண்டான்,

மொத்தத்தில் வாழ்க்கை மிகவும் சந்தோஷமாகச் செல்வதாக. சுரபி உணர்ந்தாள்.

இந்நிலையில். ஒரு நாள் இரவில். படுக்கச் செல்லுமுன். சுகந்தன் தங்கையைத் தோட்டத்தில் நடப்பதற்கு அழைத்தான்,

ஐயோடா. இன்னொரு மாப்பிள்ளை பார்த்திருக்கிறார்கள் போலிருக்கிறதே,. இவர்களுக்கு வேறு வேலையே இல்லையா என்று. உள்ளூர அலுத்தவண்ணம். அண்ணனைப் பின் தொடர்ந்தாள். அவள், இப்போதைக்கு. அவளுக்குத் திருமணத்தில் நாட்டம் இல்லை என்றால்.

விட வேண்டியதுதானே?

கதிரவனைப் போலவே. சத்தியலிங்கமும். நல்ல வருமானம் வரத் தொடங்கியதும். உடனடியாக வாங்கிய வீடு. அது, அப்போதைய வழக்கமாக. மூன்று மனை நிலமாக வாங்கி. நடுவில் வீடும். தோட்டமுமாகப் பார்த்துப் பார்த்துக் கட்டினார்,

நடந்தவாறே. சற்று நேரம் ஊர்க்கதை பேசியவர்கள். ஒரு புறமாக மரத்தடியில் கிடந்த கல் இருக்கை அருகே வரவும்.”உட்கார் சுபி, உன்னிடம் ஒன்று கேட்க வேண்டும்,” என்றான் சுகந்தன்,

அண்ணனின் சொல்படி அமர்ந்தபோதும்.”என்ன பெரிய விஷயம். அண்ணா? கல்யாணம்தானே? இன்னும் கொஞ்ச நாள் ஆகட்டுமே! சீக்கிரமே ஏதாவது ஒரு குரங்கின் தலையில் என்னைக் கட்டி அனுப்பி விட வேண்டும் என்று. அப்படி என்ன கட்டாயம்?” என்று. எரிச்சலை மறைக்காமல் காட்டிச் சொன்னாள் சுரபி,

“இது குரங்கு இல்லை. சுரபி!” என்ற அண்ணனின் குரலில். புன்னகை இருந்தது,

தலை சரித்து அவள் பார்க்க முனைந்தபோது. சுகந்தனின் பல்லும் பளீரென்றது,

தோளைக் குலுக்கி.”குரங்கு இல்லை என்றால். கரடியாக இருக்கும்!” என்றாள் அவள் அசட்டையாக,

“இரண்டு வகையும் இல்லை, இந்த மாப்பிள்ளைக்குக் கண் சற்றுப் பெரிதாக. மூக்கு சற்று எடுப்பாக. பல் அழகான வரிசையாக. ஆளும் சற்று அதிக உயரமாக .................. பளிச்சென்று இருக்கிறார், பார்த்தால் மயங்கிப் போவாய்!”

ஏதோ உறுத்த.”சற்று. சற்று என்றால். எதைவிட எல்லாம் சிறப்பாம்? என்னமோ. ஒரு மாதிரி பொம்மையை வைத்துக்கொண்டு. அளவெடுத்துச் சொல்கிற மாதிரி அல்லவா. இருக்கிறது? சொல்லண்ணா. யார் அந்த மாடல்? அவன் என்ன இப்படியொரு கொம்பன்?” என்று கேட்டாள் தங்கை,

“என்னைக் கேட்டால்? நீதானே இப்படிச் சொல்லிச் சொல்லி மறுப்பது வழக்கம்? ஆனால் ஒன்று, இந்த மனிதரை. நீ இது போலப் பேசி. மறுக்க முடியாது!” என்றான் அண்ணன். குரலில் உறுதியோடு,

கவிந்திருந்த முக்கால் இருளின் போர்வையில். சுரபி அலட்சியமாக உதட்டைப் பிதுக்கினாள்,”என்னமோ. டேப்பை வைத்து. அளவே எடுத்துவிட்டாய் போல. அவ்வளவு நிச்சயமாகச் சொல்லுகிறாயே! நீ

அளவு பார்க்கும்வரை. அந்த மகா மனிதன் மக்கு மாதிரி நின்றானாக்கும்?”

“ஏ ...ய். வாய் ரொம்பத்தான் நீளுகிறது! மக்கு. கொம்பன். அதற்கு முன்னே கரடி. குரங்கு .....இரு. இரு, மச்சான் வந்ததும். இதையெல்லாம் சொல்லிப் போட்டுக் கொடுப்பதுதான் என் முதல் வேலை!” என்று சுகந்தன் மிரட்ட. சுரபி எழுந்தாள்,

“இப்போதைக்கு நடக்காத. நடக்க முடியாத உன் கனவுகளை எல்லாம் நிம்மதியாகக் கண்டுவிட்டு வா. அண்ணா, நான் தூங்கப் போகிறேன்!” என்று. வீட்டை நோக்கி ஓர் எட்டு எடுத்து வைத்தாள்,

“என் கனவுகள் நிச்சயமாக மட்டுமல்ல,. சீக்கிரமாகவும் நடக்கப் போகிறவைதான், அவரது பெயரைக் கேட்டால். நீ அடுத்த அடி எடுத்து வைக்க மாட்டாய்!” என்றான் தமையன்,

“ஏன்? அந்தப் பெயர் ஏதேனும் மாய மந்திரம் பண்ணி. நடக்க முடியாமல் என் காலைக் கட்டி விடுமா? போண்ணா, பயங்கரமாகக் கதை கட்டுகிறாயே! அப்பேர்ப்பட்டசூராதிசூரன் யாராம்?” என்று உள்ளூர வியப்பு துளிர்க்க வினவினாள் தங்கை,

பொதுவாக. சுகந்தன் இது போல அளக்கிறவன் அல்ல, இப்போது மட்டும். அவன் மனதில். அப்படி என்ன நிச்சயம்?

“கதிரவன்!” என்ற அண்ணனின் பதிலில். சுரபி நிஜமாகவே அதிர்ந்து போனாள் எனலாம், ஆனால் என்ன இதமான. ஆறுதலான அதிர்ச்சி!

சட்டென சுகந்தனின் பூடகப் பேச்சும் அவளுக்குப் புரிபட்டது,

பெரிதாக. அவள் கதிரவனையே நினைத்துக்கொண்டு இருந்தது இல்லை, அது நிச்சயமே! அவன். அவன் என்று. அவள் ஒரு நாளும் கனவு கண்டது நிச்சயமாகக் கிடையாது,

ஆனால். கிட்டி முட்டி. அவளை மணக்கத் தகுதி வாய்ந்தவன் என்று ஒருவனைக் காட்டும்போது. உள்ளூர அவனோடு ஓர் ஒப்புமை தோன்றி. மனத் தராசில் மாப்பிள்ளைப் பையனின் தட்டு. கனமிழந்து மேலே போய் விடும் போல!

அதாவது. அவளது ஆழ்மனது. கதிரையே நினைத்திருந்தது போல!

ஆனால். அவன் என்ன நினைத்திருக்கிறானோ? அவனுக்குப் பிடிக்காவிட்டால்?

சட்டென மனம் கலங்கிப் போன அந்த வினாடிதான். சுரபி தன்னைத் தெளிவாக உணர்ந்ததும்!

# அத்தியாயம் -5

பதினைந்து வயதுப் பள்ளிச் சிறுமியாக இருந்த காலத்தில். கதிரவனின் தோற்றம் ஒரு ஹீரோ மாதிரி மனதில் பதிந்து விட்டிருந்த காரணத்தால். அவனோடு தன் வருங்காலக் கணவனை ஒத்திட்டுப் பார்க்க. சுரபிக்கு தோன்றியிருக்கலாம்,

அப்படி மட்டுமாக இருந்திருந்தால். அவனை விடச் சிறப்பாகத் தோன்றும் ஒருவனிடம் அவளது மனம் செல்ல வாய்ப்பும் இருந்திருக்கும்.

அப்படி இது வரை செல்லவில்லை என்பது ஒரு புறம் இருக்க. அவனுக்குத் தன்னைப் பிடிக்காவிட்டால் என்று ஒரு தரம் எண்ணிப் பார்ப்பதற்குள். அவளது உலகமே அழிந்துவிட்ட மாதிரியான கலக்கம் ஏன் வரவேண்டும்?

அவள் ஒன்றும். இன்னமும் உலகம் அறியாத பதினைந்து வயது பள்ளிச் சிறுமி அல்லவே!

ஏன். சுரேகா கூடக் கதிரவனை “ஆ” என்று அப்போது பார்த்தவள்தான், அவனைப் பற்றிய ஞாபகமே இல்லாமல் திருமணம் செய்துகொண்டு சென்று விடவில்லையா?

ஆனால். முதல் பார்வையிலேயே சுரபியின் ஆழ்மனதில் கதிரவனின் உருவம் பதிந்திருக்க வேண்டும், அந்த வயது. இத்தனை ஆண்டு இடைவெளி காரணமாக அவன் நினைவு மங்கியிருக்கலாம், ஆனால். நீறு பூத்த நெருப்பு என்பார்களே. அதுபோல உள்ளூர அவனது உருவம் இருந்ததாலேயே. ஏதோ ஒரு வகையில் அவனோடு ஒத்துப் பார்த்தே மற்றவர்ளைக் கழித்திருக்கிறாள்!

இப்போது. மறுபடி அவனைப் பார்த்துப் பழகவும். அந்த உருவம் கல்லில் பொறித்த எழுத்தாகி. அவள் மனதில் நிலை பெற்றுவிட்டது!

இனி அதை. அங்கிருந்து அகற்ற முடியாது!

ஆனால். இப்போது அவன் மனதை அறிவது அல்லவா. முக்கியம்?

அவன் மட்டும் மறுத்துவிட்டால் ............. அப்புறம். அவளுக்குத் திருமண வாழ்க்கை என்பது. ஏது?

ஆனால். அந்த நாளில். அவளிடம் காரணற்று அவன் காட்டிய கோபம்?

வளர்ந்துவிட்ட இன்றைய நிலையில். நாகரீகம் கருதி அவளோடு சகஜமாகப் பேசிப் பழகினாலும். அவன் மனதில் என்ன இருக்கிறது

என்று யாருக்குத் தெரியும்?

கண் முன்னே யாரோ சொடக்குப் போட்டார்கள்,

அண்ணன்தான்,

சொடக்குப் போட்டு அவளை நடப்புக்குக் கொணர்ந்து."என்னம்மா. கதிரவன் பெயர். உன் காலைக் கட்டிப் போட்டதா. இல்லையா?" என்று கேலி பேசினான் அவன்,

பெரு முயற்சி செய்து தன்னைச் சமாளித்துக்கொண்டு."பின்னே? யார் பெயரையோ சொல்லப் போகிறாய் என்று பார்த்தால். தினம் பார்த்துப் பழகுகிறரைப் போய் ........ அதிருக்கட்டும். என்னைக் கேட்கிறாயே. இது போல. அ ...கதிரவனைக் கேட்டாயா?" என்று சாதாரணம் போல வினவினாள் சுரபி,

"இன்னும் இல்லைடி! அப்பா. அம்மாவிடம் கூடத் தெளிவாக எதுவும் பேசவில்லை, இன்றுதான் கேட்டேன், அடிக்கடி நீ அடித்த கூத்தில். முதலில் உன்னிடம் ஒரு வார்த்தை போடச் சொன்னார்கள், அப்புறமாகச் சேர்ந்து பேசலாம் என்றார்கள், வாயேன். அவர்களும் காத்துக் கொண்டுதான் இருப்பார்கள்!" என்று தங்கையை உள்ளே அழைத்துப் போனான் சுகந்தன்,

என்ன செய்வது? கதிரவனின் கருத்துத் தெரியாமலே. சுகந்தன் இந்தப் பேச்சை எடுத்துவிட்டானே! பிடிக்கவில்லை என்று. கதிரவன் விலகிப் போய்விட்டால்?

அடிக்கடி பார்த்துப் பேசுகிற அளவில் இருப்பது கூடத் தட்டிப் போய்விடுமா?

ஏதேதோ நினைத்து. சுரபியின் மனம் கலங்கலாயிற்று,

மகளின் முகத்தைப் பார்த்ததும். தந்தை வேறு நினைத்துப் பேசினார்,

"என்னம்மா? உன்னளவு கதிர் படிக்கவில்லையே. என்றிருக்கிறதா? பெரியப்பா. சித்தப்பா. நான் ...எல்லோருமே. அதிகம் படிக்காதவர்கள்தான், உன் தாத்தா எங்கள் சின்ன வயதிலேயே. பாம்பு கடித்து. போய்விட்டார், பெரியப்பா குறையற்றுதான் வளர்த்தார், நாங்களும். கிராமத்துப் பெரியதனக்காரர் வீட்டுப் பிள்ளைகளாகப் பக்கத்து டவுனுக்குப் போய்ப் படிக்கிறோம் என்று ஊர் சுற்றிக் கொண்டிருந்தோம், அண்ணன் .................. உன் பெரியப்பா ஒரு சின்னத் தகராறில். "எல்லாம் எங்களுக்கும் உரிமைதான்" என்று ஏதோ பேசிவிட்டார், "ஒரே உறையில் இரண்டு கத்தி இருக்கக் கூடாதுப்பா" என்று பாகம் பிரித்து. எங்கள் பங்கைப் பணமாகக் கொடுத்து

அனுப்பிவிட்டார், உன் பாட்டி அதை எங்கள் மூன்று பேருக்கும் தர. ஆளுக்கு ஒரு தொழிலைத் தொடங்கி. நாங்களும். பணம் அந்தஸ்தில் வளர்ந்தோமே தவிர. படிப்பு அதிகம் கிடையாது, புரிகிறதில்லையாம்மா? கதிரவனைப் பொறுத்த வரையில். வெறும் பூஜ்ஜியத்தில் இருந்து. உழைத்து முன்னுக்கு வந்திருக்கிறான், பிடித்த இடத்தை விட்டுவிட மாட்டான் என்பது. என் கருத்து, அதனால்  ...........”

“அதெல்லாம் நான் நினைக்கவில்லை. அப்பா, ஆனால். அவர் மனதில் என்ன இருக்கிறது என்று முதலில் கேட்டுவிடுங்கள், அவருக்கு என்னைப் பி பிடிக்காமல் போகலாம் அல்லவா?”

“உன்னையா?ஜோக்கடிக்கிறாயா. சுபி?” என்று சுகந்தன் கேட்டது. ஓரளவுக்கு ஆறுதலாக இருந்தபோதும். அதில் முழு நிம்மதியடைய. சுரபியால் முடியவில்லை,

ஏதோ ஒரு தடை. ஏதோ ஒன்று அவர்களிடையே தப்பாகி விடப் போகிறது என்ற எண்ணத்தை அவளால் ஒதுக்கவே முடியவில்லை!

அதனாலேயே. இந்தத் திருமணம் நடக்காதோ என்று. உள்ளூர அஞ்சி நடுங்கத் தொடங்கியிருந்தாள் அவள்!

சுரபி அஞ்சியது போல. பிடிக்கவில்லை என்று எந்த விதமாகவும் கதிரவன் சொல்லிவிடவில்லை, பாவனையில் காட்டவுமில்லை,

ஆனால். சுகந்தன் எதிர்பார்த்த விதமாக. “ஆஹா” என்று ஆனந்தத்தில் அவன் குதித்துக் கூத்தாடவுமில்லை! அந்த வகையில் அவனுக்கும் சற்று ஏமாற்றம்தான், அவனுடைய தங்கை சுரபியை விடச் சிறந்த பெண். கதிருக்கு எங்கே கிடைப்பாள்?

கூடவே. இது போன்ற ஒருசூழ்நிலையைக் கதிர் எதிர்பார்த்திருந்தானோ என்பது போன்ற ஒரு சிறு சந்தேகமும் தோன்றி. அவனுக்கு வியப்போடு. உறுத்தலையும் அளித்தது,

ஒரு வேளை. அவனது இன்றைய செல்வ நிலை காரணமாக. வேறு பலரும் இதே எண்ணத்தில் அவனை நெருங்கியிருந்தார்களோ? அதனால். பத்தோடு இன்னுமொன்றாகத் தங்கை தோன்றிவிட்டடளோ என்று அவமான நெருடலுடன். அவன் யோசிக்கையிலேயே. கதிர் வேறு கூறினான்,

“என்னைக் கௌரவப் படுத்தி இருக்கிறீர்கள். சுகன், ஆனால். இதில் என் முடிவு மட்டும் முக்கியமல்ல, நா ... ன்  ............நான். முதலில் உங்கள் தங்கையிடம் பேச வேண்டும், அதாவது. இந்த ...திருமணம் பற்றித் தனியாகப் பேச வேண்டும், பேசிய பிறகு. சுரபிக்குச் சம்மதமானால் ...

அது பற்றி. அது என் நல்வினைப் பயன்!" என்றான் அவன்,

இடைப்பட்ட எட்டு ஆண்டுகளில். இவன் வாழ்வில். "இருண்ட கற்காலமாக" எண்ணுமாறு. எதுவும் நேர்ந்திருக்குமா என்ற கலக்கம். சுகந்தனுக்கு ஒரு கணம் தோன்றி. உடனே மறைந்தது,

அவன் ஒன்றும். தங்கைக்குக் கணவனாகக் கதிரவனை எண்ணிப் பார்த்ததுமே. விழுந்தடித்துக்கொண்டு வந்து. அவனிடம் கேட்டுவிடவில்லையே, தங்கை. பெற்றோரிடம் இந்தப் பேச்சைத் தொடங்கு முன்பாகவே. கதிரவனின் முற்காலம் பற்றி. ஆள் விட்டு விசாரிக்கத்தானே. செய்தான்?

விசாரித்த அளவில். மற்றவனது கடும் உழைப்பு தவிரத் தவறான எந்தத் தொடர்பும் அவனுக்கு இருந்ததில்லை என்றுதான் தெரிய வந்திருந்தது,

அவன் பேச நினைப்பது. சொந்த விருப்பு வெறுப்புகள் பற்றியாக இருக்கக் கூடும்,

பேச்சின் பிறகும். சுரபியின் ஒப்புதல்தானே. முக்கியம் என்கிறான்? அந்த அளவுக்கு தங்கைக்கு மதிப்புக் கொடுப்பவன். அவளுடைய கணவனாக அமைந்தால். அவள் மகிழ்ச்சியாக வாழ்வாள் என்று. சுகந்தன் எண்ணினான்,

எப்படியும். கதிரவனும் சுரபியும் தனித்துப் பேசுவதை. அங்கே யாரும் தடுப்பதாக இல்லை,

சும்மாவே. தொழில் ரீதியாகத் தொடங்கி. இருவரும் அதிக நேரம் தனியே உரையாடுகிற வழக்கம் உள்ளவர்கள்தானே? இப்போது. வாழ்க்கைக்கான முடிவெடுக்கப் பேசுவதில் என்ன பிழை இருக்க முடியும்? இருவருக்குமே. அந்த உரிமை உண்டுதானே?

வெளியே அமைதியாகக் காட்டிக் கொண்டாலும். சுரபிக்குத்தான் நெஞ்சுக்குள் ரயில் ஓடுவது போலத் தடதடவென்று அடித்துக் கொண்டது,

அந்தச் சத்தம். அருகில் அமர்ந்து காரை ஓட்டும் கதிரவனுக்குக் கேட்டுவிடுமோ என்று அவளுக்கு அச்சமாகக் கூட இருந்தது,

அவன் காரணம் கேட்டால். அவளால் என்ன சொல்ல முடியும்?

ஆனால். அவன் ஒன்றும். அவளது படபடப்பை உணர்ந்தது போலவே தெரியவில்லை!

அவனது புதிய வீடு இருக்கும் கடற்கரைப் பகுதியில் காரை நிறுத்திவிட்டுச் சற்று நேரம் பேசாமல் அமைதியாக இருந்தான்,

இனிப் பொறுக்க முடியாது என்று சுரபிக்குத் தோன்றிய அந்த வினாடியில்."நாம் எதற்காக இங்கே தனியே வந்திருக்கிறோம் என்று உனக்குத் தெரியும் அல்லவா. சுரபி?

என்னைப் பொறுத்த வரையில். உன்னை மணப்பது. ஒரு வரம் போலத்தான், பெரும் பேறு! ஆனால் ....." என்று நிறுத்தி. ஒரு கணம் தயங்கினான் கதிரவன்,

"ஆனால் என்ன?" என்று கம்மிய குரலில் கேட்டாள் அவள்,

"எனக்கு ஒரு முக்கியமான கடமை இருக்கிறது. சுரபி, அது ..." என்று. அவனருகே கிடந்த அவனது பையைத் திறந்து. ஒரு படத்தை எடுத்து அவளுக்குக் காட்டினான்,

ஏழெட்டு வயதுச் சிறுமி ஒருத்தியின் படம். அது,

ஒரு கணம் திகைத்தபோதும். அந்தச் சிறுமியின் முகம் ஏதோ வகையில். அவளுக்கு அறிமுகமானதாக. யாரையோ நினைவுபடுத்துவதாக இருந்தது,

நிச்சயமாகக் கதிரவனை அல்ல! அப்படி நினைப்பது கூட. அசட்டுத்தனம்!

ஆனால். யார் இவள்?

இவளிடம். இவனுக்கு என்ன கடமை?

அவன் மறைக்காமல். விவரம் சொன்னான்,

"அந்த "ரிசார்ட்" உனக்கு மறக்கவில்லை என்பது. எனக்குத் தெரியும், ஆனால். அங்கே லலிதாக்கா. அவளுடைய மகள் ........" என்று அவன் அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே இடையிட்டு."எழிலரசி!" என்றாள் சுரபி,

ஓர் அரைப் புன்னகையோடு தோளைக் குலுக்கினான் கதிர்,"அவர்களையும் நீ மறக்கவில்லை என்று தெரிகிறது! நல்லது. சுரபி, தெரிந்துகொள். இந்தச் சிறுமி. எழிலரசியுடைய மகள்," என்று அவன் கூறவும். சுரபி திகைத்துப் போனாள்,

"எழிலரசியுடைய மகள் என்றா. சொன்னீர்கள்? படத்தைப் பார்த்தால். ஏழெட்டு வயது இருக்கும் போலத் தெரிகிறது! ....................."

"ஆமாம், மூன்று மாதங்கள் முன்பாக. ஏழு வயது முடிந்துவிட்டது," என்றான்

அவன் உணர்ச்சியற்ற குரலில்,

அந்தக் குரலில் கவனம் வையாமல்.”பின்னே எப்படி?” என்று வினவினாள்

அவள்,”எழில் அப்போது சிறு பெண் ..... கிட்டத்தட்ட. என் வயதுதானே? அதற்குள் எப்படித் திருமணம் செய்ய முடியும்? சட்டப்படித் தப்பு அல்லவா?”

“அதனால்தானோ. என்னவோ. எழிலுக்குப் பிள்ளையைக் கொடுத்த நாய். அந்த ராஸ்கல். அவளைத் திருமணமே செய்துகொள்ளவில்லை! நாயிலும். கெட்டிக்கார நாய்! “ என்றான் அவன். கசப்பும் வெறுப்புமான குரலில் எகத்தாளமாக!

பழைய கதிரவன் நினைவுக்கு வர. சுரபி திகைப்புடன் அவனது முகத்தைப் பார்க்க முயன்றாள்,

ஆனால். கார் ஜன்னல் புறமிருந்து உள்ளே திரும்பிய அவனது முகத்தில். சிறு இறுக்கம் தவிர. வேறு மாற்றம் தெரியவில்லை,

பேசியபோது. அவனது குரல் கூட அமைதியாகவே இருந்தது,”யாரோ. அவளைச் சிதைத்துவிட்டு. அடையாளம் காட்டாமல் ஓடிவிட்டான்! லலிதாக்கா உடைந்து போனார்கள், உருகி. மறுகி. சீக்கிரமே அக்கா போய்விட்டார்கள்,

“என் சம்பளப் பணம் எல்லாம். லலிதாக்காவிடம்தான் இருந்தது, அவர்களது சேமிப்பையும் என்னிடமே தந்து. எழிலுக்கு உதவச் சொன்னார்கள்,

“ஆனால். அவளுக்கு என்னத்தை உதவுவது? சும்மாவே அவள் அவமானமும். பயமுமாகக் குன்றிக் குறுகிப் போயிருந்தாள், இப்போது. தாயின் மறைவும் கூடச் சேர்ந்துகொண்டது, உதவி என்று பெரிதாக எதையும் செய்யுமுன்பாகவே. அவளும் பேறுகாலத்தில் போய்ச் சேர்ந்தாள்,

“நீங்கள் எல்லோரும் வந்து போய். ஓர் ஆண்டிலேயே எழில். அக்கா இரண்டு பேர் கதையுமே முடிந்து போயிற்று,

“இப்போது. குழந்தையைக் காப்பது. என் பொறுப்பாயிற்று, ஆனால். அந்த மாதிரி வயதிலும். நிலைமையிலும். என்னாலும்தான். என்ன செய்ய இயலும்?

“ஆனால். அந்த விடுதி உரிமையாளர்கள். லலிதாக்கா மேல் உன்ன மதிப்பால். அவளுடைய பேத்திக்கு உதவ முன்வந்தார்கள், ஐந்து ஆண்டுகள். அவர்கள் பொறுப்பில்தான். நிலா வளர்ந்தாள், அங்கே பெரியம்மா உடல் நலம் கெட. நிலா விஷயம் பிரச்சினைக்கு

உரியதாயிற்று,

“நல்லவேளையாக. அதற்குள் எனக்கும் வசதி வந்துவிட. அவள் படிக்கிற பள்ளி விடுதியிலேயே. தங்கிக் கொள்ளவும் ஏற்பாடு செய்தேன், அவளை ஓர் உயர்தரக் குடும்பத்துப் பெண்ணாக ..... ஒரு கனவான் மகளாக ..... அதாவது. உன்னைப் போல ஒருத்தியாக என்று வைத்துக் கொள்ளேன். அப்படி உயர்நிலைப் பெண்ணாக வளர்க்க. எனக்கு ஆசை! யாராலும் தூக்கி எறிய முடியாத. உயர்நிலைப் பெண்ணாக!

“ஆனால். என்னால் மட்டுமாக. அது சாத்தியம் அல்ல! என் பங்காக. நிலாவுக்குப் பணபலம் அளிப்பது. என்னால் முடியும்! ஆனால். அது போதாதே! இப்போது ..... இன்றைய நிலை என்ன என்றால். எனக்கு மனைவியாக வருகிறவள். இந்தச் சிறுமியை. ஒரு தாயின் பொறுப்போடு. கவனித்து வளர்த்தாக வேண்டும்! அடுத்தது. என் வருமானங்களில். மூன்றில் ஒரு பகுதி. லலிதாக்கா பேத்தி. நிலாவுக்குப் போகும்! அதில் குறுக்கிட. என் மனைவி உட்பட. யாருக்கும் அதிகாரம் கிடையாது!

“இந்த இரண்டிலும். உனக்கு மறுப்பு இல்லை என்றால் .....” என்று சுரபியின் கண்களைக் கூர்ந்து நோக்கினான் கதிரவன், ஒரு பெரிய மூச்சை உள்ளிழுத்தவன்.”நமது திருமணம் சந்தோஷமாக நடக்கும்!” என்று தன் நீண்ட பேச்சை. ஒருவாறு முடித்தான்,

திருமணம் நடக்குமாம்! அதிலும். “நமது திருமணம் நடக்கும்” என்றல்லவா. சொல்லிவிட்டான்! இதற்கு மேல். அவளுக்கு என்ன வேண்டும்,?

முகம் விகசிக்க.”எனக்கும் ...” என்று சுரபி ஏதோ சொல்ல முற்பட. அவளது உதட்டின் மேல். ஒற்றை விரலை வைத்து. அவளது பேச்சை நிறுத்தினான். கதிரவன்,

“வீட்டுக்குப் போய். பெற்றோர். அண்ணனுடன் கலந்துகொண்டு. அப்புறமாக முடிவு சொல்லு,” என்றான்,

சொல்லுக்கு நேர் மாறாக. உதட்டின் மேல் வைத்த விரலால். அவளது கன்னத்தில் கோலமிட்டான்,

என்னமோ உள்ளே விறுவிறுக்க. சுரபி திணறிப் போனாள்,

அவளது கன்னங்களில் செம்மையைக் கண்டதும். அவனது கண்கள் பளபளத்தன,”நல்ல பதில் வந்தால். என் சாம்ராஜ்ஜியத்துக்கு ஒரு ராணி கிடைத்தாள் என்று. எனக்குச் சந்தோஷமாக இருக்கும்.

சுரபி," என்று கிசுகிசுப்பாகக் கூறிவிட்டு. அடக்க மாட்டாத ஓர் உல்லாச முறுவலுடன் காரை எடுத்தான் அவன்.

அவன் அடக்க முயன்றும் முடியாமல்தான். கதிரவனின் முறுவல் காதோரம் வரை நீண்டு போயிற்று.

ஓரக் கண்ணால் பார்த்த அவளுக்கும் புன்னகை தானாக விரிந்தது.

வீட்டில் இறங்கிக்கொண்டு. விடை கொடுக்கும் விதமாகக் கையாட்டிய போதுதான். கதிர் ஏன் முறுவலை அடக்க முயன்றான் என்ற கேள்வி. அவளது மனதில் தோன்றியது.

சந்தோஷம் என்றால். மனம் விட்டு. அதைக் காட்ட வேண்டியதுதானே? அதுவும். அவளிடம் காட்டுவதில் எதற்குத் தயக்கம்? திருமணம் என்றால். இரு மனம் ஒன்றாவது எனும்போது. ஒன்றுக்கொன்று என்ன ஒளிவு. மறைவு?

பெற்றோரின் நினைவு வந்தது. அவளுக்கு, இருவருக்குமிடையே கோபதாபங்கள் எழுவது உண்டுதான், ஆனால். வெளிப்படையாகப் பேசி விடுவார்கள், எதனால். ஏன் கோபம் என்று ஒருவருக்கொருவர் தெளிவாகத் தெரியப்படுத்திவிடுவார்கள்,

அடிப்படையாக அன்பு இருவருக்குமே இருந்ததால். அடுத்தவரை நோகடிக்க என்று எதையும் செய்திருக்க வாய்ப்பில்லை என்பதும். இருவருக்குமே நிச்சயம், எனவே. வெறும் விளக்கமே போதுமானதாகி. நிமிஷங்களுக்குள் கோபம் மாறி. வீட்டில் குதூகலச்சூழ்நிலை ஏற்பட்டுவிடும்!

கதிரவனும். அவளும் கூட. அவளுடைய பெற்றோரைப் போலவே. மனமொத்து வாழ வேண்டும் என்று. மனதுக்குள் எண்ணிக் கொண்டாள் சுரபி, அவளது அன்பு பற்றி முழுமையாகத் தெரிந்துவிட்டால். அப்புறம். அவளிடம் தன் உணர்ச்சிகளைக் கதிரவன் மறைக்க மாட்டான்தானே?

சிறுமி நிலா பற்றிய விவரம் வெளிவந்தபோது. சுரபியுடைய குடும்பத்தினர் யாருக்குமே. அது உவப்பாக இருக்கவில்லை,

"என்னம்மா. நான் ஏதோ குண்டு போட்ட மாதிரி. மூன்று பேரும். இப்படி விழிக்கிறீர்கள்! விடுமுறைக்கு வீட்டுக்குக் கூட வர முடியாமல். பள்ளி விடுதியிலேயே தங்கிப் படிக்கிற பிள்ளை! பாவம் என்று பரிதாபப் படுவீர்கள் என்று பார்த்தால். என்னமோ மாதிரிப் பார்க்கிறீர்களே! பாவம்ப்பா. அந்தக் குழந்தை!" என்றாள் பொதுவாக,

"குண்டு போட்ட மாதிரிதான் எங்களுக்கு இருக்கிறது, இவ்வளவு காலம். தனியாக இருக்கிறார் என்று பார்த்தால். கையில் ஒரு குழந்தை

இருக்கிறது என்கிறாய்! சுரபி. இது எங்களுக்கு. ஆச்சரிமாகவும். இருக்கிறது, . அச்சமாகவும் இருக்கிறது, ...”

“என்ன ஆச்சரியம்? என்ன அச்சம்?” என்று புரியாமல் கேட்டாள் பெண்,

“இது .....இந்தக் குழந்தை. கதிரவனுடையது இல்லை என்று உனக்கு ...”

குறுக்கிட்ட”அம்மா!” என்ற அதட்டலைப் பொருட்படுத்தாமல்.”அந்தப் பெண் குழந்தை. கதிரினுடையது இல்லை என்று. உனக்கு என்ன நிச்சயம். சுபி?” என்று பேச்சை விடாமல் தொடர்ந்து. தன் கேள்வியைக் கேட்டு முடித்தாள் சுந்தரி,

மனதுக்கு. மனதே சாட்சி,. கதிர் கண்ணில். உண்மை தெரிகிறது,. அவர் என்னை ஏமாற்றமாட்டார் ,இப்படிப் பல சொற்றொடர்கள் மனதில் தோன்றிய பிறகும். சுரபி. அவைகளுள் எதையும் சொன்னாளில்லை!

ஆனால். தாயின் பேச்சை ஆமோதிப்பது போலச் சும்மா. மௌனமாக நின்று விடவுமில்ல,

“நீங்கள் சொல்வது போல உண்மை இருந்திருந்தால். நிலாவைப் பற்றி. இப்போது சொல்லத் தேவை என்ன? பள்ளி விடுதியில் இருந்தவளை. அப்படியே. மறைவாகவே இருக்க விட்டிருக்கலாம்தானே? குறைந்த பட்சமாக. எங்களுக்குத் திருமணம் ஆகும் வரையேனும். மறைத்திருக்கலாமே, ஆனால் செய்யவில்லையே! அவராகப் பேச்செடுத்துச் சொன்னார், அது ஏன் என்று யோசித்தீர்களா. அம்மா?”

அம்மாவை விளித்து முடித்தாலும். இது எல்லோருக்குமான கேள்விதான்.

“உன்னிடமிருந்து. கதிர் எதையும் மறைக்கவில்லை,. மறைக்க விரும்பவில்லை என்கிறாய்,. அதுதானே? ஒத்துக் கொண்டுதான் ஆக வேண்டும், ஆனால் யோசிம்மா, இந்தச் சிறு வயதிலேயே. ஓர் ஏழு வயதுப் பெண்ணின் பொறுப்பை. நீ ஏற்க வேண்டுமா? புது மணமக்களாக. உனக்கும் கதிருக்குமே சொந்தமாக இருக்க வேண்டிய பொழுது. எவ்வளவு சுருங்கக் கூடும்? அதை யோசித்துப் பார்த்தாயா. சுரபி?” என்று சுகந்தன் வினவினான்,

இளைஞனாக அண்ணன் ஒன்றை வினவ.”ஏழு வயதுப் பெண் என்றால். சில ஆண்டுகளிலேயே. இன்னும் என்னென்னவோ

கடமைகளை ஏற்க நேருமே! அதையெல்லாம் கூட. நன்கு யோசித்து முடிவு செய். சுபிம்மா," என்று அன்னையாகத் தன் கவலைகளைப் புரிய வைத்தாள். சுந்தரி,

"இந்த வயதுக்குரிய வேகத்தில் தீர்மானித்துவிட்டு. அப்புறமாக வருத்தப்படக் கூடாதும்மா," என்றார் தந்தையும்,"என்னைப் பொறுத்த வரையில். தொழில் ரீதியாக. அவனிடம் மிகுந்த நம்பிக்கை உண்டுதான் என்றாலும். வாழ்க்கை என்பது. இன்னமும் ஆழ்ந்து யோசித்துச் செய்ய வேண்டியது, தொழில் மாதிரி. ஒன்று தோற்றால் இன்னொன்று என்று நினைக்க முடியாது, அதனால் அவசரப்பட வேண்டாம்,"

"இது அவசரமா. அப்பா?" என்றாள் மகள். மறுப்புக் குரலில்,"கதிரின் கடமைகளை என் கடமைகளாக. அவர் அது பற்றிச் சொல்லி வரும்போதே. என் மனது ஏற்றுக் கொண்டுவிட்டது, பெரிய குடும்பத்தில் புகும்போது. மாமியார். மாமனார் நாத்தனார். மைத்துனர் என்று பல பொறுப்புகளை. இயல்பாக ஏற்பதில்லையா? எனவே. நான் தயாராகத்தான் இருந்தேன், ஆனால். கதிர்தான். உடனே பதில் சொல்ல வேண்டாம் என்று என்னைத் தடுத்தார், "வீட்டுக்குப் போய்ப் பெற்றோர். அண்ணனிடம் கலந்து பேசி. அதன் பிறகு முடிவு செய்" என்று சொல்லிவிட்டார், நானும். "இல்லையில்லை. என் வாழ்வு,. என் முடிவுதான்" என்னாமல். அபிப்பிராயம் கேட்டு. உங்களிடம் வந்து நிற்கிறேனே. இதெப்படிப்பா. அவசரமாகும்?"

சுரபியின் விருப்பம். இப்போது எல்லோருக்குமே புரிந்தது,

ஏற்கனவே கதிரவனை எல்லோருக்கும் பிடித்துப் போயிருந்ததால். உற்ற உறவினரின் கடமை என்றுதான். அவர்களும் பெண்ணை எச்சரித்தார்களே தவிர. திருமணத்தை யாரும் மறுக்கவில்லை,

எனவே. விரைவிலேயே. கதிரவனுக்கும். சுரபிக்கும் திருமணம் உறுதியாயிற்று,

சுரபியைப் பொறுத்தவரையில். "செவந்த் ஹெவன்" என்பார்களே. அதுபோல சொர்க்கத்தில்தான். முதலில் இருந்தாள்,

ஆனால். மெல்ல மெல்ல அவளுள் ஓர் உறுத்தல் தோன்றி. வளர்ந்துகொண்டே போயிற்று! அந்த உறுத்தலின் காரணம். அடி முதல். நுனி வரை. கதிரவன் மட்டுமே!

# அத்தியாயம் - 6

தன் மனதைப் பொறுத்த வரையில். சுரபி ரொம்பத் தெளிவாக இருந்தாள்,

கதிரவனை மறுபடியும் சந்தித்தபோது. அவளுக்கு சந்தோஷமாக இருந்தது, அவனது முன்னேற்றமடைந்த நிலையைக் காணுகையில் இன்னமும் அதிக மகிழ்ச்சியாக இருந்தாளே தவிர. மற்றபடி. அவனோடு திருமணம் என்றெல்லாம் அவள் நினைக்கவே இல்லை,

ஒருவேளை. அதுவரை திருமணம் வேண்டாம். வேண்டாம் என்று உருப் போட்ட வழக்கத்தில். அந்த எண்ணமே மறந்துவிட்டிருந்ததோ. என்னவோ?

ஆனால். கதிரவனோடு திருமணம் என்ற பேச்சை. சுகந்தன் தொடங்கிய பிறகோ. இந்தப் பிறவியில். திருமணம் என்று. அவளுக்கு ஒன்று நடப்பதானால். அது கதிரவனோடுதான் என்கிற அளவுக்கு. அவள மனதில் நிச்சயமாகிவிட்டது!

ஆனால். கதிரவனின் உள்ளத்தைப் பற்றித்தான். அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை,

அவனும் விரும்பியே தன்னை மணக்கிறான் என்றுதான். அவள் முதலில் எண்ணினாள் நம்பவே செய்தாள்,

பள்ளிச் சிறுமியாக இருந்த காலத்திலேயே. மிகச் சிறியதே என்றாலும். அவளது மனதில் ஒரு பொறி விழுந்தது போலவே. அவனிடமும் ஏதோ பாதிப்பு இருந்திருக்கிறது என்ற நம்பிக்கை!

திருமணம் பற்றி. அவர்கள் பேசிய தினம். அவனது பேச்சு. பார்வை. அவளது கன்னத்தில் விரலால் கோலமிட்டது … எல்லாமே. அந்த நம்பிக்கைக்கு. உரமிட்டு வளர்த்தன!

ஆனால். வெகு விரைவிலேயே. அந்த நம்பிக்கை ஆட்டம் கண்டுவிட்டது,

அந்த ஒரு நாளோடு. அவனது ஆசை. பாசம் எல்லாம் அஸ்தமித்து விட்டது போன்ற உணர்வு அவளுக்கு அடிக்கடி உண்டாயிற்று!

அல்லது. அவளைத் திருமணத்துக்குச் சம்மதிக்க வைப்பதற்காக மட்டுமே. அது போல … அவளிடம் அன்பு போல நடித்தானா?

அவனுக்கு. அவளைப் பிடிக்கவில்லை என்றால். திருமணத்துக்கு

அவளைச் சம்மதிக்க வைப்பதற்காக. அந்தப் பாடு படுவானேன் என்ற கேள்விக்கு. அதிகம் யோசிக்காமலேயே. அவளுக்குப் பதில் கிடைத்தது,

காரணம் எழிலரசியுடைய மகள்! கதிருடைய இன்றைய உயர்வுக்குக் காரணமானவளுக்குச் செய்யும் நன்றிக் கடன், குடும்பம் என்று. முன்பு அவன் நினைத்ததே. அந்த லலிதாக்காவையும். அவளுடைய மகள் எழிலையயும்தானே? அந்த இருவரும் இப்போது இல்லை எனும்போது. அவனது ஒரே குடும்பம். இப்போது எழிலரசி பெற்ற நிலா மட்டும்தான், எனவே. அவளை நல்ல விதமாக. பெரிய இடத்துப் பெண்ணாக வளர்ப்பது ஒன்றே. இப்போது அவனது குறிக்கோள்! “தாயின் இடத்திலிருந்து” வளர்க்க வேண்டும் என்றானே!

இப்போது கதிரிடம் இருக்கும் பணத்துக்கு. அவனுடைய மனைவியாக இருந்து நிலாவை வளர்க்கப் பல பெண்கள் முன் வரக் கூடும்தான், ஆனால். அவர்களது உண்மையான தரம். குணம் பற்றி அவனுக்கு என்ன தெரிய முடியும்? சுரபியானால். அந்த வகையில். “அக்மார்க்” முத்திரை குத்தப் பட்டவள்! பிறகென்ன?

அந்தச் சிறுமியின் நல்ல வளர்ப்புக்காக மட்டுமே. கதிரவன் அவளைத் தைரியமாக மணக்கலாம்,. மணக்கிறான்! அவ்வளவே!

மற்றபடி. திருமணம் நிச்சயமான உடனேயே. அப்பாடா. வேலை முடிந்தது என்று. ஒருவன் உடனே வெளியூருக்கு ஓடி விடுவானா. என்ன?

கொள்முதலில் ஏதோ தகராறு. தரம் குறைகிறது,. நேரில் சென்று பார்க்க வேண்டும் என்று அவன் சென்றதை. சுரபி முதலில் தவறாக எண்ணவில்லைதான்,

ஏனெனில். எந்தத் தொழிலிலுமே மூலப் பொருளின் தரம் மிகவும் முக்கியமே என்றாலும். உணவுப் பொருட்கள் வாங்கும்போது. “கண்ணில் விளக்கெண்ணையை விட்டுக்கொண்டு” என்பார்களே. அதுபோலக் கவனத்துடன் இருக்க வேண்டும் என்பது. சிறு வயதிலிருந்தே ஹோட்டல் தொழிலில் பழகியிருந்த சுரபிக்கு அரிச்சுவடிப் பாடம்!

என்னதான் வேலை இருந்தாலும். இந்தக் கம்ப்யூட்டர் யுகத்தில். செல்ஃபோன். லாப்டாப் எல்லாம் வைத்துக்கொண்டு. அவளோடு சற்று நேரம் ஆசையாகப் பேச முடியாமல் போகுமா?

பேசப் பிடிக்காவிட்டால் தவிர? ............... பேசப் பிடிக்கவில்லை என்று ஒரேயடியாகச் சொல்லிவிட முடியாது ...... நேரம் போவது தெரியாமல்.

எத்தனையோ விஷயங்களைப் பற்றி. அவளோடு அரட்டை அடித்தவன்தானே?

ஆனால். மனைவியாகப் போகிறவளிடம் காட்ட வேண்டிய. பாசமும். நேசமும் இல்லாததால். அந்த விதமாக இழைந்து குழைய. அவனால் முடியவில்லை,. வேலையைச் சாக்கிட்டு. வெளியூருக்கு ஓடிவிட்டான்!

எளிதாகக் கண்டுபிடிக்கக் கூடிய. சின்ன விஷயம்தான்! ஆனால். தொண்டையில் சிக்கிய முள்ளைப் போல வேதனை தரக் கூடியது! தந்தது!

வருங்காலக் கணவனின் அருகாமைக்கு ஏங்கிய சுரபியின் இதயம் என்னென்னமோ விளக்கங்களைத் தேடிக் கண்டுபிடித்து. வாடி வதங்கலாயிற்று,

அவளது கண்டுபிடிப்பை மெய்யாக்குவது போல."சுகம்,. சுகமா?"வுக்கு மேல் பேச. அவனுக்கு அதிக விஷயம் இருக்கவில்லை, அங்கே. அவனுக்கு என்ன மாதிரி சூழ்நிலையோ என்ற யோசனையில். அவளும். உரையாடலை நீட்டித்தது இல்லை,  ஆனால். இந்த நிலை மெல்ல மெல்ல மாறி. கதிரவனுக்கு. அவளோடு பேசப் பிடிக்கவில்லையோ என்ற சந்தேகத்தை உருவாக்கிவிட. அவளால் இயல்பாகப் பேசவே முடியாமல் போயிற்று,

வெளியூரிலிருந்து அவன் திரும்பி வந்த நாள். இன்னமும் மோசம்!

சுரபியின் வேலை. நிர்வாகம் சம்பந்தப்பட்டது, தலைமைஹோட்டலில்தான். நிர்வாக அலுவலகம் இருந்தது, தொழிலில் இணைந்த பிறகு. வாராவாரம். அவளை அங்கே சந்தித்துதான். இரு சாராருக்கும் இடையே உள்ள பணக் கணக்குகளைக் கதிர் கவனிப்பது வழக்கம், அப்புறமாக. அவளோடு சும்மா பேசிக் கொண்டும் இருப்பான்,

என்னவோ. அப்போது பேசுவதற்கு. அவனுக்கு நிறையவே விஷயங்கள் இருந்தன! இப்போதுதானே. இந்த வார்த்தைப் பஞ்சம் வந்தது!

அவன் வெளியூரில் இருந்த காலத்தில். அவனுடைய உதவியாள் ரங்கனிடம்  இந்தக் கணக்குகளின் பொறுப்பைக் கதிரவன் கொடுத்திருந்தான்,

அந்த வாரமும். ரங்கன் வந்து. சேர வேண்டிய பணத்துக்கான காசோலையை. ஏற்கனவே வாங்கிக்கொண்டு போயிருந்தான், என்றாலும். தன்னைப் பார்க்கவே. கதிர் வருவான் என்று. சுரபி வெகு நேரம் காத்திருந்தாள்,

காத்திருந்து. காத்திருந்து கண் பூத்தவளின் மனதில். அபாய மணி

பலமாக அடிக்கத் தொடங்கியது, அப்போதுமே. இன்றுதானே ஊரிலிருந்து வந்திருக்கிறான்,. அதிக வேலையாக இருந்திருக்கும் என்று தன்னைச் சமாதானப் படுத்திக் கொள்ளவே. சுரபி முயன்றாள்,

ஆனால். சுமார் எட்டு மணியளவில். சுகந்தன் ஃபோன் செய்து. அவனுக்காகக் காத்திராமல் சாப்பிட்டுவிடும்படி. பெற்றோரிடம் சொல்லச் சொன்னான், அத்தோடு நிறுத்தாமல்.”கதிர் சென்ற ஊரில். தேங்காய்ப் பால் விட்டு. ஒருவகை அல்வா “ஸ்பெஷலா”ம், நம் “அமுத”த்தில் வைக்கலாம் என்று. பேச்சு வார்த்தைக்காக. அங்கிருந்து ஆட்களைக் கூட்டி வந்திருக்கிறார், நாங்கள் சேர்ந்து சாப்பிடப் போகிறோம், நீ. அம்மா. அப்பா எல்லோரும் சாப்பிட்டு விடுங்கள்,” என்றான் அவன்,

ஆக. இன்னொரு கிளையில். அவளுடைய சகோதரனுடன்தான் பேசிக் கொண்டு இருந்திருக்கிறான்!

ஆனால். என்னதான் தொழில் பேச்சு என்றாலும். அவர்களையும் கூட்டிக்கொண்டு. இங்கே வந்து. அவளோடும் சேர்ந்து உண்டபடி. இந்தப் பேச்சை நடத்தியிருக்கக் கூடாதா?

தொழில் பேச்சு. அவளும் பேசுவதுதானே? அவள் ஒன்றும். ஒன்றுமறியாத முட்டாள் அல்லவே! அவனது கணக்குகளையே அவள்தானே பார்க்கிறாள்!

அப்படி அவள் முட்டாளாகவே இருந்திருந்தாலும். மணமுடிக்கப் போகிற பெண் என்றே ஆன பிறகு. அவனது உள்ளத்தில் அன்பிருந்தால். அவளைப் பார்க்க. பேச. ஆவல் எழுந்திராதா? அதற்காகவே. எப்படியும் வந்திருக்க மாட்டான்?

திருமணப் பேச்சு தொடங்குமுன். வெறும் லாபக் கணக்குப் பார்க்கும்போதே. இருவரும் எவ்வளவு நேரம் பேசுவார்கள்! எண்ணிப் பார்க்கையில். அதெல்லாம். “பசித்தவனின் பழங் கணக்காகத்” தோன்றி. அவளை ஏங்க வைத்தது!

அந்தப் பேச்செல்லாம்கூடத் திருமணத்துக்கு அவள் மறுத்து விடக் கூடாது என்பதற்காகக் கையாளப்பட்ட உத்தியோ என்று கலங்கினாள் அவள்,

மிகவும் சாதாரணமான விஷயங்களைப் பூதக் கண்ணாடி கொண்டு பார்த்துப் பெரிதாக்குகிறோமோ என்றும். சுரபி சில சமயம் தன்னைத் தானே கேட்டுக் கொள்வதும் உண்டுதான்,

ஆனால். ஒரு செடி வளரவே. தண்ணீரும் உரமும் எவ்வளவு தேவைப்

படுகிறது! ஆறறிவு படைத்த இரு தனிப்பட்ட மனிதருக்கிடையில் அன்பு வளர்ந்து நிலைக்க. எத்தனை செயல்பாடுகள் அவசியமாக இருக்கும்?

அதிலும். அவள் மனதில் அன்பு மிகுந்திருந்ததால். அதன் எதிரொலியைக் கதிரவனிடமும் காண ஆசைப்பட்டாள், ஆவலாக எதிர்பார்த்து அவன் முகத்தில் தேடினால். அவளுக்குக் கிடைத்தது ஏமாற்றமே!

சந்தேகத்துக்கு எத்தனை தரம் அவள் மீண்டும். மீண்டும் நோக்கினாலும். ஆசைக்குப் பதிலாக. அவனது கண்களில் இருந்தது. வெறும் ஆராய்ச்சியே!

நிலாவுக்காகவே மணக்கிறான் என்கிற அவனது குறிக்கோளைக் கண்டு பிடித்து விட்டாளோ என்று பார்த்தானா? அல்லது. அவளை நம்பலாமா கூடாதா என்று. அவளது குணம் பற்றி. இன்னமும் சந்தேகப்பட்டு ஆராய்கிறானா?

எவ்வளவு வேண்டுமானாலும் ஆராய்ந்து பார்க்கட்டும், மனதில் எந்தக கள்ளமும் இல்லாததால். அது பற்றி. சுரபிக்கு எந்தப் பயமும் இல்லை.

ஆனால். அவளை உறுத்தியது. வேறு! அவளிடம் அவனுக்கு அன்போ. நம்பிக்கையோ இல்லாதபோது. இந்தத் திருமணம் எப்படி வெற்றி பெறும்?

யாரோ ஒரு சிறுமியைத் தாயாய் இருந்து வளர்ப்பதற்காக. அவளுக்கு ஒரு திருமணமா. என்று எண்ணிப் பார்க்கவே. அவளுக்கு அவமானமாக இருந்தது.

அப்படித் திட்டமிட. அவனுக்கு எவ்வளவு தைரியம் இருக்க வேண்டும் என்று. கோபம் கூட வந்தது,

சுருசுருவெனச் சினம் பெருக. கல்யாணத்தை நிறுத்தி விடலாமா என்றுகூட. சுரபி ஒரு தரம் யோசித்தாள்,

ஆனால். அது ஒரே ஒருதரம்தான், நினைத்த கணமே. துடிப்பை நிறுத்திவிடும் போல நெஞ்சு வலித்துவிட. அப்படிக் கதிரவனை இழப்பது. முடியாத காரியம் என்று அந்த வினாடியே அவளுக்குத் தெரிந்து போயிற்று!

அவளுக்கு அவன் வேண்டும், உயிர் மூச்சுப் போல வேண்டும்!

அத்தோடு. கதிரும். அவளை இன்று மணந்து. நாளை விலக்கிவிடப் போவது இல்லை! ஒரு பெண் குழந்தையை வளர்ப்பது என்றால். அது ஒரே நாளில் முடிகிற விஷயமில்லை! பல ஆண்டுகள் ... குறைந்தது.

பத்துப் பதினைந்து ஆண்டு காலத்துக்குத் தொடரும் பொறுப்பு! அத்தனை ஆண்டுகள். அவனது வாழ்வில். அவளுக்கு ஒரு முக்கியப் பங்கு கொடுக்க. அவன் தயாராகத்தானே. இருக்கிறான்!

கதிரவனின் இளம் பிராய அனுபவங்கள். சுரபியிடம் இயல்பான அன்பை எதிர்பார்க்க விடாமல். அவனைத் தடுத்திருக்கலாம்! நிச்சயமாகத் தடுத்திருக்கின்றன! அதை. ஒத்துக் கொண்டே ஆக வேண்டும்!

பெற்ற தந்தையால் நிராகரிக்கப்பட்டு. வாழ்வின் முக்கியமான தருணத்தில் தாயைப் பறிகொடுத்து. கல்வி கற்கும் வாய்ப்பையும் இழந்து. ஒரே உறவான சொந்தத் தாய் மாமனால் வீட்டை விட்டே விரட்டப்பட்டு. பதினாறு. பதினேழு வயதில் பசியும். பட்டினியுமாக நடுத்தெருவில் நிற்க நேர்ந்தவனுக்கு யாரைப் பற்றி. என்ன நம்பிக்கை வரக் கூடும்?

இளமையில் வறுமைதான் மிகவும் கொடியது என்று பழைய பாடலே இருக்கிறதே!

தொழிலில் கதிரவன் வளரும் போதும். எத்தனைபேர். எப்படியெப்படி அவனை ஏமாற்றினார்களோ?

ஒவ்வொரு வினாடியும். அப்பாவியாக ஏமாறுவதற்காக ஒருவனையும். அவனை ஏமாற்றுவதற்காக இருவரையும் பிரம்மா படைப்பாராம் என்று. அவளுடைய தாயார் சொல்வதுண்டு! அதனாலேயே. பணக் கணக்குகளில் மிகவும் கவனமாக இருப்பது. சுந்தரியின் வழக்கம்.

அன்னை சொன்னது போல ஏமாற்றும் எத்தனை பேரிடம். கதிர் என்னேன்ன மாதிரி ஏமாந்து கஷ்டப்பட்டானோ?

அனுபவப் பாடத்தின் காரணமாக. யாரைப் பார்த்தாலும். முதலில். அவன் சந்தேகப் படத்தான் செய்வான்,

ஆனால். அவளுடையது உண்மையான அன்பு என்று. அவன் சீக்கிரமே புரிந்து கொள்வான், புரிந்துகொண்டு. அவளை நம்பவும். அவள் மேல் அன்பு செலுத்தவும் தொடங்கி விடுவான்,

அதுவரை. அவள் பொறுமையாக இருக்க வேண்டும்!

அப்புறம். வாழ்க்கை மெய்யாகவே சொர்க்கமாகத்தான் இருக்கப் போகிறது!

தனக்குள்ளாகவே முட்டி மோதி ஆராய்ந்து. தானே ஒரு முடிவுக்கு வந்த சுரபி. தனது இந்த உறுத்தல். தவிப்பு பற்றி. அவளுடைய

குடும்பத்தாரிடம் மூச்சுக் கூட விடவில்லை,

நிலாவின் பொறுப்பு பற்றி அறிந்ததுமே. ஏற்கனவே தயங்கியவர்கள். அவர்கள்! அவளது நேசம் கதிரிடம் என்று உணர்ந்ததால் மட்டுமே. இந்தத் திருமணத்தை ஒப்பினார்கள், இப்போது. அவனைப் பற்றியே. குழப்பம் என்றால். நிச்சயமாக எதிர்ப்பு  கிளம்பும்,

அத்தோடு. "இம்" எனுமுன் பிரச்சினையை எடுத்துக்கொண்டு பெரியவர்களிடம் ஓடுவதற்கு. அவள் ஒன்றும் சின்னக் குழந்தையும் இல்லையே! அவளது வாழ்க்கையை என்ன செய்ய வேண்டும் என்று. அவளுக்கே தெரியும்!

சுரபியின் இத்தனை மனப் போராட்டத்தினூடே. திருமண நாள் நெருங்கிக் கொண்டே வந்தது, திருமணத் தொடர்பான வேலைகளும். தங்கு தடையின்றி நடந்தன,

இதற்கிடையே. பள்ளி விடுதியிலிருந்து நிலாவை அழைத்து வந்து. இங்கே தன்னுடனேயே வைத்துக் கொண்டான். கதிரவன்,

அப்போதுதானே. நிலா தனியே இருக்கிறாள் என்று. அவளோடு நின்று பேசாமல். வீட்டுக்கு ஓட முடியும் என்று எண்ணிவிட்டு. அந்த எண்ணத்துக்காகத் தன்னையே சுரபி கடிந்துகொண்டாள்,

எதற்கும். இப்படி மனம் போனபடி வண்ணம் பூசுவது தவறு! நிலா இப்போதே எல்லோருடனும் பழகிவிடட்டும் என்றும். கதிர் எண்ணியிருக்கலாமே!

அதுவே சரியாக. சுரபியையும். நிலாவையும் விரைவிலேயே சந்திக்க வைத்தான்,

ஆனால். பாதி "டெர்மி"ல். அப்படி ஒரு பள்ளியிலிருந்து அழைத்து வந்து. இன்னொரு பள்ளியில் சேர்ப்பதற்காக. இரு பள்ளிகளுக்கும் கதிரவன் கொடுத்த "நன்கொடை"  சுரபியைத் திகைக்க வைத்தது!

நிலாவுக்காக. அவன் எந்த அளவுக்குப் போவான் என்பதைக் காட்டும் இன்னொரு சான்று. இது!

திருமணத்தையே அவளுக்காகத்தான் செய்கிறான் என்று சுரபி எண்ணியது முழுக்கவே சரிதான்!

ஒரு வகையில் வாட்டம் உண்டானபோதும். அப்படி மணப்பதற்கும். கதிர் அவளைத்தானே தேர்ந்தெடுத்திருக்கிறான் என்று ஓர் அற்ப சந்தோஷம் கூட. சுரபிக்கு உண்டாயிற்று!

உடனேயே அதை உதறி. நிமிர்ந்தாள்,

தன் மனதில் இருக்கும் அதே மோகத்தை. அதே நேசத்தை அவன் மனதிலும் மூட்டியே தீர வேண்டும் என்று அப்போது தீர்மானித்தாள் அவள் !

மற்றபடி. வேறேதோ காரணங்களுக்காக மணம் புரிந்துகொண்டு. கடனே என்று வாழ்வது கூடாது!

எதிர்காலம் எப்படி இருக்கவேண்டும் என்று. தனக்குள் ஒரு  முடிவு செய்துவிட்டபோதும். அதையும் சுரபி வெளிக் காட்டிக்கொள்ளவில்லை,

இருக்கட்டும், எல்லாம் நல்லபடியாகவே நடந்தேறும், அவளும் கதிரும் மீண்டும்

சந்தித்து. இப்படித் திருமணம் வரை செல்வதே. நன்மைக்குரிய அறிகுறிதானே?

இன்னுமொரு நல்ல அறிகுறியாக. நிலாவுக்கும். சுரபிக்கும். ஒருவரை ஒருவர் மிகவும் பிடித்துப் போனது,

கதிரவனைப் பொறுத்தவரையில். நிலாவிடம் மிகுந்த பிரியமே என்றாலும். அவளுக்காக நிறையச் செலவு செய்யத் தயாராக இருந்தானே தவிர. வேறு வகையில் அன்பைக் காட்ட. அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை,

நிலா  அதுவரை வளர்ந்த இடங்களில் ..... உல்லாச விடுதி உரிமையாளர்கள்

வீட்டிலோ. பள்ளி விடுதியிலோ. எந்த அழகான பெரியவர்களும் அவள் அருகில் வந்து. கைளைப் பற்றி.”ஹலோ நிலா. வெல்கம்!” என்று முத்துப் பல் வரிசை தெரிய.அழகாகப் புன்னகை செய்தது இல்லை!

அவளுக்கு என்ன பிடிக்கும் என்று அக்கறையாக விசாரித்ததும் இல்லை! அடுத்த முறை சந்தித்தபோது. ஞாபகமாக. அதை வாங்கி வந்ததும். நிச்சயமாக இல்லவே இல்லை!

எனவே. இதையெல்லாம் செய்த சுரபியை அவளுக்கு மிகவும் பிடித்துப் போய்விட. “ஆன்ட்டி. ஆன்ட்டி” ஆசையாக. அவளோடு ஒட்டிக் கொண்டாள் சிறுமி,

ஆவலும் ஏக்கமுமாக நிலாவிடம். எழிலரசியின் சாயலைக் கண்ட சுரபிக்கும். அவளை மிகவும் பிடித்துப் போயிற்று! கண்களில் ஆவலும் ஏக்கமுமாகக் கூடவே அலைந்த எழிலரசியை. அவள் மறந்துவிடவில்லை,

எவ்வளவு ஆசைகள் உள்ள பெண். எழிலரசி! எதையும் அனுபவித்து

மகிழாமல். எவ்வளவு சின்ன வயதில். என்ன மாதிரி. இறந்து போனாள்!

அந்த மாதிரி. எந்தத் தீமையும் அணுகி விடாதபடி. இந்த நிலாவை முழுப் பாதுகாப்போடு வளர்க்க வேண்டும் என்று எண்ணிவிட்டுத் தன்னைத் தானே நினைத்து ஆச்சரியப்பட்டாள் சுரபி,

இந்தச் சிறுமியை வளர்ப்பதற்காகத் திருமணமா என்று ஆத்திரப்பட்டவளும் அவள்தான், இப்போது. அதே நிலாவை நன்றாக வளர்ப்பது எப்படி என்று யோசிக்கத் தொடங்கிவிட்டாளே!

ஆனால். அவளது மனமாற்றம். நிலாவிடம் மட்டும்தான், முன்பு. கதிரவனிடம் ஒத்துக் கொண்டிருக்கும் காரணத்தால் மட்டுமாக. வெறும் கடமையாகச் செய்ய நினைத்தது,. இப்போது கடமை உணர்வோடு. அன்பும் சேர்ந்து கொண்டது, அவ்வளவே,

அதற்காக வாழ்க்கைத் திட்டத்தில் எந்த வித மாற்றத்தையும். அவள் எண்ணிக்கூடப் பார்க்கப் போவதில்லை! அவன் மாறும்வரை. அப்படித்தான் இருக்கப் போகிறது!

நிலா வந்து. சுரபியோடு ஒட்டிக்கொண்ட பிறகும். கதிரவனின் சந்தேகப் பார்வை அப்படியேதான் இருந்தது என்பது. சுரபிக்குச் சற்று ஏமாற்றமாகவே இருந்தது, ஆனால் அதுவே அவளது முடிவை உறுதிப்படுத்தவும் செய்தது,

தன் முடிவைச் செயல்படுத்துவதிலும். சுரபி எந்தப் பிரச்சினையையும் எதிர்பார்க்கவில்லை,

அவனும்தான். அவள் மேல் உள்ள ஆசையில். அவளை மணக்கவில்லையே!

எனவே. திருமணத்தன்று தனிமையில் சந்தித்தபோது. தன் கருத்தை அவள் சாதாரணமாகத்தான் சொன்னாள்,

“நாம் இருவரும் இன்னும் கொஞ்சம் நன்றாகப் பழகி. ஒருவரை ஒருவர் நன்கு அறிந்த பிறகு. மண வாழ்வைத் தொடங்கினால் சிறப்பாக இருக்கும் என்று தோன்றுகிறது, அதனால். இப்போதைக்கு நாம் நண்பர்களாகவே இருப்போம்,” என்றாள் அவள் அமைதியாகவே,

உள்ளே இல்லாத அமைதிதான், என்னதான் இதைச் சொல்வதற்காக அவள் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தபோதும். கூறுவது சற்றுக் கடினமாகத்தான் இருந்தது,

அவள் எதிர்பாராத அளவுக்கு. வலிக்கவும் செய்தது,

அவனிடம் இல்லாமல். அவள் உள்ளே மட்டுமாய் நிறைந்திருந்த

நேசத்தின் பாதிப்பு அது,

ஆனால். அவளது பேச்சைக் கேட்டதும். கதிரவன் நடந்துகொண்ட விதம்தான். அவளைத் திகைக்க வைத்துவிட்டது,

“என்னடீ சொன்னாய்?” என்று கண்கள் சிவக்க அவன் கேட்ட விதத்தில். சுரபி அரண்டுபோனாள் எனலாம்,

சுபிம்மா. கண்ணு என்று செல்லமாக வளர்க்கப்பட்ட அவளை. அநாகரீகமாக “டீ” போட்டு ஒருவன் அதட்டி அழைப்பதா?

இந்த நாலைந்து மாதங்களாகக் கதிரவன் நடந்துகொண்ட முறைக்கும். இந்தப் பேச்சுக்கும் எந்த சம்பந்தமும் இல்லையே! எது நிஜம்? எது நடிப்பு?

அவள் மலைத்து நோக்குகையிலேயே. அவன் மேலும் தொடர்ந்தான்,”எதிர்பார்த்துக் கொண்டேதான் இருந்தேன், ராட்சசி! கடைசியாகப் பணத்திமிரைக் காட்டிவிட்டாயேடீ!”

கை முஷ்டிகள் இறுக. வெறி கொண்ட கண்களுடன் அவன் நின்ற விதம். சுரபிக்கு எதையோ நினைவு படுத்திற்று,

வேறு எதை? எட்டு ஆண்டுகளுக்கு முன்பாக. அன்று அந்த உல்லாச விடுதியில். இதே போல அவன் கத்தியதைத்தான்!

அன்றிருந்த கதிரவன். சற்றும் மாறவே இல்லையா? மாறிவிட்டதாக. அவளும் குடும்பத்தாரும் எண்ணியதுதான் தவறா? இந்த எட்டு ஆண்டுப் பொருளாதார வளர்ச்சி. அவனைச் சற்றும் பண்படுத்தவே இல்லையா?

சிறுத்தை. தன் புள்ளிகளை மாற்றிக் கொள்வது இல்லை என்று எப்போதோ படித்தது. மகா அசந்தர்ப்பமாகச் சுரபிக்கு நினைவு வந்தது,

அப்படியானால். அவன் மாறியிருப்பதாக. மாறி விட்டதாக அவள் எண்ணியதான் தப்பு! விறைப்புற்ற நாணைப் போல. விறைத்த உடலுடன் எட்டு ஆண்டுகளுக்கு முன்பு போலவே கதிரவன் நிற்க. அன்றைய அதே கலக்கத்துடன். விழிகளை விரித்து. அச்சத்துடன் அவனை நோக்கினாள் சுரபி

# அத்தியாயம் -7

முன்பாவது. கதிரவன் அடிக்கக் கூடும் என்று தோன்றியதுமே. அங்கிருந்து பின்னங்கால் பிடரியில் இடிபட ஓடிச் சென்றுவிட. சுரபியால் முடிந்தது,

ஆனால். இந்தத் திருமண இரவின் தனியறையில் இருந்து. அவளால் எப்படி ஓட முடியும்?

ஓடினாலுமே. வெளியே எதிர்ப்படக் கூடியவர்களிடம் என்னவென்று அவளால் விளக்கம் சொல்ல முடியும்?

அந்தக் கேவலத்துக்கு. இவனிடம் அடி வாங்குகிற அவமானம் பரவாயில்லையோ

என்று எண்ணும்போதே. சுரபி நிமிர்ந்தாள்,

கேவலம் இல்லாமல் தவிர்ப்பதை யோசிக்காமல். எந்த விதக் கேவலம் மேல் என்றா தேர்ந்தெடுப்பது? அவனுக்கு இருக்கும் வாயும் வார்த்தைகளும். அவளுக்கும் இருப்பவைதானே?

ஒரு மூச்செடுத்து. தைரியத்தைக் கூட்டிக்கொண்டு. வேகமாகப் பேசினாள்,"பாருங்கள் கதிர். நீங்கள் இவ்வளவு ஆத்திரப்படும்படி ஒன்றுமே இல்லை, நாம் இருவரும் நல்ல நண்பர்கள், ஆனால். திருமண உறவுக்கு. இது போதாது, இன்னும் ..."

"இன்னும்? இன்னும் என்ன மாதிரிப் பழகியிருந்தால். திருமண உறவுக்குப் போதுமானதாக இருந்திருக்கும் என்கிறாய்? இப்போது ஒரு புது மாதிரிக் கலாச்சாரம் பரவி வருகிறதே. அதுபோல. முன்பே சேர்ந்து வாழ்ந்து. பழகிப் பார்த்திருக்க வேண்டும் என்கிறாயா? உன் குடும்பம் வேறு மாதிரி என்று எண்ணினேனே! அடடா! என்ன மடத்தனம்! எத்தனை நாட்கள் வீ ..........................................................................................................ணாகி விட்டன"

பொறுக்க மாட்டாமல் குறுக்கிட்டு."போதும். கதிர்!" என்று சீறினாள் சுரபி,"வேண்டுமென்று அநியாயமாகப் பேசாதீர்கள்! நீங்கள் சொன்ன அர்த்தத்தில் நான் பேசவில்லை என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும்!"

"நிச்சயமாக!" என்று ஒத்துக்கொண்டான் கதிரவன்,"நீ. இந்தப் பொருளில் சொல்லவில்லை என்று. எனக்கு நன்றாகவே தெரியும், அத்தோடு. நீ எதை மனதில் வைத்து. இப்படிப் பேசினாய் என்றும். எனக்குத் தெளிவாகத் தெரியும், மேல் மட்டத்து மகாராணி அல்லவா? இந்தக் கீழ்த்தட்டு மனிதன். உன்னைத் தொடுவதா என்று எண்ணிவிட்டாய் என்றும் எனக்கு மிக நன்றாகவே தெரியும்!" என்றான்

அவன் மீண்டும் பெருகிய சீற்றத்துடன்,

“சும்மா உளறாதீர்கள்!” என்றாள் அவளும் சினமடைந்து,”அப்படி உங்களைத் தாழ்வாக நினைக்கிறவள். உங்களை எப்படி மணந்திருப்பேன் என்று. அதை யோசிக்க வேண்டாம்?” என்று ஆத்திரத்துடன் கேட்டாள்,

“யோசிக்காமலா? திருமணத்துக்கு நீ ஒப்பியதில் இருந்தே. அது பற்றி ஆராய்ந்துகொண்டேதானே. இருக்கிறேன்! யோசித்துதான். இந்த முடிவுக்கும் வந்தேன்!”

“இந்த முடிவு என்றால்? அது என்ன முடிவு என்று இன்னமும் சொல்லவில்லையே!”

ஆத்திரமாக முறைத்துவிட்டு.”என் பணம்! வேறு என்ன? அதுதான் நிறையச் சம்பாதித்து வைத்திருக்கிறேனே! அதை விட மனமில்லை!” என்றான் அவன் ஓர் ஏளன உதட்டுப் பிதுக்கலுடன்,

“பெரிய பணம்!” என்றாள் அவள் அலட்சியமாக,”ஏன்? என் அப்பாவிடம் பணமில்லையா? அதற்காக உங்களை மணந்தாக வேண்டும் என்று என்ன கட்டாயம்?”

“இல்லாமல் என்ன? உன் பெற்றோர் கிழவர்கள் அல்ல, இன்னும் எத்தனை ஆண்டு காலம் கழித்து. அந்தப் பணம் உன் கைக்கு வருமோ? என்னது என்றால். மனைவி என்ற உரிமையால். இன்றைக்கே கிடைக்கும் அல்லவா?”

இது என்ன கோணல் கணக்கு?

கதிரவனது நிறுவனத்தின் பணத்தைக் கையாள்வது. முழுவதுமே அவனேதான், அவனுடைய உதவியாள் ரங்கன் கூட. கதிரின் கையெழுத்து இல்லாமல். ஒரு பைசா பெற முடியாது, பணத்தைத் தரமாட்டேன் என்று இவன் தகராறு செய்தால். கோர்ட். வழக்கு என்று போய். அதைப் பெறுவதற்கு எத்தனை ஆண்டு காலம் ஆகக் கூடும்?

அப்படி ஊரறியத் தகராறு செய்து. எப்போதோ வரக் கூடிய பணத்துக்காக. ஒருத்தி இவனைத் திருமணமே செய்வாளாமா? இதைத்தான். இவன் ஆராய்ந்து. ஆராய்ந்து கண்டுபிடித்தானாக்கும்!

கதிரவனின் ஆராய்ச்சிப் பார்வைகள் நினைவு வர. சுரபியின் மனம் சோர்ந்தது,

காரண. காரியங்களை ஆலோசித்துத் தொழில் முடிவுகளை மிகவும் கெட்டிக்காரத்தனமாக எடுக்கும் கதிர். சொந்த வாழ்வில். இப்படியா

கோட்டை விடுவான்?

தப்பாகவே நினைக்க துடித்துக் கொண்டிருந்தவனைப் போல அல்லவா. அவனது செய்கை இருக்கிறது!

கதிரின் எண்ணத்தின் போக்கே சரியில்லை என்பதோடு. அவளைப் பற்றியும். அவன் சற்றும் அறிந்திருக்கவில்லை என்பதும். இப்போது தெளிவாகத் தெரிகிறது!

முழுக்க முழுக்கத் தவறான முடிவுகளை எடுக்கும் இந்தக் கதிர். சுரபிக்கும் மிகவும் புதியவனாக இருந்தான்,

அந்த வகையில். அவள் எடுத்த முடிவு சரிதான்,

ஒருவரைப் பற்றி ஒருவர் சரிவர அறிந்திராத இருவர். திருமணம் ஆகிவிட்ட ஒரே காரணத்தினால் படுக்கையில் விழுந்து. பிள்ளைகளைப் பெற்று. இதே போல அன்னியர்களாகவே வாழ்ந்து முடிப்பது. சற்றும் நியாயம் இல்லை!

அதை. அவளால் ஒருபோதும் ஒத்துக்கொள்ள முடியாது!

இதை. மேலும் உரசல். விரிசல் ஏற்படாமல். இவனிடம் எப்படிச் சொல்வது?

விழி தூக்கிக் கதிரவனைப் பார்த்தால். அவன் குறுக்கும் நெடுக்குமாகப் புலி நடை நடந்து கொண்டிருந்தான்,

யாரை விழுந்து குதறுவோம் என்பது போல! வேறு யாரை? அவளைத்தான்!

ஆனால். அதற்கெல்லாம் பயந்து. காலில் விழுந்து கிடப்பது. தப்பு!

“கதிர் ...” என்று மெதுவாக அழைத்தாள்,

“ம்?” என்று உறுமல் பதிலாக அமைந்தது,

“பாருங்கள் கதிர். என் பேச்சை. இப்போது நீங்கள் நம்புவீர்களோ. என்னவோ? ஆனால். நீங்கள் கூறிய விதத்தில் நான் எண்ணியது கிடையாது, அத்தோடு எண்ணப் போக்கில். நமக்குள் இவ்வளவு வேறுபாடு இருக்கும் என்று நானுமே எதிர்பார்க்கவில்லை, அதனால். நாம் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும்வரை .......................................”

பொறுமையிழந்த ஒரு கையசைவினால். அவளது பேச்சை நிறுத்தினான் கதிரவன்,

“அந்த விளக்கம். ஏற்கனவே ஒரு முறை கேட்டாயிற்று, இங்கிருப்பது மரமண்டை என்று எண்ணி. இன்னொரு தரம் சொல்லத்

தேவையில்லை, பேச்சின் பொருளுரையும் எனக்குப் புரிந்துவிட்ட ஒன்றே, ஆனால். உனக்குத்தான் என்னைப் பற்றி. எதுவும் தெரியாதே! இப்போதேனும். என்னைப் பற்றிச் சில விவரம் தெரிந்துகொள், விருப்பம் இல்லாத பெண்ணோடு உரிமை என்று உறவு கொள்ளும் மிருகம் நானில்லை, ஆனால். வாக்குத் தவறினால். நான் சும்மா விட மாட்டேன், நிலாவைத் தாயாகக் கவனித்துக் கொள்வதாக வாக்குக் கொடுத்திருக்கிறாய், அதை நீ ஒழுங்காகச் செய்தே ஆக வேண்டும், அந்தக் கடமையிலிருந்து நீ நழுவ. நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன்! இத்தோடு இன்றைய நம் புரிந்து கொள்ளுதல்கள் போதும் என்று நினைக்கிறேன், இனி. இந்தக் கீழ் மட்ட மனிதனைப் பற்றிய எந்தப் பயமும் இல்லாமல். நீ நிம்மதியாகத் தூங்கலாம்! உனக்கே தெரியும்,. நான் தரையில் படுத்து உறங்கி வளர்ந்தவன்தான், எனவே. எனக்கு இது போதும்!” என்று ஏளனமும் வெறுப்புமான குரலில் கூறியவன். கட்டிலில் கிடந்த தலையணைகளில் ஒன்றை எடுத்துக்கொண்டு பால்கனிக்குச் சென்று. கதவைத் தன் புறமாகத் தாளிட்டுக் கொண்டான்,

சுனாமிப் பேரலையில் சிக்கி. உருண்டு புரண்டு. அரை உயிராகக் கிடப்பது போன்ற உணர்வு அவளுக்கு!

மேல் மட்டம். கீழ் மட்டம் என்று. கதிர் என்னவெல்லாம் பேசிவிட்டான்!

அவனது அமர்த்தலான நடையும். உடையும்! இது போன்ற தாழ்வுணர்ச்சி அவனுக்கு இருக்கும் என்று யாருக்குத் தெரியும்?

ஆனால். அப்படி அவனை மட்டமாக நினைத்திருந்தால். அவனை மணப்பாளா என்று ஒரு தரம் எண்ணிப் பார்க்கக் கூட. அவனுக்குத் தோன்றவில்லையே!

சொன்னால் காதில் வாங்குவதாகவே இல்லை!

ஆனால். அவனே தன்னைப் பற்றி ஒரு தரம் சொன்னது போல. சுயம்புவாகத் தானே உழைத்து முன்னுக்கு வந்தவர்களிடம். இது ஒரு பிரச்சினை! அடுத்தவர் சொல்லை. லேசில் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்! தனக்குத்தான் தெரியும் என்ற எண்ணம்!

எனவே. இவனிடம் சொல்லிப் புரிய வைப்பது கடினம்! இன்றளவில் மட்டுமல்ல, எப்போதுமே!

ஆனாலும். சுரபி நம்பிக்கை இழந்து விடவில்லை,

அவளிடம் இருப்பது. மாசுமறுவற்ற அன்பு! அது ஒரு நாளும்

தோற்காது!

என்றேனும் ஒருநாள். அவன் அதைப் புரிந்து கொள்ளத்தான் போகிறான்,

அதுவரை. அவள் பொறுமையோடு காத்திருந்துதான் ஆக வேண்டும்!

கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு. இயன்ற வரை. அவற்றைப் பெருக்கிக்கொண்டு. ஓர் அமைதிப் போராட்டத்தை அவள் நடத்தியாக வேண்டும்!

மறுநாள் கணவனோடு சொந்த வீட்டுக்குச் செல்லுகையில். நிலாவையும். சுரபி தன்னோடு  கூட்டிச் சென்றுவிட்டாள்,

“எங்களுடனும் நிலா நன்றாகப் பழகிவிட்டாள்,. அதனால். ஒரு வாரம் அவளை நான் பார்த்துக் கொள்ளுகிறேனே!” என்று சுந்தரி சொன்னது ஏன் என்று. மகளுக்குப் புரியாமல் இல்லை,

புது மணமக்கள்  சில நாட்கள் தனியாக இருக்கட்டும் என்ற நோக்கம்!

கணவன். மனைவி மட்டுமாக இருக்கையில். புரிதலுக்காக வாய்ப்புகள் அதிகமாகக் கிடைக்கலாம்தான், ஆனால். கடமை பற்றிக் கதிரவன் சொன்ன வார்த்தைகள். சுரபியைக் குத்தியிருந்தன,

எனவே.”இருக்கட்டும். அம்மா, எப்படியும் நிலா. எங்கள் குடும்பத்தின் ஓர் அங்கம்தான், அது போல. இன்றே குடும்பம் நடத்தத் தொடங்கி விடுகிறோமே! நாலு நாட்கள் வேறு மாதிரி இருந்து பழகிவிட்டால். அப்புறம். இவளே சுமையாகக் கூடத் தோன்றக் கூடும்,” என்று அவள் கோவையாக இயம்ப. அதற்கு மேல். சுந்தரி தடையேதும் சொல்லவில்லை,

வீட்டை அடைந்ததும். அவளுக்கென்று தயார்ப் படுத்தியிருந்த அறைக்கு நிலா ஓடிவிட. சுரபியும் கதிரவனும் ஒரு கணம் தனியே நின்றார்கள்,

“வீட்டு வேலைக்காக ஒரு பெண்ணை வரச் சொல்லியிருக்கிறேன், இதுவரை எனக்கும் நிலாவுக்கும் உணவு தயாரித்து அனுப்பிக் கொண்டிருந்த வீட்டாரின் சிபாரிசு, சமையலும் தெரியுமாம், என்னென்ன வேலைகள் செய்யத் தேவை என்று அவளிடம் சொல்லிவிடு, சம்பளம் நான் பேசிக் கொள்கிறேன்,” என்றான் அவன்,

“சரி,” என்றாள் அவள் சுருக்கமாக,

கண நேர அமைதியின் பின்.”நிலாவைக் கூடவே அழைத்து

வந்திருப்பதைப் பார்த்தால். குறைந்த பட்சமாக. அந்தக் கடமையையேனும் ஒழுங்காகச் செய்வதாக உத்தேசம் என்று தெரிகிறது!” என்றான் ஒரு மாதிரி மட்டம் தட்டும் குரலில்,

அவள் எந்தக் கடமையையும் அலட்சியப் படுத்துவதாக இல்லை,. ஆனால் கணவன் மனைவி உறவு. வெறும் கடமையாக இருக்கக் கூடாது என்பது. அவளது விருப்பம்  அவ்வளவே என்று நினைத்தபோதும். சுரபி அதை வாய்விட்டுச் சொல்லாமல் அடக்கினாள்,

அது. அவனை நேரடியாகக் குற்றம் சொல்வது போல ஆகும்! உடனே. அவன் தன் குற்றமில்லை என்று ஏதாவது சொல்லி வாதாடுவான், சண்டை சச்சரவை வளர்ப்பானேன்?

பொறுமையான போராட்டம் என்றால். அது கண்டபடி பேசிச் சண்டையிடுவது அல்ல! மௌனமாகத் தன்னை உணர வைப்பதுதான்!

எனவே.”உங்களுக்குக் காஃபி. டீ ஏதாவது வேண்டுமா?” என்று சமையலறைப் பக்கம் திரும்பினாள் சுரபி,

கண்கள் சிவக்க. ஒரு தரம் இறுகித் தளர்ந்தான். அவன்,

இயல்பாகிவிட்ட குரலில்.”இல்லை, இப்போது எதுவும் வேண்டாம், ஆனால். உன்னிடம் இன்னும் ஒன்று சொல்ல வேண்டும், என்னோடு வா,” என்று அவளை அழைத்துச் சென்றான்,

மறுப்பின்றி அவனைப் பின் தொடர்கையில். சுரபியின் மனம் வேகமாக வேலை செய்தது,

கதிரவனிடம். இன்னும் கொஞ்சம் கவனத்தோடு நடந்துகொள்ள வேண்டும் என்று உணர்ந்தாள் அவள், அவள் பேச்சை மாற்றுவதை. உடனே கண்டுகொண்டானே!

கண்டுகொண்டதும். வினாடிக்குள். என்ன கோபம்! தணல் மாதிரி. அவனது கண்களில் என்ன ஒரு சிவப்பு!

செந்தணல் மாதிரி அந்தக் கண்களைப் பார்க்கையில். நெஞ்சுக்குள்ளே ரயில் ஓடுவது போல. உள்ளே தடதடக்கத்தான் செய்தது!

வினாடிக்குள் அவன் சமாளித்துக் கொண்டதைக் காணும்போது. அச்சம். இன்னும்தான் அதிகமாயிற்று!

அவனிடம் கோபம் இருக்கிறது,. அதற்குக் கட்டுப்பாடும் இருக்கிறது!

இரண்டும் இணைந்த நிலை. இன்றைய வாழ்க்கைக்குத் தேவையான தன்மையே!

ஆனால். அவனது தாழ்வுணர்ச்சி? “ஸ்பாயில் ஸ்போர்ட்” மாதிரிச் சும்மாச் சும்மா தலையை நீட்டி. அவனைக் கெடுக்கிறதே!

இருவருமாகச் சேர்ந்து. சாதாரணமாகப் பேசித் தீர்த்திருக்கக் கூடியது, என்ன மாதிரித் திரும்பிவிட்டது?

இதை எப்படிச் சமாளிப்பது?

இந்தத் தாழ்வுணர்ச்சியைப் போக்குவதற்காக. ஒரேயடியாக அவனிடம் உருகுவதும். அவளால் முடியாது, அதுவும். இப்போது நிச்சயமாகச் சரியில்லை, ஒரே வார்த்தையில். நடிப்பு என்று முத்திரை குத்தி. ஒதுக்கி விடுவான், அது வேறு அவமானம் தேவையா?

கதிரவனின் அறை மிகவும் பெரியது, அதன் ஒரு பகுதியில். அலுவல் அறைபோல ஒரு சிறு பகுதி ப்ளைவுட் தடுப்பு கொண்டு. அழகாகப் பிரித்து அமைக்கப்பட்டிருந்தது,

அவளை அங்கே அழைத்துச் சென்று. சுவரோடு பதித்திருந்த ஓர் அலமாரியைக் கதிர் திறந்து காட்டினான்,

நிறையப் பணம்! கட்டுக் கட்டாக ரூபாய் நோட்டுகள்! பல லட்சங்கள் இருக்கும்!

“என்ன இது?” என்றாள் தன்னையும் மீறி,

வாய்ப்பை விடாமல்.”ரூபாய் நோட்டுகள்! பார்த்ததில்லை?” என்று நக்கலாகக்  கேட்டான் கதிர்,

வாயைத் திறந்திருக்கக் கூடாது என்று தன்னையே கடுத்துக்கொண்டு.”அதைக் கேட்கவில்லை, பாங்க்கில் போடாமல். இவ்வளவு மொத்தமாக. இங்கே வைத்திருக்கிறீர்களே என்று கேட்டேன்,” என்றாள் சுரபி. இயன்றவரை இயல்பாக,

“ஓஹோ! பாங்க் கணக்கு பற்றிக் கூடத் தெரியாத அடி மட்டம் என்று எண்ணி விட்டாய் போல! ஆனால் ...” என்று அவன் பேசுகையில்.”கதிர். ப்ளீஸ்!” என்று குறுக்கிட்டாள் சுரபி,

“தயவு பண்ணி. எதற்கும் இப்படித் தப்பாக எடுத்துப் பேசாதீர்கள், தொழில் லாபத்தில் உங்கள் பங்கே. செக்காகத்தானே தரப்படுகிறது? கணக்குப் பார்க்கும் எனக்கு. அது தெரியாதா? வீட்டில் இவ்வளவு பணத்தை வைத்திருப்பது. அவ்வளவு நல்லதில்லையே என்று கேட்டேன், அவ்வளவுதான்,” என்றாள்  வருத்தமான குரலில்,

தொடர்ந்த அமைதி அரை வினாடி நீளுமுன். சட்டென”சாரி!” என்றான் கதிரவன்,”பாதுகாப்பு பற்றிக் கவலையா? தேவையில்லை, இந்தக்

குடியிருப்புப் பகுதியே பாதுகாப்பானது என்பதோடு. நம் ஃப்ளாட்டிலும். பாதுகாப்புக்கென்று பல கருவிகள் பொருத்தியிருப்பது. உனக்கும் தெரியும், அத்தோடு. இங்கே இவ்வளவு பணம் இருப்பதும். இந்த அலமாரியைத் திறக்கும் விதமும் கூட. உனக்கும் எனக்கும் மட்டும்தான் தெரியும், மேலே சுருண்டிருக்கும் படத்தை இழுத்து விட்டுவிட்டால். இந்த அலமாரி இருப்பதே. யாருக்கும் தெரியாது,"

"ஆனாலும். அப்படியேனும் எதற்காக ......................................................"

"இது. உன் செலவுக்காக, பாங்க். அது. இதென்று அலைந்து கொண்டிராமல். உன் விருப்பம்போல. நினைத்தால் உடனே எடுத்துப் போய்ச் செலவு செய்வதற்காக, யாருக்கும். எந்தக் கணக்கும் காட்டத் தேவையில்லை, எனக்கும்தான்,"

என்ன பதில் சொல்வது என்று புரியாமல். சுரபி சற்றுத் திணறினாள்,

என்னதான் அவளிடம் நம்பிக்கை இல்லாவிட்டாலும். இதைக் கதிரவன் அவளுக்காகச் செய்திருக்கிறான்,

ஆனால். அவளுக்கு இந்தப் பணம் தேவையே இல்லை, அவளது வேலைக்குரிய ஊதியமாக வந்த பணமே. அவளது பாங்க் கணக்கில் நிறைய இருந்தது, அண்ணனும் பெற்றோரும். அவரவர் பரிசாக வேறு தந்திருந்தனர்,

அதற்கு மேலும். எதையும் வாங்கும் அவசியமே இல்லாமல். சீர் என்ற பெயரில். பிறந்த வீட்டார் இன்னும் எல்லாமே தந்திருந்தார்கள்,

ஆனால். இதையெல்லாம் சொன்னால். அவன் எரிச்சல் படக் கூடும்! அத்தோடு. அவள்தான். சண்டை. சச்சரவு கூடாது என்று தீர்மானித்திருக்கிறாளே!

எனவே."சரி கதிர், தேவைப்படும்போது எடுத்துக் கொள்கிறேன்," என்று. ஒப்புதல் தொனியிலேயே. அந்தப் பேச்சை முடித்தாள் அவள்,

> இரு கை தட்டினால்தான் ஓசை! அது போலக் கணவன் மனைவி. இருவரும் தகராறு செய்தால்தான் சண்டை என்று சொல்வார்கள்,

ஆனால். எங்கே. எங்கே என்று ஒருவர் தேடிக்கொண்டே இருக்கையில். வாக்குவாதம் வளராமல் தடுப்பது மிகவும் கடினம் என்று. சுரபி விரைவிலேயே தெரிந்துகொண்டாள்,

நிலாவின் வளர்ப்பிலேயே. எல்லா விஷயங்களிலும். சுரபி போராடத்தான் வேண்டியிருந்தது,

முதலாவதாக. சொல்லாமல் எங்கேயும் போகக் கூடாது என்று

நிலாவிடம். சுரபி சொல்லி வைத்திருந்தாள்,

ஆனால். மற்ற சிறுவர். சிறுமியரோடு விளையாடச் செல்லும் ஆர்வத்தில். இந்தக் கட்டுப்பாடு. நிலாவுக்கு மறந்து போய்விடும், அந்த வீட்டில். முதலில் அவள் தனியாக இருந்தபோது நடந்துகொண்டது போல. பெரியவளிடம் சொல்லாமலே. கதவைச் சாத்திக்கொண்டு. விளையாட ஓடிவிடுவாள்,

அதன் பிறகு. விளையாட்டு நண்பர்களில் கடைசி ஆள் போன பிறகுதான். அவளுக்கு வீட்டு நினைவு வரும், பிறகும். யாராவது தோழன். அல்லது தோழியின்

வீட்டில் கூட உட்கார்ந்து. கம்ப்யூட்டர் கேம் ஆடிக் கொண்டிருப்பதும் உண்டு,

வேலை முடிந்து. கதிரவன் வீடு திரும்பும்வரை. தனிமையை அந்தச் சிறுமி கழித்த விதம் அது,

நிலா மகிழ்ச்சியாக இருந்ததோடு. தனக்கும் பிரச்சினையில்லாது போகவே. கதிரவன். இதில் குறையேதும் காணவில்லை,

ஆனால். வீட்டுக் குழந்தை. கட்டுப்பாடே இல்லாமல். வெளியேயே சுற்றிக் கொண்டிருப்பது நல்லதில்லை,. படிப்பது. குடும்பமாகச் சேர்ந்து பேசிப் பழகுவது. எதற்கும் நேரமின்றிப் போகும் என்று சுரபி கண்டித்தால். மாமன். மருமகள் இருவருக்குமே. அது பிடிக்கவில்லை,

“என் நண்பர்களோடு விளையாடுவது எனக்குப் பிடிக்கிறது,. அது எப்படித்

தப்பாகும்? நான் போவேன்,. கட்டாயம் போவேன்,” என்றாள் பெண்,

பொறுப்பு என்ற பெயரில். சுரபி வெட்டி அதிகாரம் பண்ணுவதாகக் கதிரவன் குற்றம் சாட்டினான்,

சுரபி சொன்ன காரணங்களை அவன் ஒத்துக்கொள்வதாக இல்லை,

இந்த இரண்டாம் வகுப்பிலேயே. அப்படி என்ன பெரிய படிப்பு. என்று. நம்பாத குரலில் கேட்டான்,

அல்லது. நாம்தான் சிறந்த குடும்பமாக. எப்போதும் சிரித்து மகிழ்கிறோமா? அவளாவது சந்தோஷமாக இருக்கட்டுமே என்று. வாய்ப்பை விடாமல் மனைவிக்கு ஒரு குட்டு வைத்து. அவளது அடுத்த காரணத்தையும் அலட்சியப்படுத்தினான் அவன்.

நிலாவின் காது கேட்க. அவன் சொன்ன விதத்தில். உள்ளூரப் புகைவது தவிர. சுரபியால் எதுவும் செய்ய முடியாது போயிற்று!

அதன் பிறகு. நிலா. அவளிடம் காட்டி வந்த பிரியம் கூடக் கொஞ்சம் குறைவது போலத் தோன்றவும். சிறுமியின் முன்னிலையில். தன்னை மறுத்துப் பேச வேண்டாம் என்று. சுரபி கூற. மறுக்கும்படி வைத்துக் கொள்ளாதே என்று கதிர் திருப்ப. அவர்களுக்குள் ஒரு பெரிய வாக்குவாதமே ஏற்பட்டுப் போயிற்று,

நாள் கணக்கில். ஏதோ விதத்தில் தொடரவும் செய்தது,

இதை எப்படிக் கையாள்வது என்று தெரியாமல் சுரபி திகைக்கையில். “பேரன்ட் டீச்சர் “ சந்திப்பு நாள் வர. பிரச்சினை தானாகத் தீர்ந்தது,

நிலாவுடைய காப்பாளர்களாக. கதிரவன். சுரபி இருவரையுமே ஆசிரியை வரச் சொல்லியிருந்தார், போனால். நிலாவின் முன்னிலையிலேயே. இருவரையும் வைத்து வாங்கிவிட்டார் ஆசிரியை,

மட்டமான மதிப்பெண்கள்,. பாடத்தில் கவனம் வைப்பதில்லை,. வகுப்பு நடக்கும்போதே மற்றவர்களிடம் பேசுகிறாள்,. இன்னும் .....

“நன்றாகப் படிக்கிற பெண்,. புதிதாக வருகிறாள் என்று தலைமை ஆசிரியை சொன்னார்கள், அடுத்த டெர்மிலும் இந்த மாதிரி மதிப்பெண் எடுத்தால். அப்புறம் இங்கிருந்தும் வெளியேற வேண்டியதுதான்,” என்று. என்னவோ நிலா முன்பு படித்த பள்ளியிலிருந்து கல்தாக் கொடுத்து வெளியேற்றப்பட்டு வந்திருப்பது போன்ற ஊகத்துடன் ஆசிரியை கறாராகக் கூறவும். கதிர். நிலா இருவருமே. ஒரேயடியாக அரண்டு போனார்கள்,

வழக்கமான குத்தல். மட்டம் தட்டும் பேச்சு எண்ணி வருந்தினானோ. என்னவோ?

“சாரி!” என்ற முணுமுணுப்புடன் கதிர் ஒதுங்கிப் போய்விட.”நான் விளையாடவே போகாமல் படிக்கட்டுமா. ஆன்ட்டி?” என்று வெளுத்த முகத்துடன் கேட்டாள் சிறுமி, அவ்வளவு அச்சம்!

“அதெல்லாம் வேண்டாம், நான் சொல்லுகிற மாதிரிச் செய்,” என்று. சின்னவளைச் சமாதானம் செய்து. அவளது படிப்பு விளையாட்டு நேரங்களைச் சுரபி ஒழுங்குபடுத்த. நிலாவும் பணிவோடு அதைப் பின்பற்ற. அவளது கல்வி. ஆரோக்கியம் இரண்டுமே சிறக்கத் தொடங்கின,

அதே போல. சுரபிக்கு உடை வாங்குவதிலும் ஒரு போராட்டம் நடந்தது,

பணத்தைக் கொட்டி. “ஃப்ரில். லேஸ். “ வைத்துத் தைத்து. அதிலும் பளபளவென்று சம்கி. குந்தன் வேலைப்பாடுகள் செய்யப் பட்டிருந்த விலை உயர்ந்த உடைகளை மட்டுமே வாங்க வேண்டும் என்றான்

கதிரவன்,

ஆனால். நேர்த்தியாகத் தைக்கப்பட்டிருந்த. எளிய பருத்தி ஆடைகளையே அன்றாடம் அணியவென்று சுரபி தேர்ந்தெடுக்க. இருவருக்கும். அதில் ஒரு மூச்சு சண்டை வந்தது!

கஞ்சத்தனம் என்பதில் தொடங்கி. “உன் பிள்ளை என்றால். இப்படி மட்டமாக வாங்குவாயா” என்பது வரை. அவன் வாயில் வந்தது,

“நான்தான் நன்றாகச் சம்பாதிக்கிறேனே,. இதெல்லாம் இப்போது என்னால் முடியும் தெரியுமா?” என்பது. கதிரவனின் வழக்கமான முத்தாய்ப்பு!

கடைசியாக. நிலா வேறு.”ஆன்ட்டி வாங்குகிற உடைகள்தான் அணிவதற்குச் சுகமாக இருக்கிறது,” என்று. அவைகளையே அணியவும் தொடங்கினாள்,

அதையுமே. அவன் எளிதில் நம்புவதாக இல்லை,

ஒரு சின்னப் பெண். கண்ணைப் பறிக்கும் பளபளாக்களை ஒதுக்கி. சாதாரணப் பருத்தி ஆடைகளைத் தேர்ந்தெடுப்பாளா என்று. ஒரே சந்தேகம்!

இதுவே. அவனோ. சுரபியோ என்றால். பெரியவர்கள், ரொம்பவும் “ஜாலா”க அணிந்தால். நன்றாயிராது, அதிகப்படியாகத் தோன்றும்,

ஆனால். நிலா வயதில். பட்டாம்பூச்சி மாதிரி பளீரென்று அணியலாம்தானே? அப்படி அணியும் ஆசைதானே இயல்பு?

“உன்னிடம் பயத்தில் சொல்கிறாள் என்று நினைக்கிறேன், எப்போதேனும் ... நான் இல்லாதபோது அவளை அடித்தாயோ?” என்று ஒரு முறை கதிர் கேட்க. சுரபி கொதித்துப் போனாள்,

கஷ்டப்பட்டு. முன்பதிவு செய்து. அவன் அறிந்த ஒரு பெரிய மருத்துவரிடமே. கணவனைக் கூட்டிப் போனாள்,

வளரும் பிள்ளைகளுக்கு. இறுக்கமற்ற பருத்தி நூலாடைகள்தான் நல்லது,. அவைதான் உடம்புக்கும் சுகமாக இருக்கும் என்று அவரும் எடுத்துரைக்க. அந்தப் பிரச்சினை. அத்தோடு ஓய்ந்தது!

கொஞ்ச காலம். வீட்டில் அமைதி கூட நிலவியது!

ஏனெனில். தப்பு என்று புரிந்துவிட்டால். மன்னிப்புக் கேட்கக் கதிரவன் தயங்குவது இல்லை,

ஆனால். கதிர் அடுத்துச் செய்த பாசச் செய்கையால். நிலாவின் படிப்பே

பாழாகிவிடும் நிலைமை ஏற்பட்டுவிட்டது!

# அத்தியாயம் - 8

வீட்டுக்குள் அதிக நேரம் இருக்கத் தொடங்கிய பிறகு. செல்ஃபோனில் விளையாடுவது. நிலாவுக்குப் பிடித்தமான பொழுது போக்காயிற்று,

படிக்கும் நேரம் முடிந்த பிறகு. சுரபியின் செல்லில் விளையாடுவாள்,

கதிரவன் வேலை முடிந்து வீடு வந்ததும். அவனது செல்ஃபோனை வாங்கிக் கொள்வாள்,

பெரியவர்கள் இருவருமே. அவரவர் செல்ஃபோன்களை. இரவில் "சார்ஜரி"ல் போட்டுக் கொள்வார்கள்,

ஒரு நாள். "சார்ஜ்" பண்ண மறந்துவிட்டு. அன்று முழுவதும் கதிர் சிரமப்பட்டான்,

அப்போதே உள்ளூர நினைத்திருப்பான் போலும்,

அடுத்த ஓரிரு நாட்களில்."அங்கிள் ...........இல்லை. மாமா! இப்படித்தான் மறந்து போய். அங்கிள் என்றே. கூப்பிட வந்து விடுகிறது! இனிமேல். கவனமாக இருக்கிறேன். மாமா," என்று அவள் மன்னிப்புக் கோரவும். சிரித்தவாறு. அவளைத் தட்டிக் கொடுத்தான் கதிரவன்,

சலுகையாக அவன் மேல் சாய்ந்துகொண்டு. செல்லைக் குடையலானாள் அவள்,

சற்றுப் பொறுத்து."உங்கள் செல்தான் எனக்கு பிகவும் பிடித்திருக்கிறது. மாமா!" என்றாள் நிலா,"இது போல ஒன்று கிடைத்தால். எவ்வளவு நன்றாக இருக்கும்!" என்று ஆசைப் பெருமூச்சும் விட்டாள்,

மறு நாள் மாலையில். பெண்ணிடம் ஒரு பார்சலைக் கதிரவன் பெருமிதப் புன்னகையோடு கொடுக்க. அதை ஆர்வமாகப் பிரித்துப் பார்த்த நிலா. உற்சாகத்தில் கத்திக் கூச்சலிட்டாள்,

என்னவென்று எட்டிப் பார்த்த சுரபி. அப்படியே திகைத்து நின்றாள்,

ஏழு வயதே ஆன சின்னச் சிறுமிக்கு. செல் ஃபோனா? அதிலும். இவ்வளவு விலை உயர்ந்ததாக!

நிலாவின் மகிழ்ச்சியைப் பார்க்கையில். அந்த நேரத்தில். பெரியவளால் ஒன்றும் சொல்லவும் முடியவில்லை,

துள்ளிக் குதிக்கிறாளே! இதை எப்படிக் கெடுப்பது? தடுப்பது?

அவளது கோபம் முழுவதும். கணவனிடம்தான் பாய்ந்தது!

ஒரு சின்னப் பெண்ணுக்கு எதையெல்லாம் கொடுப்பது என்று. ஒரு தரம் யோசிக்க வேண்டாம்?

தாயாய் வளர்க்க வேண்டும் என்றானே. அவளிடம் ஒரு வார்த்தை கலந்து ஆலோசிக்க வேண்டாம்?

நிலாவுக்கு செல் வேண்டாம் என்று. சுரபி சொன்னால். இப்போது வீட்டில் பூகம்பமே நடக்கும்!

ஏற்கனவே. கதிரவன் உள் அலமாரியில் வைத்திருந்த பணத்தை எடுத்துச் செலவு பண்ணவே இல்லை என்று. வெகு சமீபத்தில்தான் ஒரு தகராறு நடந்திருக்கிறது,

அதை ஏன் எடுக்கவே இல்லை என்று முதல் கேள்வி!

எதையும் வாங்கும் தேவை இல்லாததால் எடுக்கவில்லை என்றாள் அவள். சாதாரணமாக,

அந்தப் பணத்தைத் தொடுவதாகவே இல்லையா என்று அடுத்த கேள்வி வந்தது!

“அதுதான் சொன்னேனே. தேவைப்படவில்லை என்று,” என்றாள் அவள் பொறுமையாகவே,

“எனக்கு வேறு சந்தேகம்!”

என்னவோ வம்பு வளர்க்கப் போகிறான் என்று புரிந்துவிட. சுரபி பேசாமல். அவனைப் பார்த்துக்கொண்டு நின்றாள்,

“உனக்கு ஏதேனும் பயமோ என்று சந்தேகம்!”

“என்ன பயம்?”

“இந்தப் பணத்தைச் செலவு செய்தால். அதற்குப் பதிலாக. உனக்குப் பிடிக்காத  எந்தக் கடமையையும் ஏற்க நேருமோ என்று ...அந்த மாதிரி அஞ்சுகிறாயோ என்று. சந்தேகம்!”

அவளுக்கு வலித்தது,

அவனிடம் உயிரையே வைத்திருப்பவளுக்கு அச்சமென்ன? பயமென்ன?

கதிர் மட்டும் அன்பையும் காட்டினால். ஆனந்தமாக ஏற்பாளே!

ஆனால். எதிலும் குறை காண்பது. உள்ளூர இழையோடும் இந்தக் கோபம். மறைமுகக் குத்தல் எல்லாம் அன்பின் அறிகுறி அல்லவே,

அவனை இழக்க விரும்பாமல் மணந்தாயிற்று, ஆனால். அதற்கு மேல்.

ஆடுமாடு போல வாழ்வது கூடாது என்பதில் அவள் உறுதியாக இருந்தாள், ஆனால். அதை ஏதோ ஒரு வகையான அவமானமாக அவன் நினைத்தால். அதில். அவள் செய்வதற்கு ஒன்றுமில்லை!

“அச்சமென்ன? நீங்கள்  மிருகம் இல்ல என்றுதான் சொல்லியிருக்கிறீர்களே!” என்று. முயன்று வருவித்த உணர்ச்சியற்ற குரலில். பதிலொன்றைக் கூறிவிட்டு. அங்கிருந்து சென்றுவிட்டாள் அவள்,

தொடர்ந்த நாலைந்து நாட்கள். புகையும் எரிமலைக்கு அருகில்.எப்போது வெடிக்குமோ என்ற கவனத்துடன் வாழ்வது போலத்தான். அவளது வாழ்க்கை நடந்துகொண்டு இருந்தது,

இந்த நிலையில். இன்னொரு இன்னொரு சச்சரவை எண்ணிப் பார்க்கக் கூட. சுரபிக்குப் பிடிக்கவில்லை, ஏனெனில். அவனிடம் இந்த செல்ஃபோன் பற்றிப் பேச்செடுத்தாலே பிரச்சினையாகத்தான் முடியும் என்பது. அவளுக்கு நிச்சயம்,

முதலில். நிலாவின் மகிழ்ச்சியைக் கெடுக்காதே என்பான்,

செல்ஃபோனை வைத்திருக்க வயது முக்கியமல்ல,. அதைப் பயன்படுத்தத் தெரிவதுதான் அவசியம்,. அந்த வகையில். நிலா. நம்மை விடக் கெட்டிக்காரி என்று பெருமை காட்டுவான்,

அடுத்து அவன் சர்வ நிச்சயமாகக் கூறுவது விலையைப் பற்றியும். யாரும் கவலைப் படத் தேவையில்லை,. ஏனென்றால் அவன் இப்போது நிறையத்தான் சம்பாதிக்கிறான் என்பது!

கடைசியாக. முன்னொரு காலத்தில் இருந்ததையே நினைத்துக்கொண்டிருக்கிறாள்,.  அதனால். அவன் என்ன செய்தாலும். அவளுக்குக் குற்றமாகப் படுகிறது என்று சொல்லி முடிப்பான்,

இதுவும் நிச்சயமே!

இத்தனையையும் பொறுத்துக்கொண்டு சும்மா இருக்கிற மனநிலை. அவளுக்கும் இப்போது இல்லை என்பதால். இந்த செல் பற்றிக் கதிரவனிடம் வாயைத் திறக்காமல் இருப்பதுதான் நல்லது!

“அம்மா. அய்யாவுக்குக் காஃபி,” என்று வேலைக்காரம்மா கூப்பிட்ட பிறகுதான். சுரபி நடப்புக்கு வந்து சேர்ந்தாள்,

இந்த செல் பற்றிய சிந்தனையில். கதிருக்குக் காஃபி தயாரிக்கச் சொன்னதையே மறந்துவிட்டாளே!

ஆனால். அவள் சும்மா இருக்க நினைத்தாலும். விடாமல்.”நிலாவின்

செல் எப்படி? பிரமாதமில்லை?” என்று பேச்சுக்கு இழுத்தான். கதிரவன், மனைவி பாராட்டுவாள் என்றும் எண்ணியிருக்கலாம்,

ஆனால். அவளது கருத்தே வேறு ஆயிற்றே!

நிலா வேறு அந்த அறையிலேயேதான். ஓர் ஓரமாக அமர்ந்து. செல்லில் ஏதோ “கேம்” விளையாடிக் கொண்டிருந்தாள், அவளது புது செல்லில்,

சின்னப் பெண் காது கேட்கத் தொடங்குவதைப் பார் என்று ஆத்திரத்துடன் அவனை முறைத்துவிட்டு விலகிப் போனாள் சுரபி,

“பிடிக்கவில்லையாக்கும்! சில பேர் இப்படித்தான், நல்லதைச் செய்தாலும். தப்பாகவே நினைப்பது ”

தப்பையே தேடுவது யார்? இவனா. நானா ? என்று எண்ணியபோதும். சுரபி நின்று பதில் சொல்லவில்லை,

ஆனால். கதிரவன் பின்னாலேயே வந்து கேட்டான்,”அது என்ன முறைப்பு? நிலாவுக்கு செல் வாங்கிக் கொடுத்ததில் என்ன தப்பு?”

ஒதுங்கிப் போனாலும். வேண்டும் என்றே. சண்டைக்கு இழுக்கிறான்!

கேட்டாயல்லவா? வாங்கிக்கொள் என்று அதன் பிறகு. அவளும் பதில் கேள்வி கேட்டாள்,”இப்போது நிலாவுக்கு எதற்கு இந்தப் பரிசு? அவள் ஏதேனும் சாதித்தாளா? அல்லது வேண்டும் என்று கேட்டாளா?”

“அப்படி எதற்காவதுதான் கொடுக்க வேண்டுமா? என் அன்புக்குரிய தங்கை பெண், என் விருப்பம்போல. எப்போது வேண்டுமானாலும். எதை வேண்டுமானாலும் வாங்கிக் கொர்டுப்பேன்!” என்றான் அவன் எடுப்பாக,

“தட்டுங்கள். திறக்கப்படும்,. கேளுங்கள் கொடுக்கப்படும் என்று பைபிளில் வருகிறது, முயற்சி தன் மெய் வருந்தக் கூலி தரும் என்கிறார் வள்ளுவர், தனக்கு ஒன்று வேண்டுமானால். சொந்த முயற்சி என்று ஒன்று இருக்க வேண்டும், முயற்சி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தையே. இது போலச் சும்மாச் சும்மாக் கொடுக்கும் பரிசுகளால் மழுங்கடிப்பது பெரிய தப்பு!”

“அது ...” என்று ஒருகணம் திகைத்தாலும். உடனே நிமிர்ந்து.”ஏன். உனக்கெல்லாம். நீ கேட்டுக் கேட்டுத்தான் உன் பெற்றோர் எல்லாம் வாங்கித் தந்தார்களாக்கும்? சும்மாக் கதை விடாதே!” என்று மடக்க முயன்றான் கதிர்,

“நான். அண்ணன் இருவருக்குமே. அம்மாவாகட்டும். அப்பாவாகட்டும். காரணமற்று எதையும் வாங்கிக் குவிக்க மாட்டார்கள், அதிலும்.

இவ்வளவு விலை உயர்ந்த ஒரு தொடர்புச் சாதனத்தை. அதன் மதிப்பறியாத சிறு வயதில் வாங்கிக் கொடுத்திருக்கவே மாட்டார்கள்! அதனால். என் பெற்றோரை இதற்குள் இழுக்காதீர்கள், அத்தோடு .....” என்று யோசனையோடு நிலா இருந்த அறைப் பக்கம் பார்த்தாள் சுரபி,

“நிலாவுக்குத் தப்பு சரி பற்றிய தெளிவு சற்றுக் குறைவு, அதனால். இது எங்கே போய் நிற்குமோ தெரியவில்லை,” என்றாள் சலித்த குரலில்,

சந்தடி சாக்கில். மறுபடியும் அவனைக் குறை கூறுகிறாள்!

தான் செய்தது தப்புதானோ என்ற ஐயத்தை ஒதுக்கி.”எங்கேயும் போகாது!” என்றான் கதிர்,”நிலா முன்னே மாதிரி இல்லவே இல்லை, விளையாடப் போனால். நேரத்துக்கு வந்து விடுகிறாள், ஒழுங்காகப் படிக்கிறாள், அப்புறம் என்ன?” என்று கேட்டான்,

“அப்புறத்தை. அப்புறமே பார்க்கலாம், ஆனால். இன்று நிலா நண்பர்களோடு விளையாடப் போகவே இல்லையே! அத்தோடு. உங்களுக்கே தெரியும். இது நிலா படிக்கிற நேரம் என்று, இன்னும் புத்தகப் பையை. அவள் தொடக்கூட இல்லை!” என்றவள். நிலா இருந்த ஹாலுக்கு மறுபடியும் சென்றாள்,

பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்று. அதே யோசனை அவளுக்கு, நிலா தனியே இருந்து வெறும் “கேம்” விளையாடுகிறவரை. அதனால் பிரச்சினை

ஏதும் நேராமலே இருக்கலாம், ..... அதையும் கூட. நிச்சயமாகச் சொல்ல முடியாது,

ஆனால். நிலா தனியே இருந்து வளர்ந்ததின் பாதிப்பு . தப்பு சரி பற்றிய தெளிவு. அவளுக்குக் கிடையாது, நினைத்ததை. நினைத்த நேரத்தில் செய்துவிடுவாள், நேரம் காலம் பாராது வெளியே போய் விளையாடியது. வகுப்பில் பேசியது எல்லாம் அந்தத் தெளிவின்மையின் விளைவே,

பள்ளியில் ஒரு பெரிய அதிர்ச்சி கிடைத்து. அதன் பிறகு இப்போதுதான். படிப்பு. வெளி விளையாட்டு. கம்ப்யூட்டர் கேம் எல்லாம் இன்னின்ன நேரம் என்று ஓர் ஒழுங்குக்கு வந்திருக்கிறது, அது கெட்டுப் போகக் கூடும்!

செல் கிடைத்ததில் இருந்து. அவள் இன்னும் அதைக் கீழே வைக்கவில்லை, எப்போது வைப்பாள் என்றும் தெரியவில்லை,

இப்போது நிலாவிடம். உனக்கு செல் வேண்டாம். தந்துவிடு என்று செல்லைக் கேட்டால். சுரபி உலக மகா வில்லியாகி விடுவாள், நிலா.

அவளுடைய மாமன் இருவருக்குமே,

அந்தப் பள்ளிப் பிரச்சினைக்குப் பிறகு. இப்போதுதான் நிலா அவளிடம் நல்ல பிரியமாகப் பேசிப் பழகத் தொடங்கி இருக்கிறாள் என்பதால். அதை கெடுத்துக் கொள்ளவே கூடாது,

பின்னே என்னதான் செய்வது?

“வீட்டுப் பாடம் இல்லையா. நிலா?” என்று. சுரபி மெல்லக் கேட்டுப் பார்த்தாள்,

செல்லில் இருந்து பார்வையை எடுக்காமலே.”இருக்கிறது ........ ஆனால். உடம்பு சரியில்லாததால் வீட்டுப் பாடம் செய்யவில்லை என்று. நாளைக்கு ஒரு நாள் மட்டும் பொய்க் காரணம் சொல்லிக் கொள்ளலாம். ஆன்ட்டி! வாரம் முழுதும் செய்துவிட்டேன், ஒரே ஒருநாள் செய்யாததற்கு டீச்சர் திட்ட மாட்டார்கள்!” என்றாள் நிலா,. சர்வ சாதாரணமாக,

“டீச்சரிடம் பொய்யெல்லாம் ..........” என்ற சுரபி மேலே பேசுமுன். அவள் பின்னோடேயே வந்திருந்த கதிரவன் குறுக்கிட்டான்,

“ஒரு நாள் அவளை விட்டுவிடேன். சுரபி, டீச்சரைத்தான் சமாளித்துவிடலாம் என்கிறாளே, இன்று மட்டும் அவள் புது செல்லில் விளையாடட்டும்,” என்று கதிர் முடிவு சொல்ல. பற்களை நறநறவென்று கடிப்பது தவிர. சுரபியால் ஒன்றும் செய்ய முடியாது போயிற்று,

ஏனெனில். நிலாவின் முன்னிலையில். கதிருக்கும் அவளுக்கும் இடையே உள்ள மன வேறுபாடுகளைக் காட்டிக்கொள்ளக் கூடாது என்று. அவள் ஏற்கனவே முடிவு செய்திருந்தாள்,

பெற்றோர். அல்லது பெற்றோர் பொறுப்பில் உள்ளவர்கள். சும்மாச் சண்டை போட்டுக் கொண்டிருந்தால். பிள்ளைகளின் மன அமைதி கெட்டுவிடும். அப்புறம். அவர்களை நல்லபடியாக வளர்ப்பது கடினம் என்பது. அவளது கருத்து,

நிலாவுடைய பெற்றோராக அவளை வளர்ப்பது. அவர்கள்தானே?

எனவே. கணவனுடனான வாக்குவாதங்களை. இயன்றவரை நிலாவின் முன்னிலையில். சுரபி வைத்துக் கொள்வதில்லை,

வகுப்பு ஆசிரியையிடம் பொய் சொல்லி சமாளிக்கிறேன் என்று நிலா சொன்னால். கூடாதம்மா,. பாடத்தைச் செய்துவிட்டு விளையாடு என்று நல்லது சொல்லித் தராமல். தப்புக்குத் தாளம் போடலாமா என்று. சுரபிக்குக் கணவனிடம் பொல்லாத ஆத்திரம்தான்,

ஆனால். அதை வெளிக் காட்ட மனமில்லாததோடு. காட்டிப் பயனும் இராது என்பதால். அப்போதைக்கு ஒன்றும் சொல்லாமல் விட்டுவிட்டாள்,

ஆனால் ஒரேயடியாகச் சும்மா விடவும் மனமற்று. நேரக் கூடிய பாதகங்களை யோசித்து. இன்னின்ன செய்யலாம்,. இன்னின்ன செய்யக் கூடாது என்று சில பல புத்திமதிகளை. இதமாகப் பெண்ணுக்குச் சொல்லி வைத்தாள்,

தன் அழகிய “டச் ஸ்கிரீன்” செல்லையே வருடியவாறு இருந்தபோதும்.”சரி. ஆன்ட்டி!” என்று நிலா தலையாட்டவே. பெருமளவு நிம்மதியோடுதான் சுரபி படுக்கப் போனாள்,

மறுநாள் நிலாவைக் கிளப்பிப் பள்ளிக்கு அனுப்பிவிட்டு. “அமுத”த்தில் வேலைக்குப் போனாள்,

முன் போல முழு நேர வேலையாகச் செய்யாவிட்டாலும். உதவிக்கு ஓர் ஆளை நியமித்துக்கொண்டு. தன் நிதி நிர்வாகப் பொறுப்பை. சுரபி விடாமல் செய்துகொண்டுதான் இருந்தாள்,

நாற்பது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பாக எப்படி இருந்திருக்குமோ. சுரபியுடைய கணவனோ. பெற்றோரோ. இதற்குத் தடை சொல்லவே இல்லை! அண்ணன் சுகந்தனோ. அவளது வேலை நேரத்தில். கட்டாயமாகத் தங்கையைச் சந்தித்து. ஒரு ஹாய். பை சொல்லாமல் விடுவதும் கிடையாது,

சுரபிக்கும் படித்த படிப்பை வீணாக்காமல் பணி புரிகிறோம் என்ற திருப்தி ஒரு புறமும். பிறந்த வீட்டினரைத் தினமும் சந்திக்கும் மகிழ்ச்சி அடுத்த சுகம் என்று மனதுக்குள் இதமாகவே உணர்ந்தாள்,

அத்தோடு. கணவனின் நிதிக் கணக்கும் அவளது பொறுப்புள் அடக்கம்தானே? அவனது வளர்ச்சியைப் பார்க்கையில். அவளுக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கும், வெறும் ஜூஸ் கடை என்று இலகுவாக எண்ண முடியாமல். புதிது. புதிதாக என்னென்ன அறிமுகம் செய்து. வருமானத்தைப் பெருக்குகிறான் என்று. ஆச்சரியப்படுவாள்!

இன்னும் கொள்முதலில் வேறு. அதிகப்படி வருமானம்!

எங்கே தட்டினால். எங்கே பணம் கொட்டும் என்று தெரிந்து செயல்படும் கெட்டிக்காரத்தனம்!

ஆனால். தொழிலில் இவ்வளவு கெட்டிக்காரனாக இருப்பவன். சொந்த வாழ்வில் ஒன்றுமே தெரியாத மக்காக அல்லவா. இருக்கிறான்!

இல்லை, சீக்கிரமே. வீட்டுப் பிரச்சினைகளிலும். இதே திறமையோடு செயல்படுவான், அப்போது எல்லாம் நன்றாகிவிடும் என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டு. சோர்ந்த மனதை. சுரபி உற்சாகப்படுத்திக் கொள்வாள்,

அன்று பெற்றோர். அண்ணனைப் பார்த்துப் பேசியாயிற்று,

வேலை முடிந்துவிட்டது,

உதவியாளை அழைத்து. அடுத்துச் செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றித் தெரிவித்துக் கொண்டிருந்த போது. அவளது செல் ஒலித்தது,

திரையில் கதிரின் எண்ணைப் பார்த்ததும். அவளுக்கு வியப்பாக இருந்தது,

இன்னும் ஒரு சில நிமிஷங்களில். அவள் வீட்டுக்குக் கிளம்பி விடுவாள் என்று அவனுக்குத் தெரியும், அதற்குள் என்ன?

"உடனே கிளம்பி. நிலாவின் பள்ளிக்கு வா," என்றான் அவன் சுருக்கமாக,

பெற்றோர். ஆசிரியை சந்திப்பு தினம். சுரபிக்கு நினைவு வந்தது,

வகுப்பாசிரியை ஏற்கனவே கடுமையாகப் பேசியிருந்ததும்,

இன்றைக்கு வீட்டுப் பாடம் செய்யாததையும். அதற்குப் பொய்க் காரணம் சொன்னதையும் கண்டுபிடித்துப் பெரிதாக எடுத்துக்கொண்டு விட்டார்களா?

உதவியாளிடம் அவசரமாக வேலையைச் சொல்லி முடித்தாள்,

தந்தையிடம் சொல்லுவோமா. வேண்டாமா என்று ஒரு வினாடி யோசித்தவளுக்கு. வேண்டாம் என்று தோன்றிவிட்டது,

என்ன என்றே தெரியாதபோது. எதற்காக. எல்லோரையும கூட்டுவது? தேவைப்பட்டால். அப்போது பார்த்துக் கொள்ளலாம்!

தந்தையின் அலுவல் அறைக்குள் எட்டிப் பார்த்து. அங்கிருந்த பெற்றோரிடம் கையாட்டி விடை பெற்றுக் கொண்டு. சுரபி வேகமாகக் கிளம்பிச் சென்றாள்,

பள்ளி வரவேற்பில் நிலாவைப் பற்றிக் கேட்டால். தலைமை ஆசிரியையின் அறையில் இருப்பதாகச் சொல்லவே. சுரபி திகைத்தாள்,

தலைமை ஆசிரியை வரை. விஷயம் சென்றுவிட்டதா?

வகுப்பு ஆசிரியை திட்டியதற்கே நிலா பயந்து போனாளே! இப்போது எப்படி நடுங்குகிறாளோ!

தலைமை ஆசிரியை அறைக்குள் அனுமதி கேட்டுக்கொண்டு சென்று பார்த்தால். அவள் எண்ணியது போலவே. நிலா கண்ணீருடன்தான் நின்றாள்,

வேகமாகப் பெண்ணின் அருகே போய் நின்றுகொண்டு.”என்ன விஷயம்” என்று விசாரித்தாள்,

“நிலாவுக்கு “டீசி” கொடுக்கப் போவதாகச் சொல்லுகிறார்கள்,” என்றான் சிறுமியின் மறுபக்கம் நின்ற கதிரவன்,

நிலாவுடைய வகுப்பாசிரியையும் அங்கே பார்த்த சுரபிக்கு. ஒருவாறு விஷயம் விளங்கத் தொடங்கியது,

வீட்டுப் பாடம் செய்யாதது தப்புதான், பொய்க் காரணம் சொல்லி சமாளிக்க முயன்றதும் நிச்சயமாகப் பிழைதான், ஆனால். அதற்காகப் பள்ளியில் இருந்தே வெளியேற்றுவார்களா?

நம்ப முடியாமல். தலைமை ஆசிரியையைப் பார்த்தாள் சுரபி, அவள் படிக்கும்போதே. இதே மிசஸ் தேவதாசன்தான் தலைமை ஆசிரியை, பள்ளி மாணவியர் தலைவியாக இருந்தபோது. அடிக்கடி பார்த்துப் பேசியிருக்கிறாள், எங்கே பார்த்தாலும் புன்னகை சிந்துகிற அவரது முகம் இப்போது கடுமை காட்டியது,

இப்போது வாதாடுவது பயன் தராது என்று தோன்றிவிட. சுரபி பணிந்து பேசினாள்,”மேடம். இந்த ஒரு தடவை நிலாவை மன்னித்துவிடுங்கள். மேடம், இனிமேல் அவள் இது போலத் தப்பு. இன்னொரு தரம் செய்யாமல். நான் பார்த்துக் கொள்ளுகிறேன்,” என்றாள் கெஞ்சலாக,

அவளது கெஞ்சலுக்குப் பதிலாக. ஆசிரியைகள் முகத்தில் கடுமைதான் கூடியது,

“இது போலத் தப்பு. இன்னொரு தரம் வேறா?” என்றார் வகுப்பாசிரியை கோபமாக,

“அதற்கு வாய்ப்பே கிடையாது. சுரபி, ஒரு காலத்தில். மற்ற மாணவிகளுக்கு முன் மாதிரியாக இருந்த நீயா. இப்படிப் பேசுவது? உனக்குப் பள்ளி விதிகள் தெரியும்தானே?

பெரிய வகுப்புப் பெண்கள் கூட. செல்ஃபோன் கொண்டு வரவோ. பயன்படுத்தவோ கூடாது என்பது. இங்கே கடுமையாகக் கடைப்பிடிக்கும் விதி ,”

செல்ஃபோனா?!

சுரபி திகைக்கும்போதே. தலைமை ஆசிரியை மேலும் தொடர்ந்தார்,” ...

ஆனால் இந்த இரண்டாம் வகுப்புப் பெண். செல்ஃபோனை வகுப்புக்குக் கொண்டு வந்தது மட்டுமின்றி. வகுப்பு நடக்கும்போதே. அதில் திரைப்படமும் பார்த்துக் கொண்டிருந்திருக்கிறாள்! எவ்வளவு பெரிய குற்றம்! இதற்குப் பிறகும். இவளை எப்படிப் பள்ளியில் வைத்திருப்பது? மிஸ்டர் கதிரவன் பள்ளிக்கு நிறைய நன்கொடை கொடுத்தார்தான், ஆனால். அப்போது ஓர் அரசாங்க அதிகாரி மாற்றலாகிப் போய். ஓர் இடம் காலியாகவும் இருந்ததால்தான். இந்த நிலாவுக்கு. என் பள்ளியில் இடம் கொடுத்தேன், ஆனால். அவள் அதற்குத் தகுதியில்லை என்று காட்டிவிட்டாள், அதனால் ...” என்று. மேலே பேச ஒன்றுமில்லை என்பதை. ஒரு கையசைவால் தெரிவித்தார் ஆசிரியை,

சுரபியும். நிலாவிடம் இதை எதிர்பார்க்கவில்லை,

தப்பு. சரி பற்றிய முழுத்தெளிவு இல்லாவிட்டாலும். தன் பேச்சை நிலா கேட்பாள் என்று. அவள் எண்ணிக் கொண்டிருந்தாள், ஆனால். அவள் அவ்வளவு சொல்லியும். செல்ஃபோனைப் பள்ளிக்குக் கொணர்ந்து. என்ன மாதிரி மாட்டிக் கொண்டுவிட்டாள்!

“என்ன நிலா. இப்படிச் செய்துவிட்டாய்? உன்னிடம் எவ்வளவு சொன்னேன்!” என்றாள் மிகுந்த வருத்தத்துடன்,

“ஆன்ட்டி. ஆன்ட்டி!” என்று சுரபியின் கையைப் பிடித்துக்கொண்டு. நிலாவும் கதறிவிட்டாள்,”நீங்கள் சொன்ன மாதிரி. செல்லைப் பள்ளிக்குக் கொண்டு வரக் கூடாது என்றுதான் நானும் நினைத்தேன். ஆன்ட்டி! ஆனால். அந்தப் ப்ரீதி இல்லை. அவள் . நான் பொய் சொல்லுவதாகச் சொன்னாள். ஆன்ட்டி! கொண்டு வந்து காட்டினால்தான். எனக்கு இது போல நல்ல செல் தந்திருப்பதை நம்புவேன் என்றாள், அவளிடம் காட்ட மட்டும் செய்துவிட்டுக் கொண்டு போய்விடலாம் என்று. கொண்டு வந்தேன் ஆன்ட்டி! காட்ட மட்டும்தான் செய்தேன், அப்புறமா பைக்குள்ளேயும் வச்சிட்டேன், திடீர்னு. அவள்தான். நான் செல்லிலே சினிமாப் பார்த்தேன் என்று சொல்லி. டீச்சர் கிட்டே. செல்லைக் கொண்டுபோய்க் கொடுத்திட்டாள்! எப்போ. என் பையிலே இருந்து செல்லை எடுத்தாளோ. தெரியலை ஆன்ட்டி! நிஜம்மா. நான் சினிமாப் பார்க்கவே இல்லை ஆன்ட்டி! கா காட் ப்ராமிஸ்!” என்று. விசும்பி அழுதாள்,

“நீ படம் பார்த்ததாக. டீச்சர் சொல்கிறார்களே. நிலா?” என்றாள் சுரபி. சற்றுக் குழம்பி,

“இல்லை. ஆன்ட்டி! ப்ராமிஸ்! ப்ரீதிதான் பொய் சொன்னாள், டீச்சர் என்னைக் கூட்டி வர்ரப்போகூட. மிஸ்கிட்டே மாட்டி,. பெரிய

மிஸ் கிட்டே மாட்டி     என்று குதித்தாள். ஆன்ட்டி!" என்று. மறுபடியும் முகம் கசங்கி அழுதாள் சிறுமி,

சுரபிக்குப் பாவமாக இருந்தது, பெண்ணைப் பக்கவாட்டில். தன்னோடு லேசாக அணைத்து நின்று. யோசனையோடு பார்த்தாள்,

ஆசிரியைகள் இருவரும் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தார்களே தவிர. நிலாவின் விளக்கத்தில் குறுக்கிடவில்லை,

இதை. நல்ல அறிகுறியாகவும் எடுத்துக் கொள்ளலாம் .....

அவர்கள் இருவரையும் நோக்கி. சுரபி பேசத் தொடங்கினாள்,"மேடம். நிலா செய்தது தப்பில்லை என்று நான் சொல்லவே மாட்டேன், பள்ளிக்கு. அவள் செல்லைக் கொணர்ந்தது. குற்றமேதான், ஆனால். அது. ஒரு சிறு பெண்ணின் ஆர்வக் கோளாறினால் நேர்ந்தது, மெய்யாகவே. தன்னிடம் இப்படிப்பட்ட பொருள் இருப்பதாகத் தோழியிடம் காட்டிவிடும் ஆர்வம், சரியாகச் சொல்வதானால். இப்படிப்பட்ட விலை உயர்ந்த பொருளை. இந்தச் சின்ன வயதில். இவளுக்குக் கொடுத்தது. எங்களது குற்றம்தான், அதற்குமேல். நிலா சொன்னது. நிஜம். மேடம்! அவள் திரைப்படம் பார்க்கவே இல்லை!

"இதில். ப்ரீதியையும் ஒரேயடியாகத் தப்பு சொல்ல மாட்டேன்,. சின்ன வயதுப் பெண்ணின் பொறாமை! அவ்வளவே, ப்ளீஸ் மேடம்! நிலாவுக்குத் தேவையான பாடம் கிடைத்துவிட்டது, இனி ஒரு போதும். எந்தப் பிழையும். அவள் செய்ய மாட்டாள், தயவு பண்ணி. ரொம்பவும் தயவு பண்ணி. எங்கள் நிலா. தன் படிப்பை இங்கேயே தொடர அனுமதி கொடுங்கள். மேடம்,!" என்றாள். இறைஞ்சுதலாக,

இரு ஆசிரியைகளையும் பொதுவாகப் பார்த்துக் கோரிக்கை வைத்தவள். நிலாவுடைய வகுப்பு ஆசிரியையை நோக்கி."இந்த ஏழு ஆண்டுகளாகப் பெற்றோரற்று நிலா வளர்ந்த முறையால். இவளிடம் சில குறைகள் உண்டுதான் டீச்சர், ஆனால். அவள் கெட்ட பெண் அல்ல, எடுத்துச் சொன்னால் கேட்டுக் கொள்கிறவள், வெகு சிரமப்பட்டு. இந்தப் பள்ளியில் அவளைச் சேர்த்ததன் காரணமே. இங்கே அவள் நல்ல பழக்க வழக்கங்களைப் பெற்று. சிறந்த பெண்ணாக உருவாவாள் என்பதற்காகத்தான்,

"என் கணவருக்கு. நிலா என்னைப் போல வர வேண்டும் என்று ஆசை! நீங்களே சொல்லுங்கள். முதலில் இருந்ததற்கு. நிலா மாறிவிடவில்லை? படிக்காமல் இருப்பது. வகுப்பில் பேசுவது எல்லாவற்றையும் விட்டுவிடவில்லையா? அதே போல ... செல்லைக் கொணர்ந்தது

தப்புதான் என்றாலும். திருந்துவதற்கு. திருந்தி நல்லபடியாக வளர்வதற்கு. அவளுக்கு வாய்ப்புக் கொடுங்கள். டீச்சர்! ப்ளீஸ்!” என்று மன்றாடிக் கேட்டாள்,

சுரபி அங்கேயே படித்து. வளர்ந்தவள், நல்ல மதிப்பெண் எடுத்ததோடு. கடைசி ஆண்டு படிக்கையில். மாணவியர் தலைவியாகவும் இருந்தாள், எனவே அவளது பேச்சுக்கு. ஆசிரியைகளிடம் சாதகமான பலன் இருந்தது,

கடைசி முறை மன்னிப்பு என்று சொல்லி. நிலா அங்கேயே படிப்பைத் தொடர அனுமதி அளிக்கப் பட்டது,

“நிலாவுடைய தாயாகவே. நீ மாறிவிட்டாய். சுபி, இனி நிலாவின் வளர்ப்பு முழுக்க முழுக்க உன் பொறுப்பு, அவள் விஷயத்தில். உன்னிடம் கேளாமல். நானாக எதையும் செய்யவே போவதில்லை,” என்றான் கதிர்,

அவனை அறியாமல் விழுந்த “சுபி” என்ற அழைப்பில் கிறங்கி நின்றாள் சுரபி,

ஆனால் ...........................................................................................

# அத்தியாயம் - 9

பள்ளிச் சிறுவர்களுக்கு. அதிலும் சின்ன வகுப்புச் சிறார்களுக்குத் தலைமை ஆசிரியை. ஆசிரியர் என்றால். பெரும் பயமும். பக்தியும் இருக்கும்,

“மிஸ் கிட்டே மாட்டி விடுவேன்” என்று சொல்லி மிரட்டியே. சில வம்புக்காரக் குழந்தைகள். சக மாணவ மாணவியரை. விருப்பம் போல ஆட்டிப் படைப்பார்கள்,

ஆனால். அவர்களே தற்செயலாகத் தலைமை ஆசிரியையைப் பார்க்க நேர்ந்தால். நடுநடுங்கிப் போவார்கள்,

இரண்டாம் வகுப்புப் பெண்ணான நிலாவுக்கும். அது போன்ற அச்சம் நிறையவே இருந்தது,

“செல்ஃபோன் உன்னுடையதா?” என்று கேட்டதோடு. வகுப்பாசிரியை. தலைமை ஆசிரியையிடம் அழைத்துச் சென்றுவிடவும். அவள் நடுநடுங்கிப் போனாள்,

ஆனால். ஓர் இக்கட்டான நிலையிலிருந்து அவளை மீட்டுவிட்ட சுரபி. அவளுக்கு மிகவும் நெருக்கமானவள் ஆகிப் போனாள்,

கிட்டத்தட்ட அதே போன்ற நிலைதான் கதிரவனுக்கும்,

தொழில் முறையில். எப்படிப்பட்டவர்களையும் அவனால் சமாளிக்க முடிந்தது, ஆனால். பள்ளியில். அதுவும் இந்த மாதிரி உயர் ரகப் பள்ளியில். என்ன சொல்வது என்று ஒன்றும் புரியாமல். அவன் திணறிப போனான்,

அதிலும். இந்தத செல்ஃபோன் பற்றி சுரபி கவலைப்பட்டதை நக்கல் வேறு பண்ணியிருந்தானே!

பள்ளியிலிருந்து குற்றவாளியாக வெளியேற்றம் என்பது. நிலாவின் மனதில் எப்படிப்பட்ட காயமாக மாறுமோ?

அப்படி எத்தனையோ தழும்புகள். இப்போதும் அவனுக்கு இருக்கத்தானே செய்கின்றன?

லலிதாக்காவுடைய பேத்தியின் எதிர்காலத்தை. தன் அறியாமையால் கெடுத்து விட்டோமோ என்று கதிர் அப்போது ரொம்பவே கலங்கிப் போயிருந்தான்,

ஆனால். அந்த ஆசிரியைகளுக்கு ஏற்றவாறு பேசி. நிலைமையைச் சீர்

செய்த சுரபியை எண்ணி எண்ணிப் பெருமிதப்பட்டான் அவன்,

அதிலும். நிலா மீது எவ்வளவு பாசம் இருந்திருந்தால். இந்த அளவுக்குப் பேசுவாள்?

அவனிடம் எப்படியோ? ஆனால். பெண்ணுக்காக நிறையவே செய்கிறவள்தான்,

தாயாக இருந்து வளர்க்க வேண்டும் என்ற அவனது நிபந்தனையை. முழு மனதோடு ஏற்றுச் செயல்படுகிறவள்,

ஏதேதோ ஆத்திரத்திலும். ஆற்றாமையிலுமாக அவன் என்னென்னவோ சொன்னாலும் கூட. நிலாவின் நலத்தை சுரபி விட்டுக் கொடுத்ததே இல்லையே!

அதற்காக. அவனுடனேயே போராடியிருக்கிறாள்!

லலிதாக்கா அவனுக்கு இன்னொரு தாய் போன்றவள், அவன் பல வகையில். அவளுக்குக் கடன் பட்டிருந்தான், அந்தக் கடன் தீராமலே. அதைத் தீர்க்க முடியாமலே போய்விடுமோ என்று. அவன் அஞ்சியதுண்டு,

ஆனால் இன்று அவனுக்கு அந்த அச்சம் அடியோடு தீர்ந்தது, சுபியைக் காட்டிலும் சிறந்த தாய். நிலாவுக்குக் கிடைக்க மாட்டாள்!

பெற்ற தாயான எழிலரசி உயிரோடு இருந்திருந்தால் கூட. இந்த அளவுக்கு. நிலாவின் நலம் பேணியிருக்க முடியாது என்று எண்ணினான் அவன்,

மாமனும் மருமகளும் இந்த மாதிரி மனநிலையில் இருந்ததால். சுரபிக்கும் வீடு சந்தோஷமானதாக இருந்தது,

தொடர்ந்த சில நாட்கள். அவள் விரும்பிய சொர்க்க வாழ்வு. கையெட்டும் தூரத்திற்கு நெருங்கி வந்துவிட்டதாகவே சுரபியை எண்ண வைத்தன,

கடற்கரைப் பக்கமான வீடு என்பதால். தினமும் மூவருமாகக் காலையிலும். முடிந்தால் மாலையிலும் கடற்கரையில் சுற்றினார்கள்,

சிப்பி பொறுக்கிக்கொண்டு சும்மா நடப்பதில் தொடங்கியது. கடலில் கால் நனைப்பது. ஓடிப் பிடித்து விளையாடுவது என்று விரிந்தது,

பெரிய அலை வரும்போது. துணி நனையாமல் முட்டி மோதிக்கொண்டு ஓடி வரும்போது உரசுவதிலும். மணலில் கால் புதைய ஓடிப் பிடித்து விளையாடும்போது முட்டி மோதியதிலும். கணவனுக்கும் மனைவிக்கும் வேறோர் உலகமும் தெரியலாயிற்று,

வீட்டிலும். நெருக்கம் அதிகமாயிற்று, மூன்று பேருமாகச் சேர்ந்து நிலாவின் பள்ளி “ப்ராஜெக்ட்” டைக் கிடைத்த நேரமெல்லாம். சேர்ந்து உட்கார்ந்து செய்தார்கள்,

வகுப்பு ஆசிரியை பாராட்ட. அதைக் கொண்டாட. மாயாஜால் போனார்கள்,

முனைந்து படித்து. அடுத்த மாதப் பரீட்சையில் நிலா வகுப்பில் முதலாவதாக வந்துவிட. அதற்கு வேறு பாராட்டு கிடைத்தது, அதன் பின்னே இருந்த முயற்சியைக் கண்டுணர்ந்த ஆசிரியையின் பிரதிபலிப்பு,

தாங்க மாட்டாமல். பொறாமைக்காரப் ப்ரீதி. நிலா மீது ஏதோ புகார் கொடுக்க.”அன்று மாதிரிப் பொய் சொல்லுகிறாயா?” என்று ஆசிரியை அவளை நன்றாகத் திட்டிவிட்டார்களாம், அது மட்டுமில்லாமல். நிலாவை உயர்த்தி வேறு. பேசினார்களாம்!

மானசீகமாய் ஒரு கிரீடம் வைத்த மாதிரி. தலையை உயர்த்திக்கொண்டு அலைந்தாள் நிலா,

“நீங்கள் கற்றுத் தந்த கணக்கினால்தான் முதல் மார்க் கிடைத்தது!” என்று நிலா சுரபியைக் கட்டிக்கொள்ள. இருவரையும் சேர்த்து அணைத்து. தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தான் கதிரவன்,

எல்லாவற்றையும் விட. அவன் பார்த்த பார்வை!

அத்தோடு.”அதென்ன நிலா. என்னை மாமா என்கிறாய்,. சுரபியை மட்டும் பொத்தாம் பொதுவாக “ஆன்ட்டி” என்று அழைக்கிறாயே! நான் மாமா என்றால். சுரபி அத்தைதானே? அப்படி அழைத்தால்தானே.ஜோடி சரியாக இருக்கும்?” என்று மனைவியை நோக்கியவண்ணம். மருமகளைக் கேட்டான்,

“என்ன ஆன்ட்டி? அத்தை எனட்டுமா?” என்று ஆவலாகக் கேட்டாள் சிறுமி,

“ஆன்ட்டி என்றால். அத்தையும்தான், நீ அழைப்பதை. நான் அப்படித்தான் எப்போதுமே நினைத்துக் கொள்வது,” என்றாள் சுரபி ஓரக் கண்ணில் சிரிப்போடு,

“ஆஹா! இப்படி நமக்குத் தெரியாத எத்தனை விஷயம். உன் அத்தை மனதில் கிடக்கிறதோ. தெரியவில்லையே! நினைப்பதைக் கண்டுபிடிக்கிற இயந்திரம் எங்கே கிடைத்தாலும். முதலில் அதை வாங்கி விட வேண்டும், அது எங்கே கிடைக்கும் என்று உனக்குத் தெரியுமா? உனக்குத் தெரியுமா?” என்று இருவரையும்

கேட்டுஜோக்கடித்தான் கதிரவன்,

“அடடா. அப்படி ஒன்று இருப்பது. இதுவரை எனக்குத் தெரியாதே! எப்படியோ. வாங்கும்போது. இரண்டாக வாங்கி விடுங்கள், சமயத்தில் எனக்கும் ரொம்ம் ... பத் தேவைப்படுகிறது!” என்று சுரபி சற்று அலுத்த குரலில் பதிலுக்கு,

“எதற்கு அத்தை. அது தேவை? யார் மனதில் இருப்பது. உங்களுக்குத் தெரிய வேண்டும்?” என்று. சிறு வயதின் வெகுளித்தனத்தோடு நிலா கேட்க. மற்ற இருவர் முகத்திலும். நன்றாக அசடு வழிந்தது,

“சந்தடி சாக்கில். “அத்தை”யை நிலைநாட்டி விட்டாளே! நம் நிலாக்குட்டி. ரொம்பக் கெட்டிக்காரி!” என்று பேச்சைத் திசை மாற்றி கதிர் சமாளித்த விதத்தில். சுரபிக்குச் சிரிப்புப் பொங்கியது, சந்தோஷமும்தான்!

இவையெல்லாமே இனிய இல்லறம் தூரத்தில் இல்லை என்று சொல்லாமல் சொல்ல. சுரபி மகிழ்ச்சியில் மிதந்தாள்,

“என்ன சுபிக்குட்டி. ரொம்ப சந்தோஷமாக இருக்கிறாயே. ஏதாவது விசேஷமா?” என்று தாயார் சுந்தரி கேட்கிற அளவுக்கு. மிதப்பு!

லேசாக முகம் சிவக்க.”போங்கம்மா! அதெல்லாம் இப்போது இல்லை!” என்று சிணுங்கியபோதே. சீக்கிரமே அதுவும் நடக்கும் என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டாள் சுரபி,

மாலையில் பள்ளி முடிந்து நிலா திரும்பி வருமுன் முடித்துவிட வேண்டும் என்று. தன் சேலை ஒன்றில் கல் ஒட்டியவாறு உட்கார்ந்திருந்த சுரபி. தாயுடன் நடந்த இந்த உரையாடலை எண்ணித்தான் சிரித்துக் கொண்டிருந்தாள், அதற்குள். அம்மா எங்கே போய்விட்டார்கள்!

திடுமென. ஃபோனில் செக்யூரிடி அழைத்தான்,”அம்மா. உங்களைப் பார்க்கவேண்டும் என்று ஒரு பெரியவர் வந்திருக்கிறார், சாருடைய மாமாவாம், பெயர் பஞ்சநதமாம், சின்ன வயதில். சாருடன் இருக்கும் ஃபோட்டோ கூடக் காட்டுகிறார், சந்தேகப்படும்படியாக அவரிடம் எதுவும் இல்லை, ஆனால். ஆள்தான் ரொம்ப சாதாரணமாக இருக்கிறார், மேலே வீட்டுக்கு அனுப்பவா?” என்று கேட்டான்,

சாரோட மாமா!

கதிரவனின் பதினெட்டு வயதில். தாயை இழந்தவன் ஆயிற்றே,. தந்தை வகை அடைபட்ட தனியனாயிற்றே என்ற பரிதாபமே இல்லாமல். வீட்டை விட்டுக் கதிரை வெளியேற்றியவர்!

அந்த இரக்கமற்ற மனிதரை. ஏன் என்று ஒரு கேள்வி கேட்கவேண்டாம்?

கூடவே. அந்தக் குடியிருப்பின் செக்யூரிடி பற்றி. அவளுக்கு மகிழ்ச்சியும் உண்டாயிற்று, இவ்வளவு விவரமும் அறியாமல். சட்டென்று யாரையும். யார் வீட்டுக்கும் அனுப்பிவிட மாட்டார்கள், இன்னும் தேவை என்றால். செல்லில் ஃபோட்டோ கூட எடுத்து அனுப்புவார்கள், அதன் பிறகே. வீட்டார் சம்மதத்தின் பேரில் ஆளை அனுப்புவார்கள்,

“அனுப்புங்கள். வாட்ச்மேன், நான் பார்த்துக் கொள்ளுகிறேன்,” என்றுவிட்டுக் கைவேலை செய்த சேலையை மடித்து வைத்தாள் சுரபி,

கதிரவனுக்கும். அவனுடைய மாமனுக்கும் உருவத்தில் கொஞ்சம் கூட. ஒற்றுமை இருக்கவில்லை! அதனால்தான் சான்றாக. மருமகனோடு இருக்கும் புகைப்படத்தைக் கையோடு கொண்டு வந்தார் போலும்,

சுரபியிடமும் காட்டினார்,

“பாரம்மா, சின்ன வயசிலே. எல்லாருமாக எடுத்துக் கொண்டோம், இதைப் பார்க்கிறவரை. அந்தக் காவல்கார நாய். என்னைக் காம்பவுண்டுக்குள்ளேயே விடலை! அப்பறமும். அவ்வளவாக நம்பிக்கை இல்லை என்றுதான் நினைக்கிறேன்! அதற்காக. அந்தப் பயலை நன்றாகத் திட்டி. டிஸ்மிஸ் பண்ணிவிடு!” என்றார் அவர் உரிமையோடு,

“இங்கெல்லாம். காவல்காரரை மரியாதையாகத்தான் பேசுவது, சந்தேகப்படுவது. அவரது கடமை, கடமையைச் சரிவரச் செயததற்காகப் பாராட்ட வேண்டுமே தவிர. பழி வாங்கக் கூடாது!” என்றாள் சுரபி அமர்ந்த குரலில்,

சட்டென ஒடுங்கிக் குறுகிப் போனார். வந்தவர்,

ஆனாலும் உடனே சமாளித்து.”அதற்கில்லை. அம்மா, உன் வீட்டு விருந்தாளி. குடும்பத்துக்குப் பெரியவன்! என்னை அவமதித்தால். அது உனக்கும். கதிர்ப் பையனுக்கும். அவமானமில்லை? சம்பளம் கொடுக்கிறவர்களையே கேவலப்படுத்தவா. வேலைக்கு ஆள் வைப்பது? இன்றைக்கு விருந்தாளியை அவமதிக்கிறவன். நாளைக்கு உன் வீட்டுக்காரனையே அசிங்கப்படுத்த மாட்டான் என்று என்ன நிச்சயம்? அதனால். தராதரம் தெரியாமல் நடந்ததற்காகக் குகுறைந்தது அவனது சம்பளத்தையாவது. கட் பண்ணிவிடு, ………………………………………………………………………………” என்று தொடர்ந்த

அவரது பேச்சில். சட்டென இடைப் புகுந்தாள். சுரபி,

"செக்யூரிடிக்குச் சம்பளம் கொடுப்பது. இந்தக் குடியிருப்பு வீட்டாரின் சங்கம், அதில் யாரும் தலையிட முடியாது, ஆனால். ஏதோ தராதரம் என்றீர்களே. அது பற்றிக் கொஞ்சம் பேசலாம், உட்காருங்கள்," என்று ஒரு சோஃபாவைக் காட்டிவிட்டு. எதிர்ப்புற இருக்கையில் அமர்ந்தாள்,

பேச்சடங்கி பஞ்சநதம் அமர. மந்திரச் செய்கை போல. ஒரு பெண் வந்து. பழச்சாறு நிறைந்த தம்ளர் ஒன்றை. விருந்தாளி முன் வைத்து விட்டுப் போனாள்,

பல தினுசு பிஸ்கட்டுகள் அடங்கிய சிறு தட்டையும். அருகில் இருந்த டீபாய் மீது வைத்துச் சென்றாள்,

பிஸ்கட்டுகளைக் கண்டதும். அவரது கண்கள் பளபளத்தன,

ஒன்றை எடுத்து ஆசையாகக் கடித்தபடி."நீ நன்றாக இருக்க வேணும்மா! பசியறிந்து. உண்ணக் கொடுத்தாய். பார்! நிஜமான பெரிய வீட்டுப் பெண், ஆனால். காலையில் உன் புருஷனைப் பார்க்கப் போனால். என்ன செய்தான் தெரியுமா? வசதி வந்தால். வேண்டப்பட்ட உறவுக்காரர்களுக்கு நல்லது செய்ய வேண்டாமா? அவன் என்னிடம் முகம் கொடுத்துப் பேசவே இல்லை! ஏன். என்னைக் கண்டுகொள்ளவே இல்லைம்மா!" என்று குறைப்பட்டார்,

கதிரை வைத்துத்தான். இவரே. சுரபிக்கு உறவு, அப்படியிருக்க. அவனைப் பற்றி. அவளிடமே குற்றப் பத்திரிகையா?

எண்ணியதைக் காட்டி கொள்ளாமல்."ஏன் அப்படி?" என்று அமைதியாகக் கேட்டாள் அவள்,

"அதுதான் சொன்னேனேம்மா. புதுப்பணம்! பழசை மறந்து ..............." என்று எடுப்பாகத் தொடங்கியவர். சட்டென நிறுத்தி. அவள் முகத்தைப் பார்த்தார், மேலே பேச வார்த்தை வராமல். "அது ................................... அது ................................................................................................................." என்று தடுமாறலானார்,

"ஜூசைக் குடியுங்கள்," என்றாள் சுரபி,

ஒரே மூச்சாக அவர். அதைக் குடித்து முடிக்கும்வரை காத்திருந்துவிட்டு."கதிர் பழசை மறக்கவில்லை, அதுதானே. காரணம்? நீங்கள் ஏன் அங்கிள். அப்படிச் செய்தீர்கள்? பதினேழு. பதினேட்டு வயது என்பது. ஒருவர் வாழ்க்கையில். எவ்வளவு முக்கியமான பருவம்? சுற்றிலும் பாசமான உறவோடு. பாதுகாப்பாக வளர்கிறவர்களே குழம்பித் தவிக்கிற காலம்! அடை பட்டுப்போன தந்தை உறவு,

தாயில்லை! உழைத்துச் சாப்பிட வேலை கூட இல்லை! பசியும் பட்டினியுமாக. எப்படியோ போகட்டும் என்று. அவரை எப்படி வீட்டை விட்டு வெளியேற்றினீர்கள்? மனிதாபிமானம். உறவு என்கிற பாசம் ...ஒன்றுமே இல்லையே!" என்று. தான் கேட்க நினைத்ததை. ஒளிவு மறைவின்றித் தெளிவாகக் கேட்டாள் அவள்,

ஆனால். இந்த மாதிரிக் கேள்விகளுக்கும். பஞ்சநதம் தயாராகத்தான் வந்தார் போலும்,

குடும்பப் படத்தை எடுத்து மறுபடியும் காட்டினார்,

"பாரம்மா. இதில் எத்தனை பேர் இருக்கிறோம் என்று! எனக்கு ஐந்து பிள்ளைகள், மனைவி. இன்னும் இவன். என் தங்கை! ஒன்பது வயிறுகளுக்குச் சோறு போட வேண்டும், என் தங்கை இருந்த வரைக்கும். அவளும் ஏதாவது வேலைக்குப் போவாள், சம்பாதிப்பாள், சாப்பாடு. படிப்பு என்று. எல்லாம் பண்ண முடிந்தது! அப்புறம்? அந்தச் சமயம் பார்த்து. மில்லில் நஷ்டம் என்று எனக்கும் வேலை போய்விட்டது! ஒரு வேளைச் சாப்பாட்டுக்கே ரொம்பக் கஷ்டம்! என் நிலை எண்ணிப் பாரம்மா, கூட ஒரு வயிறு, அதிலும் பையன் சைஸ். உனக்குத் தெரியும்தானே? அந்த வயதில் இரு மடங்கு உணவு அவனுக்கே தேவைப் பட்டது, ஒருத்தனுக்கு. முதல் கடமை. அவன் பெற்ற பிள்ளைகளுக்குத்தானே? என் பெண்டாட்டி வேறு பேயாட்டம் போட்டாள், அவளையும். தப்பு சொல்ல முடியாது! பெற்ற பிள்ளைகளே பட்டினி. இன்னொருத்தனுக்குப் பெரிய பங்கு கொடு என்றால் எந்தப் பெண்தான் பொறுப்பாள்? அத்தோடு ..... ஏதோ ...வேறு வழியில்லாமல். போகச் சொல்லிவிட்டேன்! நீயே சொல்லும்மா! அந்தச் சமயத்தில். நான் வேறு என்ன செய்யட்டும்?" என்று நீளமாக விளக்கம் சொல்லி. சோகமாகக் கேட்டார் பஞ்சநதம்!

மகாபாரதம் நினைவு வந்தது. சுரபிக்கு,

மறைந்து வாழும் காலத்தில். கிடைக்கும் உணவில் பாதியை. பீமனுக்குக் கொடுப்பாளாம் குந்திதேவி, அப்படிக் கொடுப்பதற்கு. அந்தக் குடும்பத்தில். அவளுக்கு அதிகாரம் இருந்தது, யாருக்கும் விளக்கம் சொல்லத் தேவையில்லை! ஆனால். கதிரவனுடைய தாய்?

இந்தப் பஞ்சநதத்துடைய மனைவியைப் பார்த்தால். அவ்வளவு சரியாகத் தோன்றவில்லை! அவளை அண்டி வாழ்கிற நிலையில். வளர்ந்த மகனுக்கு வயிறு வாடாமல் உணவளிப்பதற்கே. அந்தத் தாய் என்ன பாடு பட்டிருப்பாள்?

பல நேரம் பட்டினியே கிடந்தாளோ? அதனால்தான் உடல்நலம்

கெட்டதோ?

கண்டறியாத மாமியாரிடம் பரிவும் பாசமும் பெருகியது சுரபிக்கு,

சூழ்நிலைக் கைதியாக வாழ்ந்த இந்த மனிதரும் பாவம் என்றே தோன்றியது!

“இப்போது நிலைமை பரவாயில்லையா?” என்று அவரிடம் நலம் விசாரித்தாள்,

“எங்கேம்மா?” என்று இன்னொரு சோகக் கதை படித்தார். அவர்,

மூடிய மில் திறக்கவே இல்லை, அப்படியே விற்றுவிட. புதிதாக வாங்கியவர்கள். பழைய ஆட்களை. முழுசாகக் கழித்துக் கட்டிவிட்டார்கள்! அவரும். என்னென்னவோ செய்து பார்த்தார், சொந்தப் பிள்ளைகளும் வளர்கிறார்களா? எல்லோருக்கும். வாய்க்கும் வயிற்றுக்கும் கட்டி வருவதே பெரும் பாடாக இருக்கிறது! அதுதான். பையனிடம் கேட்டுக் கொஞ்சம் பணம் கடனாகப் பெற்று. சின்னதாக ஒரு கடை போட்டால். ஏதோ ஏழு வயிற்றுக்குச் சோறு போடவேனும் சமாளிக்குமே என்று எண்ணி வந்தார், ஆனால். தங்கை மகன்தான் பழைய கோபத்தை வைத்துக்கொண்டு. பார்த்துப் பேசவே மறுக்கிறானே!

சுரபிக்கு மனது சங்கடப்பட்டது,

ஐந்து பிள்ளைகள். பெற்றவர்கள் . மொத்தம் ஏழு பேரின் உணவு. உடைக்குச் சம்பாதிப்பது. இன்று பெரிய காரியம்தான்.

எப்படியும். கதிருடைய உறவினர்கள்! அவர்கள் பசியும். பட்டினியுமாக அவதிப்படுவது. சுரபிக்குப் பிடிக்கவில்லை,

ஒரு காலத்தில். அவர்கள். கதிரைத் தெருவில் நிறுத்தியிருக்கலாம்! ஆனால். முதலில். கணவனால் கைவிடப்பட்டு வந்த தங்கை. தங்கை மகனுக்கு. இந்தப் பஞ்சநதம் அடைக்கலம் கொடுத்தார்தானே? அவரது கூரை இல்லாது போயிருந்தால். வயிற்றுப் பிள்ளை. பின்னர் கைக்குழந்தையோடு. மாமியார் என்ன ஆகியிருப்பாள்!

அதுவும். அழகாக வேறு இருந்திருக்கிறாள்!

மானம். உயிர் ..... எல்லாவற்றையும். அன்று தமையன் தந்த பாதுகாப்புதானே. காப்பாற்றியது?

கதிரவனிடம் கடனாகப் பணம் பெற வந்ததாகப் பஞ்சநதம் சொன்னதை. சுரபி முழுதாக நம்பிவிடவில்லை, வளமாக வாழும் தங்கை மகனிடம். திரும்பித் தரத் தேவையிராத உதவித்தொகையாகப் பெறவே. மனிதர்

மெனக்கெட்டுக் கிளம்பி வந்திருக்கிறார்,

ஆனால். அன்றைய நிலையில். அது பெரிய தப்பாக. அவளுக்குத் தோன்றவுமில்லை,

நம்மிடம் எவ்வளவோ இருக்கையில். நல்லவரோ. கெட்டவரோ. கஷ்டப்படும் உறவினருக்கு. அதில் கொஞ்சம் கொடுப்பதில். நாம் நசித்துப் போய்விட மாட்டோம்,

இவரைப் பொறுத்த வரையில். கதிர் செய்ந்நன்றி செலுத்தியதாகவும் ஆகும்,

கொடுக்கும் மனம் இருப்பது தெரிந்தால். முடிந்தவரை பிடுங்க முயற்சிப்பார் என்று எண்ணி. எதிர்மறையாகப் பேசத் தொடங்கி. கடைசியாக."ஒரு சின்ன பொட்டிக் கடை வைப்பதானாலும். ஒரு லட்சம் ரூபாய்க்குக் குறைந்து முடியாதும்மா, ஏழு பேர் சாப்பாடு துணிமணிக்குக் கட்டி வர வேணுமில்லையா?" என்றவரிடம். உரிய செலவுக் கணக்கையும் கேட்டு. அந்தப் பணத்தைக் கொடுத்தாள். அவள்,

அதையும். எச்சரிக்கையோடு. கணவனின் அனுமதி கேட்டே தருவது போலவும். இந்தப் பணம் திருப்பித் தராமல். இனி எதுவும் கொடுக்கக் கூடாது என்று கதிர் சொன்னதாகவும் காட்டியே கொடுத்தாள்,

இதுவேனும் கிடைத்ததே என்பது போலப் பஞ்சநதம் சென்றுவிட. சுரபிக்கு மனதில் உற்சாகமாக இருந்தது, கணவன் வீட்டாருக்கு நல்லது செய்த மகிழ்ச்சி!

உணவு வெளியே,. வீடு திரும்ப மிகவும் தாமதம் ஆகும் என்று கதிரவன் சொன்னபோதும். அவளது உற்சாகம் குறையவில்லை, நிலாவும் அவளுமாகக் கடற்கரைக்குச் சென்று. சற்று நேரம் ஆடிவிட்டு வந்தார்கள்,

இரவில். நிலா தூங்கிய பிறகே கதிரவன் வீடு திரும்பினான்,

வெளியே போய் வீடு வந்தால். கதிரவனுக்குக் குளிக்க வேண்டும், மிகவும் தாமதமாகத் திரும்பி வந்தான் என்றால். முக்கியமாக ஏதேனும் சொல்வதாக இருந்தால் மட்டுமே நின்று சொல்வான், மற்றபடி நேராக அவனது அறைக்குள் போய்விடுவான், அப்புறம். மறுநாள் காலையில் பார்ப்பதுதான்,

அன்றும். அப்படித்தான் போலும் என்று எண்ணிய சுரபி. சிறு ஏமாற்றத்துடன் தானும் படுப்பதற்கான ஆயத்தங்களைச் செய்யலானாள்,

பஞ்சநதத்தைப் பார்த்ததோ என்னவோ. அவளது மனதில் ஒரு கிளர்ச்சி!

முன்னர் கதிரவனைப் பார்த்தது. பேசியது. அவன் அதட்டவும் பயந்து ஓடியது எல்லாம். ஒவ்வொன்றாக நினைவு வந்துகொண்டே இருந்தன, அவை பற்றி விரிவாக எண்ணிப் பார்க்கையில் வேடிக்கையாகவும். உள்ளூரக் குறுகுறுப்பாகவும் இருந்தது,

எல்லாவற்றையும். கணவனோடு பகிர்ந்துகொள்ள. அவளுக்கு மிகுந்த ஆசைதான், ஆனால். அவன் உள்ளே போய்க் கதவைச் சாத்திக் கொண்டானே!

படுக்கப் பிடிக்காமல். ஜன்னல் வழியே. தூரத்துக் கடலையும். அங்கங்கே மினுமினுத்த கப்பல் விளக்குகளையும் பார்த்தபடி அவள் நின்றபோது. கதவை ஒரு தரம் தட்டிவிட்டு. கதிரவன் அறைக்குள் வந்தான்,

சுரபி திகைப்புடன் கணவனைப் பார்த்தாள்,

இதுவரை. இப்படி அவன் வந்ததில்லை,

இருவரும் மனதால் நெருங்கிக்கொண்டுதான் இருந்தார்கள் என்றாலும். இன்னும் கொஞ்சம் நகாசாக ..... என்று இந்த விதமாக அவள் மேலே யோசிக்குமுன்."அந்தப் பணத்தை என்ன செய்தாய்?" என்று. அவளது எண்ணப் போக்குக்குச் சம்பந்தமே இல்லாத கேள்வியை. அடிக் குரலில் ஆத்திரத்துடன் கேட்டான். அவன்,

# அத்தியாயம் -10

கணவனின் வரவுக்காகக் காத்திருந்த அவ்வளவு நேரமும். சுரபி பழைய நினைவுகளிலேயேதான் ஆழ்ந்திருந்தாள்,

பஞ்சநதம் வந்ததும். அவருக்குப் பணம் கொடுத்ததும். இந்த நினைவுகளை வரவழைக்கத் தூண்டுகோலாக இருந்தனவே தவிர. அதற்குமேல். கதிருடைய மாமா பற்றிய ஞாபகமே அவளுக்கு இருக்கவில்லை,

எனவே. சற்றும் எதிர்பாராத விதமாகக் கதிரவன் அவளது அறைக்குள் வந்ததே ஒரு திகைப்பு என்றால். அவன் பணத்தைப் பற்றிக் கேட்கவும். மறுபடியுமே அவளுக்கு ஒன்றுமே புரியாத திகைப்புதான்,

ஒரு கணம். அவன் என்ன பேசுகிறான் என்றே புரியாத நிலை!

பிறகே. சுவர் இரும்புப் பெட்டியில் பணத்தை எண்ணிப் பார்த்துவிட்டு வந்து விசாரணை செய்கிறான் என்பது புரிய. சட்டென நெஞ்சு காந்தியது அவளுக்கு,

என்னமோ. அவளது பணம்,. கணக்குத் தரவேண்டாம் என்றதென்ன? ஏன் செலவு செய்யவில்லை என்றுவேறு கோபப் பட்டதென்ன? இப்போது அவன் பணத்தை. அவள் கையாடி விட்ட மாதிரி குறுக்கு விசாரணையா?

அதற்குள். ஆசையாக என்னென்னவொ எண்ணிவிட்டது வேறு. அவளுக்கு அவமான உணர்வில் மனம் கொதித்துப் போயிற்று,

அவள் ஆத்திரமாக நோக்கும்போதே.”ஆமாம் பணம்தான், ஒன்று தெரிந்துகொள், விடை தெரியாத எந்தக் கேள்வியையும் நான் கேட்பதில்லை! அதனால். நீயாகச் சொல்லிவிடுவது நல்லது!” என்றான் கதிர். பழைய குரலிலேயே,

“விடை தெரியும் என்றால். அதற்கு மேல் கேள்வியும் பதிலும் எதற்கு?” என்று. சீற்றத்துடன் மடக்கினாள் அவள்,

ஒரு கணம் திகைத்தபோதும்.”எனக்குப் பிடிக்காததைச் செய்திருக்கிறாய் என்பதை. வேறு எப்படிச் சொல்வது?” என்று பதிலுக்குக் கேட்டான் கதிரவன்,

“என்ன பிடிக்காது? அப்படி என்ன. உங்கள் பணத்தை எடுத்து என் உறவுக்கோ. தெருவில் போகிறவர்களுக்கோவா கொடுத்துவிட்டேன்? உங்கள் மாமாவுக்குத்தானே கொடுத்தேன்!”என்றாள் அவள்,

“அதைத்தான் சொல்லுகிறேன், யார் யாருக்கு என்ன கொடுப்பது என்று வரைமுறை வேண்டும், நான் உனக்கென்று கொடுத்தது. அது,”

அவளுக்கு என்று கொடுத்தால். அவளது விருப்பம்போலச் செலவளிக்கலாம் என்றுதானே அர்த்தம்? வார்த்தைக்கு வார்த்தை. நுணுக்கி. நுணுக்கி. அதில் என்ன குற்றம் கண்டுபிடிப்பது?

கோபமாக முறைத்து.”நீங்கள் கொடுத்த வார்த்தை மீறுகிறீர்கள்!” என்று பதிலுக்குக் குற்றம்சாட்டினாள் சுரபி,

“எஎன்னது?!”

“ஆமாம்! அந்தப் பணத்தை நான் எப்படிச் செலவு செய்தாலும் கணக்குக் கேட்பதில்லை என்றுவிட்டு. இப்படிக் குற்ற விசாரணை மாதிரிக் கேட்டால். அது வார்த்தை மீறல் தவிர. வேறு என்னவாம்?”

“இது. உனக்கு வார்த்தை மீறலா? பணத்தை வீணாக்குவது கூடாது என்றால். அது வார்த்தை மீறலாக. உனக்குப் படுகிறதா? அதுவும். சொன்ன சொல் காப்பதற்காக நான் எவ்வளவு கட்டுப்பாட்டுடன் வாழும்போது .....வார்த்தை மீறல் என்றால். என்ன என்று முதலில் தெரிந்துகொள்!” என்று கொதிப்புடன் பேசியவன். சட்டென ஓர் எட்டில் மனைவியை அணுகி. அவளது தோள்களை இறுகப் பற்றினான்,

இறுக என்றால். அவன் பற்றிய இடம் கன்றிவிடும்போல. அவ்வளவு அழுத்தம்!

சுரபி பிரமித்துப் போனாள், விரலைக் கூட அசைக்க மாட்டாமல். உடம்பே சிலையாக மாறிவிட்டாற்போல உணர்வு!

இப்போது. இவன் என்ன செய்யப் போகிறான்? கடவுளே. அவள் எவ்வளவு அழகாகக் கற்பனை எசய்து வைத்திருந்தாள்!

அவளது வெறித்த பார்வையை அவன் நேராகச் சந்தித்தது. ஒரு சில கணங்களாகவே  இருக்கலாம்,

இடி. மின்னல்களை உள்ளடக்கிய மேகம் மாதிரி. கதிரவனின் முகத்தில் என்ன இருந்தது என்று அவள் பகுத்தறிந்து கொள்ளும் முன்னராகவே. அவன். அவளை உலுக்கத் தொடங்கிவிட்டான்,

“என்னையா சொன்னாய்? .....என்ன வார்த்தை சொன்னாய்? உனக்கு என்ன தெரியும்? உரிமை பற்றித் தெரியுமா? பொறுப்பு பற்றித் தெரியுமா? வாழ்க்கை நெறி? அது பற்றித்தான். ஒரு குன்றிமணி அளவேனும். உனக்குத் தெரியுமா? எதுவும் தெரியாமல். என்னைச் சொல்ல வந்துவிட்டாயா?” என்று ஒவ்வொரு கேள்விக்கும். அவன்

உலுக்கிய உலுக்கலில். அவளது கை. கால்கள். தலை எல்லாம் இற்றுப் போய். உடம்பிலிருந்து தனித்தனியே உதிர்ந்து விழாதது அதிசயமே,

இந்த உலுக்கல் எவ்வளவு நேரம் நீடித்ததோ. சுரபி நிச்சயமாக அறியாள், ஆனால். அவளால்சூழலைப் புரிந்துகொள்ள முடிந்தபோது. தொடங்கிய வேகத்திலேயே. அவளை உதறித் தள்ளிவிட்டு. அவன் விலகிச் சென்றுமிருந்தான்,

அந்த அறையிலிருந்துமே!

அவளைத் தள்ளிவிட்டு அவன் சென்றுவிட. அவன் தள்ளியபோது விழுந்த இடத்தில் அப்படியே கிடந்திருக்கிறாள் அவள்!

அதுவும் எவ்வளவு நேரமோ?

எழுந்திருக்கலாம் என்றால். கை கால்களைக் கூட அசைக்க முடியாமல். உடம்பு சுவாதீனத்துக்கு வர மறுத்தது!

தொடர்ந்தது. மயக்கமோ. உறக்கமோ. காலைவரை சுரபி அப்படியேதான் கிடந்தாள்,

ஒருவாறு சுரணை வந்து எழுந்தால். உடம்பின் ஒவ்வோர் உறுப்பு[ம் பயங்கரமாக வலித்தது! கையைத் சிரமப்பட்டுப்

புருஷன் அடித்தான். மிதித்தான்,. இங்கே வலி. அங்கே வலி என்று அவளுடைய பெற்றோர் வீட்டு வேலைக்காரி புலம்புவாள், ஆனால். உடம்பின் ஒவ்வோர் அணுவையும். கதிர். இப்படி நோகடித்துவிட்டானே!

வார்த்தெடுத்த சிலை அல்ல,. நான் சுயம்பு,. கரடு முரடாக ... என்று. தனது மேல் பூச்சற்ற நேரடிப் பேச்சு பற்றி. ஒரு தரம் கதிரவன் சொன்னதுண்டு!

ஆனால். இவ்வளவு முரட்டுத்தனம் அவனுள் இருக்கும் என்று யாருக்குத் தெரியும்?

உனக்குத் தெரியும். அவளது இதயத்திலிருந் ஒரு சிறு குரல் சொல்ல. சுரபி திடுக்கிட்டாள்,

உண்மைதானே? இதே கதிரவன் அடித்தே விடுவானோ என்று அவள் சிட்டெனப் பறந்து ஓடவில்லை?அவனது கோபமும். வெறுப்புமான எத்தனை பார்வைகள்!

எட்டு ஆண்டுகளுக்கு முன்பாக அவனுக்குத் தோன்றிய அந்த எதிர்மறை உணர்ச்சிகள். மாறவே இல்லை போலும்!

காரணமே இல்லாமல். சில பேரிடம் அன்பும். அதே விதமாகச் சிலரிடம் வெறுப்பும் உண்டாகுமாமே! கேள்விப் பட்டிருக்கிறாள்!

ஆனால். அதேபோல. அவளுக்குக் கதிரிடம் அன்பும். அவனுக்கு. அவளிடம் வெறுப்பும் ஏற்பட்டதுதான். கொடுமை!

நீறு பூசிய நெருப்பு போல. உள்ளே இந்த வெறுப்பு இல்லை என்றால். அவளை இப்படித் துன்புறுத்த. அவனால் முடியாது,

நிலாவை நல்லபடியாக வளர்ப்பதற்காக. இந்த வெறுப்பை மறைத்து அவன் பழக. அவள் என்னென்ன ஆகாயக் கோட்டைகள் கட்டிவிட்டாள்!

“கண்ணிழந்தான்,. பெற்றிழந்தான்” என்று கம்ப ராமாயணத்தில் வருவது போல. இழப்பு. இப்போது இருமடங்காகப் பெருகித் தெரிந்தது,

சுரபிக்கு அழுது பழக்கமில்லை,

பிரச்சினை என்றால். அதைத் தீர்க்க என்ன செய்வது என்று யோசிக்க வேண்டுமே தவிர. அந்த யோசனையையே மழுங்கடிக்கக் கூடிய அழுகைக்கு இடம் கொடுக்கக் கூடாது என்பாள் அவளுடைய அன்னை சுந்தரி,

அதன்படி. இப்போது என்ன செய்வது என்று யோசிக்க முயன்றால். மூளை வேலை நிறுத்தம் செய்தாற்போல. எதுவுமே தோன்ற மறுத்தது!

அவளால் என்ன செய்ய முடியும்?

அடி. உதை போல. இதுவும். அவளை அவமானப்படுத்தும் ஒரு கொடுமைதானே? இதைச் சகித்துக்கொண்டு சும்மா இருப்பது தப்புதானே?

“அத்தை ....” என்ற அழைப்புடன் கதவைத் தட்டும் ஒலியில் திடுக்கிட்டுப் பார்த்தால். நிலாதான், பள்ளிச் சீருடை அணிந்து. கையில் சீப்புடன். தலை கோத

வந்திருந்தாள்,

சுரபியைப் பார்த்ததும்.”அச்சச்சோ! என்ன அத்தை. “மெட்ராஸ் ஐ”யா? கண் சிவப்பாக இருக்கிறதே! மருந்து எடுத்து வரட்டுமா?” என்று கரிசனமாகக் கேட்டாள்,

கண்ணில் நீர் அரும்பியதை மறைத்து.”தூதூசிம்மா, யோசிக்காமல் கசக்கிவிட்டேன், தானாகச் சரியாகிவிடும்,. நீ போய். முதலில் சாப்பிடு, அத்தை முகத்தைக் கழுவிக்கொண்டு. இதோ வந்துவிடுகிறேன்,” என்று. பெண்ணை அனுப்பினாள்,

வலியில் கெஞ்சிய உறுப்புகளை முடுக்கி. முடிந்தவரை வேகமாகக் காலை வேலைகளை முடித்துக்கொண்டு. சாப்பாட்டு அறைக்குச் சென்றாள்,

சூடான வெந்நீர் பட்டது சற்றே இளக்கிவிட. கை கால்களை ஓரளவு இலகுவாக இயக்க முடிந்தது,

இயன்றவரை அவசரமாக நிலாவுக்கு இரட்டை போனிடெயில் போடும்போதே. பெண்ணோடு அமர்ந்து உணவருந்திக் கொண்டிருந்த கதிரவன் எழுந்து செல்வது. பார்வை வட்டத்தில் பட்டது,

போகட்டும், அவளும் ஒன்றும். அவனோடு வார்த்தையாடத் துடித்துக்கொண்டு இருக்கவில்லை!

அல்லது. அவனுக்குக் குற்றக் குறுகுறுப்பாக இருக்குமோ?

நிலாவுக்கு "போ" கட்டி . "பை" சொல்லிப் பள்ளிக்கு அனுப்பிவிட்டு. அப்படியே ஒரு நாற்காலியில் தொப்பென விழுந்தாள்,

மலையைப் புரட்டிய சோர்வு! செய்வதறியாத மலைப்பும் கூட!

"அம்மா. நீங்களும் சாப்பிடுங்கம்மா," என்று அவள் முன்னே ஒரு தட்டை வேலைக்காரி வைத்தாள்,

"இல்லை. வேண்டாம், வெறும் காஃபி மட்டும் கொடு," என்று சொல்லி. காஃபியை மட்டும் குடித்தாள்,

வேலைக்காரி வந்து. மேஜையைச் சுத்தம் செய்துவிட்டுப் போன பிறகும். என்ன செய்வது என்று புரியாமல். அவள் அப்படியே அமர்ந்திருந்தாள்,

பெற்றோர் அவளை நன்றாகத்தான் வளர்த்தார்கள், நல்ல பெண் என்று பேரெடுக்கும் விதமாக, கெட்டிக்காரி என்று பாராட்டும் விதமாக,

ஆனால். இது போன்ற நிலைமையை எப்படி எதிர்கொள்வது என்று கற்றுத் தரவில்லையே!

சிறு அரவம் உணர்ந்து பார்த்தால். கதிரவன்தான்,

குரலிலோ. முகத்திலோ எந்தவித உணர்ச்சியும் காட்டாமல்."இப்படி நீ இங்கிருப்பது சரியல்ல, கிளம்பு, உன்னை. உன் வீட்டில் விட்டுப் போகிறேன்," என்றான் மெல்லிய குரலில்,

அடுப்படியில் வேலை செய்யும் வேலைக்காரிக்கு கேட்டுவிடாமல். கௌரவமாக. அவளை வெளியே போகச் சொல்கிறானாம்! அதுதான் இப்போது ரொம்ப முக்கியமா?

அதிர்ச்சியோடு. ஆத்திரமும் வந்தது சுரபிக்கு!

செய்வதெல்லாம் செய்துவிட்டு. என்னவோ. அவள் தப்பு செய்த மாதிரி. போகச் சொல்லுகிறானே!

அந்தப் பணத்தைக் கொடுத்தது என்ன. அவ்வளவு பெரிய குற்றமா?

அல்லது. இதில் உள் விவகாரம் வேறு ஏதேனும் இருந்து. வீட்டிலிருந்து அவளை வெளியேற்றுவதற்காகப் பணப் பிரச்சினையைப் பயன்படுத்துகிறானா?

ஒருவேளை விஷயம் அப்படியே இருந்தால் ..... சின்னத்திரை. பெரிய திரை எல்லாவற்றிலும் ஒரே மாதிரியாக."அடிப்பதற்காகவேனும். நீ என்னைத் தொட்டாயே! அதுவே. என் பாக்கியம். மாமா!" என்று பேத்துகிறார்களே. அதை மெய்யென்று எண்ணிப் பயந்து. விட்டானா?

அது போல. அவளும் ஏதாவது உளறுவாள் என்று? சீச்சீ!

வெறுப்புற்று."நீங்கள் என்ன விடுவது? நானே போய்க் கொள்வேனே!" என்றாள் அவள் எங்கோ பார்த்தபடி,

"இல்லை, இன்றைக்கு நீ காரை ஓட்ட வேண்டாம்,"

பெரிய கரிசனம்! ஏன்? இவன் உலுக்கியதில். ஏதேனும் உறுப்பு உடைந்து. காரை ஓட்ட முடியாதோ என்று எண்ணுகிறானா? ரொம்பத்தான் பா ... வம் பார்க்கிறான் போல!

நக்கலாக ஏதாவது சொல்ல நினைத்தால். அவளுக்குத் தொண்டையை அடைத்தது!

நிலாவின் கரிசனத்தில் லேசாகக் கண்ணைக் கரித்தது தவிர. இதுவரை அவள் அழவில்லை, இப்போதும். அந்த நிமிர்வை விடத் தேவையில்லை, பேசாமல் தலையை மட்டும் ஆட்டினாள் அவள்,

காரில் செல்லும்போது. நேர் எதிரே தவிரப் பார்வையை இப்புறம். அப்புறம் திரும்ப விடவில்லை சுரபி,

வீட்டிலிருந்து கூட்டிப் போகிறானே. இது இப்போதைக்கு மட்டுமா. நிரந்தரமாகவா

என்ற கேள்வி. பலமுறை அவளது தொண்டைக்குள் வந்து துடித்தது,

ஆனால். அதை வாய்விட்டுக் கேட்பதற்கு. அவளது தன்மானம் விடவில்லை, திரும்பி வரத் துடிப்பது போலத் தோன்றுமோ என்பதாலேயே. அதைக் கேட்க அவளுக்குப் பிடிக்கவில்லை,

தாய் வீட்டில். அவளுக்குப் பெரிய பிரச்சினை எதுவும் இருக்கவில்லை,

புதுக் கிளை தொடங்குவதற்கான இடம் பார்ப்பதற்காக. சுகந்தன் காலையிலேயே வெளியே சென்றிருந்தான்,

தந்தை எப்போதுமே. சீக்கிரமாகத் தொழிலைப் பார்க்கப் போய்விடுவார்,

வீட்டுப் பொறுப்புகளை முடித்துத் தாயார் செல்ல நேரமாகும்,

“இரவெல்லாம் ஒரு பயங்கரத் திகில் படம் பார்த்ததில் தூக்கமில்லை,. பேசாமல் இங்கே படுத்திருக்கலாம் என்று வந்தேன்,” என்று மகள் சொன்னதை முகம் மாறாமல் கேட்டுவிட்டு.”வந்ததுதான் வந்தாய்,. இரண்டு நாள் தங்கிவிட்டுப் போயேன், நான் வேண்டுமானால். இன்று வீட்டில் இருக்கட்டுமா?” என்று கேட்டாள் அன்னை,

இருக்கும் மனநிலையில். தாயிடம் எதையாவது கொட்டிவிடுவோமோ என்ற அச்சம் மகளுக்கு, சொல்வதானாலும். அவளுக்கே இருந்த தெளிவற்ற நிலையில். எதை என்னவென்று சொல்வது?

எனவே.”அதெல்லாம் வேண்டாம்மா, நான் பேசாமல் படுத்துத் தூங்கத்தான் போகிறேன், நீங்கள்ஹோட்டலுக்குப் போய் வாருங்கள், எதுவும் வேண்டும் என்றால். நான் சமையல்காரம்மாவிடம் செய்யச் சொல்லிக் கொள்கிறேன்,” என்று தாயைப் பணிக்கு அனுப்பி வைத்தாள். சுரபி,

அந்தத் தாய் ஹோட்டலுக்குச் சென்று.”சுபிக்கும் மாப்பிள்ளைக்கும் முதல் சண்டை என்று நினைக்கிறேன், இருவர் முகங்களும் சரியாக இல்லை, கணவன் மனைவி என்றால். எப்போதும் ஒரே மனமாக இருக்க முடியாது,. இப்படிச் சில உரசல்களும் வரும் என்று மெல்லத்தான் புரியும், எதுவானாலும் தானாகச் சீர் செய்து கொள்ளட்டும் என்று. ஒன்றும் கண்டுகொள்ளாதது போலவே வந்துவிட்டேன்,” என்று தந்தையிடம் சொன்னது. நல்லவேளையாக. அவளுக்குத் தெரியாது!

பகலெல்லாம் சுரபி சும்மாப் படுத்துதான் கிடந்தாள்,

அவளது அறை. அப்படியேதான் இருந்தது.

இங்கே. எவ்வளவு நிர்மலமான. நிம்மதியான வாழ்க்கை வாழ்ந்தாள்! இந்தப் பிரச்சினை. தவிப்பு. தாபம் எதுவுமே இல்லாமல்!

ஆனாலும். அதுதானே அவள் வீடாகத் தோன்றுகிறது?

மாலையில் வந்ததும். நிலா தேட மாட்டாள்?

அல்லது. அதற்குள். கதிர் ஏதேனும் நிலாவிடம் சொல்லி விடுவானா?

ஏழு ஆண்டுகளாக. சுரபி இல்லாமல் வளர்ந்தவள்தான். நிலா, ஆனால். இப்போது ..... காலையில். கண்ணுக்கு மருந்து பற்றி. அவள்தான் கரிசனமாகச் சொன்னாள்,

இப்போது. அவள் கேட்டால். கதிர் கூப்பிட வருவானா?

ஆனால். அவன் நடத்திய முறைக்கு. அவன் அழைத்தாலுமே. சுரபி அங்கே போவது சரியாகுமா? நிச்சயமாகச் சரியே கிடையாது!

வினாடி ஓய்வின்றி. மூளையும் மனமும் உள் யுத்தம் நடத்த. இன்னும் அதிகமாகச் சோர்ந்து. சுரபி சற்று நேரம் கண் மயங்கித் தூங்கக் கூடச் செய்தாள்,

ஆனால். கண் விழித்ததும். வேதனைப் புழு அரிக்கத் தொடங்கிவிட்டது,

சும்மா இருப்பது. இன்னும் எவ்வளவு பெரிய சித்ரவதை என்று சுரபிக்கு அப்போது புரிந்தது,

குறைந்த பட்சமாக. இந்த வேதனையிலிருந்து. நிலாவின் அழைப்பு சுரபியை மீட்டது,

பள்ளியிலிருந்து திரும்பி வந்தவள். சுரபியைக் காணாமல். அவளது செல்லுக்குத் தொடர்பு கொண்டாள்,

“என்ன அத்தை. எங்கே இருக்கிறீர்கள்? எப்போது வருவீர்கள்? இன்றைக்கு டீச்சர் கற்றுக் கொடுத்த கணக்கு எனக்குப் புரியவே இல்லை! அத்தியாயம் முழுதும் வீட்டுப் பாடமாகச் செய்துகொண்டு போக வேண்டும், உடனே வந்து சொல்லிக் கொடுங்கள்!” என்றாள் அழு குரலில்,

“மா ...மாமாவிடம் கேட்டாயா?”

“மாமாவுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கத் தெரியாதே!” என்றாள் நிலா,”எனக்கு நீங்கள்தான் கற்றுக் கொடுக்க வேண்டும், உடனே வாருங்கள்!” என்று. மறுபடியும் பல்லவியைத் தொடங்கினாள்,

வேகமாக யோசித்தாள் சுரபி,

வீட்டுக்கு வருமாறு. கதிரவன் அவளை அழைக்கவில்லை, அழைப்பதாகவே இல்லையோ என்பது வேறு விஷயம்!

அப்படியே அவன் அழைத்தாலும். அவளைத் துன்புறுத்தியதற்காக

மன்னிப்புக் கேட்குமுன். அங்கே செல்ல. அவளுக்கே பிடிக்கவில்லை, கணவன் என்ன செய்தாலும். அதைப் பொருட்படுத்தாமல் பொறுத்துப் போகிற ஆள். அவள் அல்ல!

ஆனால். நிலாவை நட்டாற்றில் விடுவதும் முடியாது,

அவள் இப்போதுதான் நல்ல மதிப்பெண்கள் வாங்கி. ஒழுங்காக வீட்டுப் பாடம் செய்து. வகுப்பாசிரியையிடம் நல்ல பேர் வாங்கத் தொடங்கியிருக்கிறாள், எக்காரணம் கொண்டும். அதை நாசமாக்கி விடக் கூடாது ,

“அத்தை ...அங்கே லைனில் இருக்கிறீர்களா?” என்று கேட்ட நிலாவின் அச்சக் குரல். சுரபியை முடிவெடுக்க வைத்தது!

நிலாவின் பாடத்தை விட முடியாது, பாடத்தைச் சொல்லிக் கொடுத்துவிட்டு. கதிர் வீடு திரும்புமுன். அங்கிருந்து வெளியேறி விடவேண்டும், அவளது காரையே எடுத்துக்கொண்டு. திரும்பி வந்துவிடலாம்,

நிலா அல்லது வேலைக்காரி மூலமாக. சுரபி சென்றது. கதிருக்குத் தெரியும்போதும். அங்கே தங்கி விடுவதற்காக அவள் போகவில்லை என்றும். அவனுக்குப் புரியும்!

இது சரியான திட்டமாகத் தோன்றிவிட. உடனே ஒரு கால் டாக்சியை வரவழைத்து. சுரபி கிளம்பிவிட்டாள்,

ஆனால். சுரபியின் இந்தத் திட்டம் முழுமையாக அவள் எண்ணியது போல நிறைவேறவில்லை,

அவள் எதிர்பார்த்தது போலவே. தான் வரும்வரை நிலாவுக்குத் துணையிருக்குமாறு. வேலைக்காரியைக் கதிர் ஏற்பாடு செய்துதான் இருந்தான்,

ஆனால். சுரபியைக் கண்டதும். அவள் பெரும் நிம்மதியோடு.”பாப்பா தனியாக இருக்குமின்னு. சார் என்னையத் துணையிருக்கச் சொன்னாங்கம்மா, இப்பத்தான். நீங்க வந்துவிட்டீங்களே. நான் போகட்டுமாம்மா? வீட்டிலே பையனுக்குக் காயலாம்மா, அவனை. டாக்டராண்டை இட்டுப் போகணும், டாக்டரு ஒரு ஊசி போட்டால்தான். அவனுக்கு இந்தக் காய்ச்சலு. இழுப்பு அல்லாம் கொஞ்சம் மட்டுப்படும், வரட்டாம்மா?” என்று கெஞ்சுதலாக அனுமதி கேட்டுக்கொண்டு. அவளது வீட்டுக்குக் கிளம்பிவிட்டாள்,

பிள்ளைக்குக் காய்ச்சல் என்று கிளம்புகிறவளை. எப்படித் தடுக்க முடியும்?

இப்போது சுரபி வேறு யோசனை செய்தாள்,

பள்ளி நாட்களில். எட்டரை மணிக்கு நிலா தூங்கப் போய்விட வேண்டும் என்பது. அந்த வீட்டுக் கட்டுத்திட்டம், சுரபி உருவாக்கியதுதான்!

கதிரைப் பொறுத்தவரையில். வேலையை ஒதுக்கி மாலையில் சீக்கிரமாக வரும் ஒரு சில நாட்களைத் தவிரப் பொதுவாக. ஒன்பது மணிக்கு மேலேதான் வீடு வருவான்,

ஆனால். அவன் வரும்வரை. நிலாவை எப்படித் தனியே விட்டுவிட்டுப் போவது?  அதற்காகக் கதிர் வரும்வரை அங்கேயே நிலாவுக்குத் துணையிருக்கவும். சுரபிக்குப் பிடிக்கவில்லை,

வெட்கம் கெட்டுப்போய் வந்துவிட்டாள் என்று. அவன் எண்ணக் கூடும், அவனது மனப் போக்குக்கு. அவன் நிச்சயமாக அப்படித்தான் நினைப்பான், அப்படி அவள் ஒருபோதும் வரப் போவது இல்லை என்பது அவனுக்குத் தெரியாது என்பது வேறு விஷயம்!

யோசித்து. சுரபி இன்னொரு முடிவு செய்தாள்,

அதன்படி நிலா தூங்கத் தொடங்கியதும். கார்ச் சாவியை எடுத்துப் போய். அவளது காரில் உட்கார்ந்து. கதிரவனின் வரவுக்காகக் காத்திருப்பது,

கதிர் வந்து ஃப்ளாட்டுக்குள் செல்வதைக் காரில் இருந்தபடி பார்த்துவிட்டுச் சத்தமின்றிக் கிளம்பிப் போய்விடலாம்,

இது. இன்றைய அளவுக்கு,

நாளையோ. தொடரும் எதிர்காலத்திலோ என்ன நடக்கும் என்பதை யோசிப்பதற்கு. அவளுக்கு தென்போ. மனமோ இருக்கவில்லை, யோசிக்கப் பிடிக்கவில்லை என்றும் சொல்லலாம்! அச்சம் என்றும் சொல்லலாம் ,

புதிதாகத் திட்டமிட்டபடி. நிலா நன்கு உறங்கும்வரை பார்த்திருந்துவிட்டு. கார்ச் சாவியை எடுத்துக்கொண்டு சுரபி கிளம்பினாள்,

இது அவளது வீடும் அல்லவா. என்று மனம் முரண்டும்போதே. இன்னும் முழுமையாக மறைந்திராத உடம்புவலி. தயங்கி நிற்க விடாமல் அவளை உந்தி விரட்டியது,

அவனது முரட்டு உலுக்கலைத் தடுக்கக் கூட சக்தியற்று நின்றாளே!

இன்னொரு தரம். அந்தக் கேவலம் படக் கூடாது! முதலில் இங்கிருந்து வெளியேற வேண்டும்,

பிடிவாதமாகக் கதவைத் திறந்துகொண்டு வெளியே செல்ல முனைந்தவள். தூக்கிவாரிப் போட்டுக்கொண்டு பின்னடைந்தாள்,

ஏனெனில். கதவை அடைத்துக்கொண்டு அவள் எதிரே நின்றவன் கதிரவன்!

யார் கண்ணில் படாமல் அங்கிருந்து சென்றுவிட வேண்டும் என்று எண்ணினாளோ. அதே கதிரவன்!

# அத்தியாயம் - 11

பொதுவாகக் கதிரவன் வீட்டுக்குத் திரும்பி வரும் நேரத்துக்கு. இன்னும் அரை மணிப் பொழுதுக்கும் அதிகமாக அவகாசம் இருந்ததால். சுரபி அப்படி ஒன்றும் அவசரமாகக் கிளம்பிச் சென்று கொண்டிருக்கவில்லை!

ஆனால். முந்தைய தினத்து வலியும் குன்றலும் அப்படியே நினைவு இருந்ததால். அதன் காரணனான கணவனைச் சந்திப்பது. கட்டாயமாகக் கூடாது என்பதில் மட்டும் மிகவும் உறுதியாக இருந்தாள்,

அதற்காகவே பெரிதாகத் திட்டம் போட்டுக் கிளம்புவதற்காகக் கதவைத் திறந்தால். கதவுக்கு வெளியே அந்தக் கணவனே அல்லவா நிற்கிறான்!

முடிந்தவரை சீக்கிரமாக. வேலைக்காரியை அனுப்பி வைத்துவிட வேண்டும் என்று முன்னதாக வந்தானோ?

எப்படி எதற்காக வந்திருந்தாலும். கணவனின் எதிர்பாராத வரவு. சுரபியை நிலை குலையச் செய்து விட்டது!

தன்னையறியாமல் நாலெட்டுப் பின்னடைந்தவள். வீட்டின் உள்ளே வந்த கதிரவன். கதவைச் சாத்துவதை விரிந்த விழிகளால் பார்த்துக்கொண்டு திகைத்து நின்றாள்!

இவன். இப்போது எதற்காகக் கதவைச் சாத்துகிறான்?

நேற்றையப் பாடம் போதாது என்று எண்ணிவிட்டானோ?

கதவைச் சாத்திவிட்டுத் திரும்பிய கதிரவன் கண்டது. மனைவியின் மிரண்ட முகத்தையே!

சற்று நேரம் அவள் முகத்தைப் பார்த்தபடி அசையாமல் நின்றவன்.”உன்னை இந்த அளவுக்கா. பயப்பட வைத்துவிட்டேன்?” என்றான் வருத்தத்துடன்,

அவளை நோக்கி லேசாக உயர்ந்த அவனது கரங்கள். அவளது பார்வையில் கூடுதலான கவனத்தில் தாழ்ந்தன,

“உன்னுடன் பேச வேண்டும், உறுதியாக. ஒன்றும் பண்ண மாட்டேன், பயப்படாமல் வா,” என்று. அவனது அறையைக் கையால் காட்டிவிட்டு முன்னே நடந்தான்,

தயக்கத்துடன் தொடர்ந்து சென்று பார்த்தால். ஜன்னல் அருகே

வெளிப்புறமாகப் பார்த்துக்கொண்டு நின்றான் அவன்,

அவளது அறையைப் போலக் கடற்கரைக் காட்சி. இருளில் கப்பல் வெளிச்சம் எதுவும் இங்கே தெரியாது என்பது. அவளை புதிதாக உறுத்தியது, வெளியே. வேறே எதைப் பார்க்கிறான்?

அல்லது. அவளது முகத்தைத்தான் பார்க்கப் பிடிக்கவில்லையோ என்று வருத்தத்துடன் யோசித்தாள் சுரபி,

இல்லை, அப்படி இராது, அவளது முகத்தைத் தவிரப் பார்ப்பதற்கு. அறையில் எத்தனையோ அழகான பொருட்கள் இருக்கின்றனவே! அவைகளைக் கூடப் பார்க்கலாமே!

அவனது முகத்தைக் காட்டாதிருக்கத்தான் இந்த முயற்சி!

அவ்வளவு பயங்கரமாக என்ன சொல்லப் போகிறான்? விவாகரத்தா? கடவுளே!

கணவனின் முதுகை வெறித்தவாறு சுரபி இறுகி நிற்க. கதிரின் குரல் கேட்டது,

“நேற்றுப் போல நடக்காமல். நூறு சதவீதமாகப் பார்த்துக் கொள்கிறேன், சத்தியமாய்! அந்த மடத்தனத்தை ஒதுக்கி. இனிமேலும். இங்கேயே இருப்பாயா?” என்று. தாழ்ந்த குரலில். தெளிவாகக் கேட்டான் கதிரவன்!

திகைத்துப் போய்க் கணவன் முதுகை வெறித்தாள் சுரபி,

சொந்தக் காதுகளின் கேட்கும் திறனிலேயே சந்தேகம் வந்தது. அவளுக்கு, மெய்யாகவே. அவள் சரியாகத்தான் கேட்டாளா?

தொடர்ந்த சிறு அமைதியின் பின். அவன் மறுபடியும் பேசினான்,”என்னால் முடியவில்லை சுபி. உன்னைப் பாராமல் ஒரு நாள் கூட என்னால் இருக்க முடியாது! அதை இந்த ஒரு நாளில். நன்றாகப் புரிந்துகொண்டேன்! வீட்டுக்கு வந்தால். நீ இருக்கமாட்டாய் என்பதால். இங்கே திரும்பி வரவே பிடிக்கவில்லை, நிலா மட்டும் இங்கே இல்லை என்றால். நிஜமாக வந்திருக்கவே மாட்டேன்! ஆனால் இங்கே வந்து. நீ

வீட்டில் இருக்கிறாய் என்று தெரிந்ததும். உலகமே நேராகிவிட்டது. தெரியுமா? தயவு பண்ணி இங்கேயே இருந்துவிடு. சுபி, உன் ...உன் விருப்பம் மீறி. இங்கே எதுவும் நடக்காது! நீ என்ன சொன்னாலும் கேட்கிறேன், வாழ்க்கை பூராவும் வெறும் நண்பர்களாகவே இருப்போம் என்று நீ சொன்னாலும்கூட. இத்தனை நாள் போல. என்னை. நான் எப்போதும். கண்டிப்பாகக் கட்டுப் படுத்திக்கொள்வேன், முடியும், தூக்கு

நிச்சயம் என்று தெரிந்தால். எவனாவது கொலை செய்வானா? பெரிய தண்டனையாக. உன்னைப் பிரிய நேரும் என்று தெரிந்த பிறகும். உனக்குப் பிரியமில்லாததை. நான் எப்படிச் செய்வேன்? பிரிவு என்கிற அந்த ஒரு தண்டனை. என்னைப் பெட்டிப் பாம்பாய் அடக்கிவிடும், தலைக்குமேலே அந்தக் கத்தி தொங்கிக் கொண்டிருக்கும்போது. என்னால் எப்படித் தப்பு செய்ய முடியும்? ...............................................”

காய்ச்சல் வேகத்தில் பிதற்றுகிறவன் போலக் கதிரவன் பேசப் பேச. சுரபி பிரமிப்புடன் கேட்டுக் கொண்டிருந்தாள், நடந்தவற்றுக்கு. இப்படி ஒரு விளக்கம் கூட இருக்கிறதா?

ஏதோ அடைத்தாற்போலத் தொண்டையைச் செறுமிக்கொண்டான் கதிர்,

மேலே அவன் பேசுவதை. உன்னிப்புடன் கேட்டாள் . அவன் மனைவி,

“உன் விருப்பம் எதுவானாலும். இனி அதுதான். இங்கே முக்கியம், என்ன சுபி. நான் சொன்னதையெல்லாம் நம்புகிறாய்தானே? நம்பி. தயவு பண்ணி. இனி இங்கேயே இருப்பாயா?” என்று ஏக்கத்துடன் கேட்டான். அவன்,

ஐய்யோ! முழுக்க முழுக்க நிஜமாகத்தான் சொல்லுகிறான்! குரலில் எவ்வளவு ஏக்கம்? தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு இருந்தானாமே! அவள் நேர் எதிராக. என்னவெல்லாம் நினைத்து. என்னமாய் நொந்தாள்! நடந்தது எல்லாமே. இப்போது. அவளது மடத்தனமாகப் பட்டது!

“போகச் சொல்லித்தான் பாருங்களேன்!” என்று. செல்லச் சிணுங்கலுடன் துள்ளிக்கொண்டு வந்த குதூகலக் குரல் தன்னதுதானா என்று. சுரபிக்கே ஐயமாக இருந்தது!

அவளுடைய கணவனுக்கு அதை விட ஆச்சரியம் போலும்!

ஜன்னலில் இருந்து கதிர் திரும்பிய வேகத்தில். சற்றுக் குட்டையாக வெட்டப் பட்டிருந்த அவனது சிகை கூடத். துள்ளி விழுந்தது!

திரும்பியவன் சந்தேகத்தோடு. அவளது இரு விழிகளையும். மாறி மாறிக் கூர்ந்து பார்த்தான்,

பார்வை தளராமல் நின்றவள் சன்னமாகச் சிரிக்கவும். அதையே அழைப்பாகக் கொண்டவன் போல. அருகில் வந்து. மனைவியின் முகத்தைக் கைகளில் ஏந்தி. இன்னமும் ஆழ நோக்கினான்,

அவளது புன்னகை விரிந்தது,

“சுபி! சுபி. நீ நிஜமாகத்தான் சொல்லுகிறாயா? முழு நிஜம்தானே? சும்மா. நிலாவுக்காக ... வேறு எதற்காகவும். சும்மாச் சொல்லவில்லையே! ப்ராமிஸ்?”

அவன் குரலில் இருந்த தவிப்பு தாக்க. அவளது கன்னங்களை ஏந்தியிருந்த கைகளை அழுந்தப் பற்றி.”காட் ப்ராமிஸ்!” என்றாள் அவள் மென்மையாக

“கடவுளே!” என்று அவளைச் சட்டென இறுக அணைத்தான் கதிரவன்,

தாபத்துடன்”சுபி சுபி என்று உருப்போட்டவன். ஏதோ நினைத்து. அவளை உடனே விடுவித்தான்,

ஆனால். கை வளையத்துக்குள்ளேயே நிறுத்தி.”நிறையச் சொல்ல வேண்டும். சுபி, ஆனால். எல்லாவற்றையும். எனக்கு இவ்வளவு பக்கத்தில் இருந்துதான் கேட்க வேண்டும் சரிதானா?” என்று கேட்டான்,

முன் போலவே முறுவலித்து.”தள்ளி நிறுத்தித்தான் பாருங்களேன் என்றும் சொல்ல வேண்டுமா?” என்று அவள் குறும்புடன் கேட்க. அவன் பக்கெனச் சிரித்தான்,

“கேட்டால் சந்தோஷமாகத்தான் இருக்கும்! ஆனால். இந்தக் கேள்வியும் அதே மகிழ்ச்சியைத் தருவதால். இப்போதைக்கு. இதுவே போதும்!” என்றான் கதிரவன் திருப்தியோடு,

ஆனால் உடனேயே முகம் மாற.”பேசுவதற்கு வேறேயும் நிறைய இருக்கிறதே. சுபி! அதெல்லாம் முடித்தால்தானே. முழு நிம்மதி?” என்று தொடங்கினான்,

“முதலில். நேற்று நடந்ததற்கு. என் மிருகத்தனத்துக்கு என் முழு மனதோடு மன்னிப்புக் கேட்டு விடுகிறேன், என் மாமாவுக்கு நீ பணம் கொடுத்தாயே சுபி. கொடுத்ததை வாங்கிக்கொண்டு. அவர் சத்தமின்றிச் சும்மாப் போனார் என்றா நினைக்கிறாய்? இல்லவே இல்லை சுரபி! வாங்கின பணத்துக்கு. யார் மனதையாவது நோகடிக்காமல். அவரால். எப்படிப் போக முடியும்? நேரே என்னிடம் வந்து. பணத்தை விரித்து அடுக்கி. விசிறிக் காட்டிப் பெருமையடித்துவிட்டுத்தான் போனார ,”நீ விரட்டினாலும் விடாமல். உன் வீட்டுக்குள்ளேயே. பீராய்ந்துவிட்டேன். பார்!” என்று ஆயிரம் ரூபாய் நோட்டுகளை. விசிறி. விசிறிக் காட்டினார், பணத்தை வீணாக்கக் கூடாது என்று. எனக்குப் பாடம் எடுத்த நீயா இப்படிச் செய்தாய்? ஒரு வார்த்தை என்னிடம் கேட்க வேண்டாமா என்று கொதித்தது எனக்கு, உடனே புறப்பட்டு வந்தால். ஆத்திரத்தை அடக்க முடியாது போய் விடுமோஎன்று. முடிந்தவரை தாமதமாகத்தான்

கிளம்பி வந்தேன், ஆனாலும். என் சீற்றம் கொஞ்சமும் குறையவில்லை! பிரச்சினை புரியாமல். நீயும் ஏதேதோ சொல்லவும். அப்போதிருந்த கண் மண் தெரியாத கோபத்தில் ....................................................................."

"கோபத்தில் நிலை தடுமாறி. செய்வது அறியாமல் செய்துவிட்டீர்கள், அவ்வளவுதானே? புரிந்துகொண்டேன், விட்டுவிடுங்கள்," என்றாள் மனைவி இதமாக,

ஆனால். அவன் அதை ஏற்கவில்லை, அதற்கு வேறு விளக்கமும் கொடுக்க வேண்டியிருந்தது. அவனுக்கு, ஒரு தரம் குறுக்கும் நெடுக்குமாக நடந்துவிட்டு. அவளிடம் திரும்பி வந்தான்,

"அது அப்படியல்ல. சுபி, முதலில் உன் தோளைப் பற்றியது கோபத்தில்தான், ரொம்பக் கோபம்! சொன்னேனே. அது போலக் கண்மண் தெரியாத சீற்றம்! ஆனால். உன்னைத் தொட்டதும் ................. தொட்டதுமே. அந்த நிலை மாறிவிட்டது! எஎன்னென்னவோ ஆசைகள் தோன்றலாயின, இந்த மூன்று மாதங்களாக ..... திருமணம் ஆனதில் இருந்து. சிரமப்பட்டு அடக்கி வைத்த ஆசைகள் எல்லாமே கண்டபடி. கட்டு மீறத் தொடங்கி விட்டன, ஆனால். உன் கண்களிலோ. அதை விரும்பாத ... இப்படி ஆகிவிடக் கூடாதே என்பது போலத் தோற்றம்! ஆனால். உன்னை விட்டு விலகவும் முடியவில்லை! தாங்க மாட்டாமல். என் தவிப்பை. அப்படி மாற்றி. உன்னை நோகடித்துவிட்டேன், அடித்து உதைத்தால்தான் கொடுமையா? நான் உலுக்கியது. அதை விட வலித்திருக்குமே! சாரிம்மா!"

வலிதான், ஆனால். எவ்வளவு துல்லியமாக அவள் மனதைப் புரிந்து கொண்டிருக்கிறான்!

ஆனால். மற்றபடி ... ? அவளைப் பற்றி. அவன் அறிந்துகொள்ளவே இல்லையே!

வியப்புடன் நோக்கி."இதில். இவ்வளவு தெளிவாக உணர்ந்தவர். மற்றபடி. கொஞ்சமுமா. புரிந்து கொள்ளவில்லை? நம்பாத மாதிரி ....ஏன் என்னை வெறுத்த மாதிரி நடந்தீர்கள். கதிர்?" என்று கேட்டாள் அவள்,

அவசரமாக மறுத்தான் அவன்,"இல்லை. சுபி! ஒரு நாளுமே. உன்னை நான் வெறுத்தது கிடையாது! ஆனால். முழுதாக நம்பவும் முடியவில்லை, அழியாத. அழிக்க முடியாத ஒரு சந்தேகம். எப்போதும் இருக்கத்தான் செய்தது! பணக்காரப் பெண் நல்லவளாக இருக்கவே முடியாது. என்று. எனக்கு ரொம்பவே நிச்சயம்! நீயும் பணக்காரி! உனக்கும். அதே பணக்காரப் பெண்புத்திதானே இருக்கும் என்ற உறுதி! நீ வேறு மாதிரி இருக்கக் கூடும் என்று என்னால் ஒப்ப முடியவில்லை! நீ நல்ல

விதமாகவே நடந்தாலும். எப்போது அந்தப் பணக்காரப் பெண் புத்தியைக் காட்டப் போகிறாயோ என்று கவனமாகக் கண்காணித்துக் கொண்டே இருந்தேன்! ஆனால். ஒரு முடிவைச் செய்துகொண்டு ஆராய்ந்தால். அதற்குச் சாதகமாகத்தானே. எல்லாம் தோன்றும், உட்கார்ந்தால் குற்றம்,. நின்றால் தப்புதானே?"

அவனது பேச்சில். ஒரு முக்கியமாக நூலைப் பிடித்தாள் சுரபி,

"அதென்ன "பணக்காரப் பெண் புத்தி". கதிர்? இந்த எட்டு ஆண்டுகளுக்கு முன். அங்கே.  ரிசார்ட்டிலும். அது போலவே. நீங்கள் சொன்ன நினைவு நன்றாக இருக்கிறதே! என்ன விஷயம்ப்பா? இத்தனை ஆண்டுகளா மறக்க முடியாதது என்றால். பெரிதாகக் காயம் பட்டிருப்பீர்கள் போல?" என்று விவரம் கேட்டாள்,

"ரொம்பப் பெரிய காயம்தான்!" என்று. உடனே ஒப்புக் கொண்டான். கதிரவன்,

பிறகு."  .......... முதலில், உட்கார். சுரபி, நானே. உன்னிடம் மனம் விட்டு. நிறையப் பேச வேண்டும் என்றுதான் இருக்கிறேன்! எல்லாமே, ஒளிவு மறைவு என்று. ஒன்றுமே இல்லாமல்!" என்று அவளை சோஃபாவில் அமர வைத்துத் தானும். அவள் அருகில் ஒட்டி அமர்ந்து கொண்டான்,

அத்தோடின்றி. அவளது கையையும் பற்றித் தன் பிடியில் வைத்துக்கொண்டு."பணக்காரர்கள் என்றால். எனக்குக் கொஞ்சம் அலர்ஜிதான். சுபி, அதன் காரணம். தந்தை குடும்பம் அம்மாவையும் என்னையும் ஒதுக்கி வைத்ததாக எண்ணியதால் ...  அதைப் பிறகு சொல்கிறேனே, முதலில் பணக்காரப் பெண் பற்றிப் பார்ப்போம்! பணக்காரப் பெண் என்றால். நெருப்பை மிதித்த மாதிரி உணர்வுதான் எனக்கு! நீ மிக எளிதாக ஊகிக்கக் கூடிய மாதிரி. அதன் காரணம் ஒரு பணக்காரப் பெண்ணேதான்!

"அப்போது என் தாயார் மறைந்த புதிது, தவியாய்த் தவித்துக்கொண்டு இருந்தேன், பயங்கரப் பசி வேறு! அம்மா இருக்கும் வரையில். எப்படியாவது. எதையாவது வயிற்றில் திணித்து விடுவார்கள், பள்ளிக்கும் அனுப்பினார்கள், இப்போது. படிப்பு. உணவு எதற்கும் வழியில்லை,

"மாமா என் படிப்பை நிறுத்தி. மெக்கானிக் ஷெட்டில் வேலைக்கு அனுப்பினார், மற்ற பையன்கள் கல்லூரிக்குச் செல்லும்போது. நல்ல மதிப்பெண் வாங்கிய நான் இப்படி இருக்கிறேனே என்று அழுகையாக வரும், ஆனால். பதினேழு வயதில். நன்கு வளர்ந்து உயரமான ஆண்பிள்ளையாக இருந்துகொண்டு. அழவும் முடியாது,

“அப்போது. அந்த ஷெட்டுக்கு ரிப்பேர் பண்ண ஒரு  லான்சர் கார் வரும், அதில் ஒரு ..... பெண்ணும். அடிக்கடி வருவாள், என்னிடம் ..... ரொம்பப் பக்கத்தில் வந்து பேசுவாள், ராஜகுமாரன் மாதிரி இருந்துகொண்டு. இந்த வேலை செய்வதா என்று உருகுவாள்,

“சும்மாவே. இப்படி அழுக்கிலும். தூசியிலும். இருந்திருந்து நான் வேலை செய்வதா என்று வருந்திக் கொண்டிருந்த சமயம்! அவளும் இப்படிப் பேசவும். இந்த ரீதியில் அவளிடம் பேச. எனக்கும் ரொம்பப் பிடித்தது,

“அப்புறம் .....அப்புறமாக ஒருநாள். சுபி. இதனால் நீ என்னைத் தப்பாக நினைக்கக் கூடாது, அந்தச் சமயத்தில் என் வயது. கஷ்ட நிலைமை. மனதைப் பகிர்ந்துகொள்ள யாருமற்ற தனிமை எல்லாம் சேர்த்து எண்ணிப் பார்க்க வேண்டும்,  ...”

“செய்கிறேன்,” என்றாள் சுரபி, தொடர்ந்து.”ஆக. அவள் “ஐலவ்யூ” சொன்னாளாக்கும்!” என்று. மிகவும் சாதாரணமாக. அவளே கேட்டாள்,”நீங்களும் மயங்கி இருப்பீர்கள்,”

அவளை அதிசயமாகப் பார்த்து. ஆமாம் என்பது போலத் தலையாட்டினான். கதிரவன்,

தலையசைத்து.”ரொம்பத்தான் அதிசயப் படாதீர்கள். கதிர், இரண்டும். இரண்டும்          நாலு என்பது போல.[ இது. இப்போது ரொம்ப சாதாரணமாகிவிட்ட நடப்பு! ஆனால். வெறும் பதினேழு வயதிலா. உங்களுக்கு இந்தச் சோதனை! அதுதான் வேதனையாக இருக்கிறது!” என்று வருந்தினாள மனைவி,

“ஆனால். இதுவரை. இதில் ஒன்றும் ..... நீங்கள் முதலில் அந்தக் கதையைச் சொல்லி முடியுங்கள்!”

“இதற்கு மேல். அதிகம் இல்லை. சுபி, எனக்கும். அன்றைய நிலையில். அவளது பரிவும். அன்பும்  ........................... அன்பு என்றுதான் அப்போது நினைத்தேன்      அது சுகமாக இருந்தது, எல்லாக் கதைகளும்போல. இதுவும். அவளுடைய பெற்றோரின் கவனத்துக்குப் போயிற்று, காதல் என்று உறுதியாகச் சொல்லுவாள் என்று நினைத்தால். அவள் அப்பாவி மாதிரியும். நான்தான் வேட்டை நாயாக விரட்டியதாகவும் பல்டி அடித்து. அழுதாள். பார்!  அவ்வளவுதான், எல்லோருமாகத் தரும அடி அடித்தார்கள்,  ...”

“ஐயோ. கதிர்!”

“பின்னே என்னம்மா? ஊருக்கு இளைத்தவன். ஒன்றும் இல்லாதவன்தானே? அடுத்த இடியாக வேலை போயிற்று, அந்த

வீட்டுக்கு இச்சகமாக. மாமா வீட்டை விட்டு விரட்டினார், நன்றாக வளர்ந்திருந்தேனா? யாரும் என்னைப் பதினேழு வயதுப் பையனாகப் பார்க்கவில்லை! இரக்கமோ. உதவும் எண்ணமோ யாருக்கும் வரவே இல்லை, தப்பானவன். இவனுக்கு வேலை தருவதே பாவம் என்று நினைத்தார்கள், அப்போது பட்டினியால் நான் செத்துவிடாமலும். திருட்டு. களவு என்று தொடங்கி. ஒரு மோசமான குற்றவாளி ஆகிவிடாமலும். என்னைக் காத்தது. லலிதாக்காதான்!

“தற்செயலாக வந்தபோது என் கதியைப் பார்த்தவர்கள். கூடவே “ரிசார்ட்”டுக்கு என்னைக் கூட்டிப் போய்விட்டார்கள்!

“சொல்லு. பணக்காரப் பெண்ணை நான் நம்புவது எப்படி? நீயும் பணக்காரப் பெண் அல்லவா? திருமண நிச்சயமே நடந்த பிறகும். ஏதோ ஒரு நேரத்தில். திருமணத்தை நிறுத்தி. நீ என்னை அவமானப்படுத்தி விடுவாய் என்று. எனக்குக் கிட்டத்தட்ட நிச்சயம்! மணமாகும் வரை நீ ஒன்றும் செய்யவில்லை எனவும். அப்பாடா என்றிருந்தது, ஆனால். அன்று இரவு. என் பாரத்தையெல்லாம் உன்னிடம் இறக்கி வைக்கும் தவிப்போடு வந்தபோது. அவகாசம் கேட்டு. நீயும் என்னை விலக்கி வைத்தாய்! எனக்கு ஒரு காரணம்தான் தெரிந்தது, நான் வேறு என்ன எண்ணட்டும். சொல்லு?”

கை உயர்த்தி. அவன் முகத்தை வருடிக் கொடுத்தாள் சுரபி,”சாரிம்மா!” என்றவள் தன் காரணத்தை எடுத்துச் சொன்னாள்,

“உங்களது இந்தப் பின்னணி தெரியாமல். என்னைப் பற்றி அறிவதற்கு அவகாசம் கொடுப்பதாக நினைத்தே முதலில் அப்படிக் கேட்டேன், அப்புறம். நிலாவுக்காக மணந்திருக்கிறீர்கள்,. மற்றபடி என்னைப் பிடிக்காததை. கோபம். குறை காண்பது. மறைமுகக் குத்தல் மூலம் காட்டுகிறீர்கள் என்று நினைத்தேன், ......................................................”

குறைப் படாமல் சாதாரணமாகச் சொல்ல வேண்டும் என்று நினைத்தாலும். குரலில் வருத்தம் தொனிப்பதை. அவளால் தவிர்க்க முடியவில்லை,

ஆனால். அதற்குள் அவன் உருகிப் போனான்,”சாரிம்மா,. சாரிம்மா!” என்று. தோளோடு சேர்த்தணைத்துத் தட்டிக் கொடுத்தான்,”நான் உன்னைச் சந்தேகப்பட்டிருக்கவே கூடாது!”

இன்னொன்று தோன்ற. சுரபி கேட்டாள்,”ஆமாம் கதிர். நேற்று கண் மண் தெரியாத கோபம் என்றீர்களே! அதற்காக அவ்வளவு ஆத்திரம்? கஷ்டம் என்று வந்த உங்கள் மாமாவுக்கு. ஏதோ தொழில் வைத்துப் பிழைப்பதற்காகத்தானே. பணத்தைக் கொடுத்தேன்? அதற்குப் போய்.

அவ்வளவு சினம் காட்டவும். என்னை விரட்டுவதற்கு வழி தேடினீர்களோ என்று கூட எண்ணிவிட்டேன், அதற்குச் சரியாக. அம்மா வீட்டுக்குப் போகச் சொல்லவும் ...”

“இரண்டும் வேறு வேறு. சுரபி!” என்றான் கதிரவன் அவசரமாக,

தோளிலிருந்து தொடங்கி. வலிக்கு இதம் போல அவளது கரத்தை லேசாக அமுக்கி விட்டபடி. கதிரவன் சொன்னான்,”நிலாவுக்குத் தலை வாரி விடும்போது. ஒவ்வொரு அசைவும் உனக்கு வேதனையாக இருப்பது புரிந்தது, அங்கே என்றால். ஓய்வெடுப்பாய், அத்தோடு. என்னிடம் எனக்குமே. அப்போது நம்பிக்கை அழிந்து போய்விட்டிருந்தது, இன்னொரு தரம். இப்படித் தப்புச் செய்ய மாட்டேன் என்று என்ன நிச்சயம்? அதனால்தான் போகச் சொன்னேன் ,” என்று விளக்கினான் ,

சட்டென முகம் மலர்ந்தாள் சுரபி,”ஓ! எல்லாம் எனக்காகச் செய்ததுதானா? பாருங்களேன். உண்மை தெரியாமல். இதைப்போய்த் தப்பாக நினைத்துவிட்டேன்! தப்பாக எண்ணியதற்கு. சாரிப்பா! அப்புறம். அந்தக் “கண் மண் தெரியாத கோபம்” ? அதையும் சொல்லி விடுங்கள், இந்தக் குழப்பம். விளக்கம் எல்லாம் முழுதாக முடிந்து போகும்!” என்று. சலுகைக் குரலில் புன்னகையுடனேயே. மற்றதன் விவரம் வினவினாள் மனைவி,

ஆனால். கதிரவனின் முகம் சட்டென இருண்டு போயிற்று,

உட்கார்ந்திருக்கக் கூட முடியாதவன் போல எழுந்தவன். சில வினாடி. விறைத்து நின்றான்,

கை விரல்கள் முஷ்டியாக மூடி மூடித் திறப்பதையும். பெரிய மூச்சுகளால் தன்னைச் சமனப்படுத்திக்கொள்ள அவன் முயற்சிப்பதையும் பார்த்துவிட்டு. சுரபி. தானும் எழுந்தாள்,

“அவர் என்ன செய்திருந்தாலும். போகிறார் என்று விட்டுவிடுங்கள். கதிர்! எப்படியும். அவர் உங்கள் தாய்மாமா அல்லவா?” என்று அவன் கரத்தை வருடி. ஆறுதல்படுத்த முயன்றாள்,

“தாய்மாமாவா?” என்றான் கதிரவன். கசப்பும் வெறுப்பும் மிகுந்த குரலில் ,

அவனது வேதனை தோய்ந்த முகத்தைப் பார்த்துவிட்டு.”வேண்டாம். கதிர், அதையும் விட்டுவிடுங்கள், உங்கள் அன்புதான் எனக்குப் புரிந்துவிட்டதே, அதற்கு மேல் விளக்கம் எதற்காக? வேண்டாத வலிகளை மறப்போம்,” என்றாள் இதமாக,

அவன் மறுப்பாகத் தலையசைத்து.”இல்லை சுபி,. இதையும் நீ தெரிந்து கொள்வதுதான் நல்லது, உலகில் எவ்வளவு மோசமான மனிதர்கள் இருக்கிறார்கள் என்பது. உனக்கும் தெரிய வேண்டும், இன்னொரு தரம். அந்த மாதிரி மனிதர்களால் உன்னை ஏமாற்ற முடியாது. பார்!” என்றவன் ஒரு பெரிய மூச்செடுத்துக்கொண்டு. மறுபடி தொடங்கினான்,

“அந்த மனிதர் மேல் எனக்கு ஏன் அவ்வளவு வெறுப்பு தெரியுமா. சுரபி? என் தாயை. அவள் அறியாமலே. முப்பதாயிரம் ரூபாய்ப் பணத்துக்கு விற்ற பாவி. அவன்!”

“கதிர்!” என்று அலறிவிட்டாள் சுரபி!

நீண்ட கண்களில் வலியுடன். கதிரவன் தொடர்ந்தான்,”உண்மை. சுரபி! உன்னைப் போல. அம்மாவும் பேரழகி, அம்மாவின் அழகில் ஆசைப்பட்டு. அவளை அனுபவிக்க மட்டுமே ஆசைப்பட்டான் ஒருவன், என் பிறப்புக்குக் காரணமான பாவி. அவன், அம்மா அதற்குச் சம்மதிக்க மாட்டார்கள் என்று தெரிந்ததால். கோயிலில் திருமணம் போல நாடகமாடி. பெரும் பணம் .....அந்த நாளில் முப்பதாயிரம் பெரும் பணம்தான், அதைப் பெற்றுக்கொண்டு. அம்மாவை அந்த ஆளிடம் சேர்த்துவிட்டான். அவளுடன் பிறந்த பாவியான என் மாமா, மூன்று மாதங்கள் முட்டாளின் சொர்க்கத்தில் அம்மா சந்தோஷமாக இருந்திருக்கிறார்கள், அவனுக்கு ஆசை தீர்ந்துவிட்டது, அம்மாவை மாமாவிடம் அனுப்பிவிட்டு. ஆள் காணாமலே போய்விட்டான், அம்மா செய்த தப்பு. அவன் சொன்னபடி. கருத்தடை மாத்திரைகளைச் சாப்பிடாமல் இருந்துவிட்டது, பாவம்! நல்ல திருமணம் என்று நினைத்து. வாரிசுக்கு ஆசைப் பட்டார்கள் போல! ...ச்சு! அந்த மாத்திரைகளை தின்றிருந்தால். இப்படி ஒரு பாவப் பிறவி பிறக்காமல் போயிருப்பேன்!”

பிறக்காமலா?

திடுக்கிட்டுப் போய். அவனை இறுக அணைத்து.”நீங்களா. பாவப் பிறவி? ஒரு போதுமில்லை! நீங்கள் பிறக்காமல். இருந்திருந்தால். நான் என்ன ஆவது?” என்றாள் சுரபி

அணைப்பில் கட்டுண்டு. சற்று நேரம். அப்படியே நின்றான் அவன்,

பிறகு. மீண்டும் பேசத் தொடங்கினான்,

“என் அம்மா எப்படி இறந்தார்கள். தெரியுமா. சுரபி? என் அப்பன் கிராதகனைத் தேடும்படியும். அவனது விவரங்களைக் கேட்டும். தன் உடன் பிறந்த அந்த வியாதியை. அம்மா அடிக்கடி கேட்டிருக்கிறார்கள்,

தானும் ஏமாந்துவிட்டது போல நடிப்பு வேறு  நடித்திருக்கிறான்! அம்மாவும் நம்பி. அவன் குடும்பத்துக்கு உழைத்துக் கொட்டியிருக்கிறார்கள், பதினெட்டு ஆண்டுகள் கழித்து. தற்செயலாக அந்த ராஸ்கலைப் பார்த்திருக்கிறார்கள், பின்னோடு ஓடிப் பேசியிருக்கிறார்கள், முதலில். அவனுக்கு அடையாளமே தெரியவில்லையாம், பிறகு. மூன்று மாதத்துக்கு. முப்பதாயிரம் கொடுத்ததே ரொம்ப அதிகம் என்றானாம், அம்மாவுக்குப் பேரதிர்ச்சி! அப்போதும் நம்பாமல். தன் அண்ணனைத் தாங்கிப் பேசினார்களாம், ஆனால்.”அந்தத் திருமணம் தொடர்பாகவோ. தன்னை இனம் காணும் விதமாகவோ. உன் வீட்டில் ஏதாவது இருக்கிறதா? ஓர் இணுக்குக் கூட இல்லாமல் அழிப்பதற்காக. அத்தனையையும் கொண்டுவந்து என்னிடம் கொடுத்ததே. அவனேதான்!” என்று அந்தக் கொடியவன் சொல்லவும். அம்மா அப்படியே உடைந்து போனார்கள், அதற்குப் பிறகு. அவர்களுக்கு உடம்பே கெட்டுவிட்டது, எல்லாம் லலிதாக்காவிடம் மட்டும் சொல்லி அழுதார்களாம், அதுதான். என் அவலம் பார்த்து. அவர்கள் என்னைக் கூட்டிப் போனது, ஆனால். அவர்களது கடைசிக் காலத்தில் சொன்னார்கள்,”

எப்படி ஆறுதல் சொல்வது என்று புரியாமல். அவனை இதமாக வருடி விட்டபடியே சுரபி பேசினாள்,”லலிதாம்மா வேறு சொன்னார்கள், அதற்கே வருத்தப் பட்டிருக்கிறேன், ஆனால். இது  .............எப்படித்தான் தாங்கினீர்களோ?” என்றாள்

“கொஞ்சம் கௌரவமாகத் தோன்றும் என்று. என்னையும். அப்படித்தான் சொல்லச் சொன்னார்கள், ஆனால். உன்னிடம் உண்மை மட்டுமே கூற நினைத்தேன், இப்போது. மாமா விஷயம் எல்லாம் உனக்கு நன்றாகப் புரிகிறதல்லவா? என் கோபம் நியாயம்தானே? அதுவும். நான் உனக்காக கொடுத்த பணம். அது! அதைப்போய். அந்த மனிதருக்குக் கொடுப்பதா? தெய்வத்துக்கு என்று எடுத்து வைத்ததை சாக்கடையில் போட்டுவிட்ட மாதிரி. எனக்குக் கொதித்துப் போயிற்று!”

சுரபியின் விழிகள் மேலும் மேலும் அகன்று விரிந்தன, அவளை என்ன மாதிரி இடத்தில் வைத்திருக்கிறான்!

“என்ன? கண்ணாலே கபளீகரம் பண்ணுவது எப்படி என்று செய்து காட்டப் போகிறாயா? அவ்வளவு அகலமாக விரிக்கிறாய்? என்ன விஷயம்? புதிதாக என்ன அதிசயம்?”

“உங்கள் அன்புதான்! அதுதானே. இன்று புதிதாகக் கிடைத்திருக்கிறது?”

“எட்டு ஆண்டுப் பழசைப் போய்ப் புதிது என்கிறாயே! கணக்கில் என்ன மார்க் வாங்குவாயோ. தெரியவில்லையே?” என்று. கதிரின் உல்லாசக் குரல் கிண்டலடித்தது,

சிரிப்புடன்.”ஏ ...ய். இந்தக் கதை வேண்டாம், அப்போதெல்லாம்தான். அந்தப் பணக்காரப் பெண் பாதிப்பில். என்னைக் கண்டாலே விரட்டுவீர்களே. அப்புறம் என்ன எட்டு ஆண்டு பழசாம்?” என்று நினைவூட்டிக் கேட்டாள் சுரபி,

“சுரபி அல்லவா? கொடுக்கத் தெரிகிறதே தவிர. யாருக்குக் கொடுக்கிறோம் என்றும் தெரிவதில்லை கொடுத்தது நினைவும் இருப்பதில்லை, எழிலரசிக்கு ஐயாயிரம் ரூபாய் கொடுத்தாயே. அது ஞாபகம் இருக்கிறதா? என்ன வாங்குவது. எப்படி அணிவது என்று ஒன்றும் தெரியாமல். கண்டதை வாங்கி அணிந்து. அலங்காரம் செய்து. தப்பானவள் போலத் தோன்றிவிட்டாள், அதன் விளைவுதான் சொன்னேனே! லலிதாக்காவுடைய பேத்தி என்பது ஒரு காரணம் என்றாலும். உன் பணத்தால் நேர்ந்த தவறுக்குத் தார்மீகப் பொறுப்பேற்றுப் பரிகாரம் செய்வதாகவும் எண்ணித்தான் நிலாவை வளர்க்க முடிவு செய்தேன் ,என்ன? மறுபடியும் கண்ணால் கபளீகரமா? ரொம்ப ஆச்சரியப்படாதே, அப்புறம். முகத்தில் கண்ணைத் தவிர ஒன்றுமே இராது! சிலது. ரொம்பவே தேவைப்படும்!” என்று அவளது இதழ்களில் பார்வையைப் பதித்தான் கதிர்,

முகம் சிவப்பதை அடக்க முயன்றபடி.”என்னவோ உங்களுக்கு மட்டும்தான் பாதிப்பு போலப் பேசுகிறீர்களே! இங்கே என் பாதிப்பு. வீட்டில் எல்லோருக்குமே தெரியுமே! அண்ணன் முதலிலேயே கண்டு பிடித்துவிட்டான் அதன் விளைவுதான் நம் திருமணமே!” என்று பெருமையடித்தாள் சுரபி,

“என்னது? என்னது என்று கணவன் வியந்து கேட்க. தன் “இன்னும் கொஞ்சம் உயரம்”. “பெரிய கண்”. “வரிசையான பல்” எல்லாம் எடுத்துரைத்தாள் சுரபி,

“ஓஹோஹோ! அப்படியா?” என்று காலரைத் தூக்கிவிட்டுப் பெருமையாகச் சிரித்துவிட்டு. ஓரமாகக் கிடந்த சிறு மேஜை மீதிருந்த தன் செல்ஃபோனை எடுத்து மணி பார்த்தான் கதிரவன்,

“ரொம்ப நேரம் பேச்சிலேயே கழிந்துவிட்டது போலத் தெரிகிறது, நான் அதிகம் படிக்காவிட்டாலும். கணக்கில் கெட்டிக்காரன். சுபி! ரொம்பக் கறாரும் கூட! ஏற்கனவே. மூன்று மாத பாக்கியைச் சமன் செய்ய வேண்டியிருக்கிறது, இன்னும் வெறும் பேச்சில் அதிக நேரத்தை

வீணாக்க முடியாது!”

கண்டிப்பான குரலுக்கு நேர் விரோதமாக. அவனது கண்கள். உள்ளார்ந்த சிரிப்பில் பளபளத்தன,

சுரபியின் ஓரக் கண் பார்வையிலும் அதே இளநகை!

“என்ன சிரிப்பு?”

“ஏதோ சமன் செய்ய வேண்டும் என்று அளந்துவிட்டு. அங்கேயே நின்றால் எப்படியாம்?”

“அப்படிப் போடு! ஆனால். இன்னுமொரு விவரம் தெரிந்துகொள். அம்மணி! இப்படி ஓர் அழைப்புக்காகத்தான். இத்தனை நாள் கா ..... த்துக் கிடந்தேனாக்கும்!” என்று ஆவலாக அருகில் வந்து. அவளை ஆசையாக அள்ளிக்கொண்டான் அந்த அன்புக் கணவன்!